ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௬	மெய்கண்டான்யாண்டு-௭௱௫ ஆவணித்திங்கள் 1928 ௵ ஆகஸ்டு௴—செப்டம்பர்௴	பரல் ௮

திருச்சிற்றம்பலம்

தந்தையார் போயினார் தாயரும் போயினார்
　　தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
　　கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா
　　லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
　　டஞ்ச னெஞ்சே. (சம்பந்தர்)

உரை:

‘அறிவில்லாத நெஞ்சமே! தந்தையா ரென்பவரும் இறந்துபோகின்றார்; தாயாரென்பவரும் இறந்துபோகின்றார்; இனிப் புதல்வ ரெனப்படுவாரும் அவர்களைப்போலவே பின்னொருகால் இறந்துபோவாரா யிருக்கின்றார். சினக்கொதிப்புடைய வேற்படையைக் கையிலே கொண்டு கூற்றுவனைச் சார்ந்த ஒரு கூட்டத்தார், மக்களெல்லாரையும் நமனுலகிற்குக் கொண்டுபோவதற்கு எதிர்பார்த்துக் கொண்டே யிருக்கின்றார். அவர்கள் என்றேனும் ஒருநாள் ஒவ்வோருயிர்களையும் அவை யிருந்த உடல்களினின்றும் வேறுபிரித்து எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். ஆகவே அஞ்சற்பாலதான இந்நிலையில்லா உலகத்தில் எந்த நாளிற்றான் நீ நிலையாய் வாழ்தற்கு எண்ணம் வைத்திருக்கின்றனை!

அவ்வெண்ணம் எந்த நாளிலும் உனக்கு நிறைவேறாது. ஆனாலும், நெஞ்சமே! இதற்காக நீ மதிமயக்கங்கொண்டு சிறிதும் அஞ்சாதே; அழகிய தண்ணளியினை நிரம்ப உடைய நம் அன்புள்ள திருவாரூர் இறைவனை வணங்கி எப்படியேனும் பிழைத்துவிடலாம்'

எனவே, கூற்றுவன் கையிற் சிக்காமல் நிலையாய் வாழலாமென்பது; அஃதாவது பிறப்பிறப்புக்களில் அகப்படாமல் என்றும் ஒரு படித்தாய் இறைவனின்பங்கொண்டு நிலையாய் வாழ்வதென்க.

முதன் மூன்றடிகளினாலும் உலகவாழ்க்கையின் நிலையாமைகாட்டி, அதன் வாயிலாக உலகத்து மக்கள் எவருமே ஒருவருக்கொருவர் தக்க துணைவராகாரென்பதனை உணரவைத்து ஆசிரியர் அச்சுறுத்தினார்.

“செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்”

என்று அப்பர் பெருமானும் அதனை நன்கு விளங்க அருளினர். 'தாமும்' என்பது 'தந்தை, தாய்' என்னுங் குறிப்பினாற் 'புதல்வ'ரை யுணர்த்திற்று. கொந்த 'கொந்தழல்' என்பதிற் போலச் சினக் குறிப்பின்கண் வந்தது. “குருத்தமுன் கோபம் வெம்பல் கொந்தலே கனிதல் கோம்பல்” என்னுஞ் சூடாமணி நிகண்டினாலும் (அ: ௬௩) இவ்வுண்மை பெறப்படும். 'போயினார்' 'போவார்' என்பவற்றின் காலங்கள் கருத்து நோக்கிக் கொள்ளற்பாலன. ஆல், அசை.

அந்தண் என்பதில் 'அம்' இனிமையையும், 'தண்' அருளினையும் உணர்த்துகின்றமையால், 'அந்தண்' என்பது அன்பும் அருளும் ஒருங்கு விரவி யெழுவதோர் இறைவனியல்பினை யுணர்த்தும். இறைவனைச் சுட்டி 'ஆரூர்' ஆகுபெயராய் நின்றது. இவ்விறுதி யடி முதன் மூன்றடிகளாலும் விளைந்த அச்சத்தினின்றும் நீங்கிக் கடவுள் நெறி கடைப்பிடித்து வழியாக உய்யுமாறு முறை காட்டிற்று. நெஞ்சம் இருமுறை வந்தது அன்பிரக்கக் குறி.

அதிகமான்

[திரு. கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் M.A., M.L.]

அதிகமான் நெடுமானஞ்சியென்னும் வள்ளலைப்பற்றி இங்குச் சிறிது ஆராய்வோம். இவனுக்குக் குடும்பப் பெயர் எழினி என்றுங் கூறுவர். இவன் பரணரால் அகம் ௩௭௨-ற் பாடப்பட்டமையாலும், பெருஞ்சேரலிரும்பொறை காலம்வரை இருந்தமையாலும் இவன் நெடுங்காலம் அரசியற்றியவனாவன். மாமூல

னாரால் மத்தி வென்றதாகக் கூறப்பட்ட எழினி இவன் மரபைச் சார்ந்த முன்னோன்போலும்! அகம் ௧௯௭-ல் மாமூலனாரால் குறிக்கப்பட்ட கண்ணன் எழினி என்பவனும் இவனுக்கு முன்னவனே யாகும். இவன் வமிசத்தைச் சார்ந்த எழினியென்னும் மற்றொருவன் பிற்காலத்தே தலையாலங்கானத்து நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டான். இவன் குதிரைமலைக்குத் தலைவன். சேர பரம்பரையைச் சார்ந்தவன். அரசர் எழுவரை வென்று அவர்க்குரிய உரிமைகளைப் பெற்றவன். இவன் தொண்டைமான் இளந்திரையன் என்பானிடத்து ஔவையாரைத் தூது விடுத்தவன். இவனுடைய ஊர் தகடூர். இவனைச் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை வென்று கொன்று இவன் ஊரைப் பிடித்தான். பரணருக்குப் பின் இவனைப் பாடிய புலவர்கள் பொன்முடியாரென்பவரும் ஔவையாரும். பொன் முடியார் பாடிய பாடல்கள் புறம் ௨௯௯, ௩௧௰, ௩௧௨. ௨௯௯-ல் முருகன் கோட்டத்தை இவர் குறித்துள்ளார். ௩௧௰-ல் புதல்வர்க்குச் சிறுகுடுமி வைக்கும் வழக்கம் அறியக் கிடக்கின்றது. அஞ்சிலாந்தை மகள் நாகையா ரென்னும் பெண் புலவர் அதிகமானெடுமானஞ்சியை அகம் ௩௫௨-ற் பாடியுள்ளார். அதியனவிண்ணத்தனா ரென்பவர் அஞ்சியின் சுற்றத்தாராய் அகநானூற்றுட் செய்யுட் செய்த புலவருளொருவர்.

அதிகமானஞ்சியை மிகுதியும் பாடியிருப்பது ஔவையார். இன்னும் அவர் அவன் மகன் பொகுட்டெழினியையும், நாஞ்சில் வள்ளுவனையும், தொண்டைமானையும் பாடியுள்ளார். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு இவைகளிலும் இவர் பாட்டுகள் காணப்படுகின்றன. இவர் தம்மை விறலியாகத் தோன்றும்படி பாடல்கள் பாடியுள்ளார். அதுபற்றிப் பாணர் மரபினரென்பாருமுளர். அங்ஙனம் பாடுதல் ஓர்வகைப் பாமரபு என்று கொள்பவர் அக்கருத்தினைக் கொள்ளார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்கள் செய்தது இவர் தாமோ வென்பது ஓர் ஐயப்பாடு. அவை பாடிய ஔவையார் கம்பர் காலத்திருந்ததாகக் கேட்கின்றோம். கம்பர் காலத்திற்கும் சங்க காலத்திற்கும் இடையிலே ஆயிரம் ஆண்டுகட்கு மேலாக இருக்கும். அன்றியும் பின்னுள்ள நூல்கட்கும் தொகை நூலிற் காணும் ஔவையார் செய்யுட்களுக்கும் சொல்நடை வேறுபாடு பெரிதும் உண்மை காண்க. இனி ஔவையார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் வாழ்ந்திருந்து அவர் கயிலாயஞ் சென்றகாலை அவர்க்கு முன்னாக விநாயகப் பெருமானால் கயிலைக்கு ஏற்றப்பெற்றதாகக் கூறும் வழக்கமும் உண்டு. இதற்குத் தக்க ஆதாரம் இல்லை. அங்ஙனமாயின் கம்பர் காலத்தில்

அவர் நிலவுலகத்தில் வாழ்ந்திருத்தல் கூடாது. ஆகவே கம்பர் காலத்திருந்த ஒளவையார் மற்றொருவர் என்பது தெளிவு.

ஈண்டுக் கடைச்சங்க காலத்திருந்த ஒளவையார் செய்யுட்களே ஆராயற்பாலன. புறம் ௨௬௬-ல் அதிகமான் பரிசில் நீட்டித்ததற்காக வாயிலோனைச் சினந்து பாடியவிடத்து மரந் துணிக்கும் மழுவுடைய தச்சனுக்குக் காட்டகத்து யாண்டுச் சென்றாலும் அக்காடு பயன்படுமாறுபோலத் தாம் எத்திசைக்கட் போனாலும் அத்திசையில் தமக்கு உணவு கிடைக்குமென்றனர்.

"எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"

என்றது காண்க. அதிகமானது வீரத்தையும் வண்மையையும் பல பாடல்களிற் புகழ்ந்தனர். புறம் ௯௰-ல் புலியை எதிர்க்கும் மான் இல்லையாதற்போலவும், வானிலெழுகின்ற ஞாயிற்றிற்கு முன் இருளில்லையாதற் போலவும், மணல் பறக்கவுங் கல் பிளக்கவும் நடக்கவல்ல பகட்டிற்குப் போதற்கரிதாய வழியில்லையாதற் போலவும் அதிகமானை எதிர்க்கும் வீரர் இல்லையென்று குறிப்பித்தார். புறம் ௯௧-ல் அதிகமான் தமக்குப் பெரிய மலையினிடையில் அரிய கருநெல்லியின் உச்சியிற் பழுத்த கனியை அதன் அருமையையும் பெருமையையும் நோக்காது சாவு நீங்கும்படியாகத் தனக்குக் கொடுத்ததனால் நீலகண்டப்பெருமான் போல அவன் நீடு வாழவேண்டுமென்று வாழ்த்தினார். "பால் புரை பிறைநுதல் பொலிந்த சென்னி நீலமணி மிடற்று ஒருவன் போல் மன்னுக" என்றது காண்க. இதனால் இவரது சிவனடிப் பேரன்பு நன்கு விளங்கும். தன் மாட்டு அதிகமான் வைத்த கருணை மழலைச் சொல்லுடைய குழந்தைபாற் றந்தையருக்குள்ள அருள்போல்வதென்று வியந்து பாராட்டுமிடத்துத் 'தன்னுடைய சொல்லானது யாழிசைபோல இனிமையாயதுமன்று; அளவு நயமுடையதுமன்று; பொருட்பெற்றியுடையதுமன்று; மழலைபோல்வது' என்றமையால் இவரது நன்றியறிவுந் தாழ்மனமும் இனிது விளங்கும். அவன் பொருது புண்பட்டு நின்றகாலைப் பாடிய பாட்டுப் புறம் ௯௩. இதனுள் வாளிற் படாத மன்னரைத் தருப்பைப் புல்லிற் கிடத்தி வாளோச்சியடக்கஞ் செய்யும் நெறிச்செய்கை குறிக்கப்பட்டது. புறம் ௯௪-ல் பெரிய யானையானது தன்பால் நெருங்கி விளையாடுஞ் சிறு பிள்ளைகளைத் துன்புறுத்தாது நிற்றல்போலத் தம்மைப் போல்வார்க்கு அதிகன் இனியனென்றும், பகைவர்க்கு அக்களிறுபோல இன்னாதவன் என்றுங் குறிப்பித்தார். இவன் ஒளவையாரைக் காஞ்சிநகரிலிருந்த தொண்டைமான்பால் தூது

விடுத்தனன். தொண்டைமான் ஒளவையார்க்குத் தனது படைக் கலக் கொட்டிலைக் காட்ட அவர் பாடிய பாட்டில் (புறம் ௯௫) தொண்டைமானுடைய படைக்கலங்களைப் புகழ்வதுபோலவும், அதிகமானுடைய படைக்கலங்களை இகழ்வதுபோலவுங் கூறி உண்மையாக முன்னையவற்றைப் புகழ்ந்தார். தொண்டைமானது படைக்கலங்கள் கொல்லனது கொட்டிலில் நுனி முறிந்து கிடப்பனவென்றுங் கூறியது காண்க. புறம் ௯௯-ல் அதிகமான் கோவலூரைப் பிடித்து வெற்றியடைந்ததைக் கூறுமுகத்தான் அவன் முன்னோர் சிறப்பையும் எடுத்துக் கூறி, அவன் நாட்டு வளப்பத்தையும், கரும்பினை முதன்முதல் அவன் முன்னோர் அவ்விடத்தே கொண்டுவந்தமையையும், அவன் ஏழரசரை வென்று பெற்ற அடையாளத்தையும் விதந்தோதிப் பாடுவார்க்குப் பாட அரியவனென்றும், பரணர் அவனைப் பாடியதாகவுங் கூறினர். புறம் ௱௧-ம் பாட்டினுள் அவனுடைய ஈகையையும், அவன் இரவலர்க்கு என்றும் இன்முகங் காட்டித் தப்பாது பரிசிலளிக்குஞ் சீரினையும் மிகவும் அழகாகப் புகழ்ந்துள்ளார்.

> "ஒருநாட் செல்லினும் இருநாட் செல்லினும்
> பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
> தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ."

அதிகமான் புதல்வன் பொகுட்டெழினியைப் புறம் ௯௬-ம் பாட்டினுள்ளும் ௱௨-ம் பாட்டினுள்ளும் பாடியுள்ளார். இவற்றுள் அவனது வண்மையைப் புகழ்ந்ததனோடு அவன் மகளிர் மணங்கவர் கண்ணினனென்றும், தன்கீழ் வாழ்வார்க்கு நிறைமதிபோன்றலின், துன்பமாகிய இருள் அவர்க்கு எக்காலத்தும் இல்லையென்றுஞ் செப்பினர். புறம் ௨௩௫-ம் பாட்டினுள் அதிகன் இறந்த நாளைக் குறித்துத் துயருறுமிடத்து அவனது அன்பின் செயல்களைப் பலபடப் பாராட்டியுள்ளார்! அவனது அரிய மார்பின்கண் தைத்த வேல் நுண்ணிய ஆராய்ச்சியுடைய அறிவாளிகளின் நாவில் விழுந்ததென்றார்.

'இனிப் பாடுவாரு மில்லை, பாடினர்க்கொன் றீவாருமில்லை; தண்ணறு மலர் நீர்த்துறைக்கட் சூடப்படாது கழிந்தாற் போலப் பிறர்க்கொன் றீயாது வீயும் உயிர் பல' என்றனர்.

ஒளவையார் வீரரது உண்டாட்டைப்பற்றி ௨௯௯-ல் கூறியுள்ளார். புறம் ௨௮௬, ஒரு சிறுவன் இறந்ததற்காக வருந்துகின்ற பாட்டாகத் தோன்றுகின்றது. இறந்த உடம்பைப் பாடையிற் கிடத்தலும், அதன்மேற் றூயவெள்ளாடை கொண்டு போர்த்தலும் இதனுட் கூறப்பட்டது. புறம் ௨௯௫-ற் போரிற்

சிறப்பெய்தி மாண்டதைக் கேட்ட ஒருவனது தாய்க்கு முலை சுரந்ததை வியந்தனர். அஞ்சியின் மகன் பொருட்டெழினியைப் பாடிய புறம் ௩௯௨-ற் பகைவரது நிலத்தைக் கழுதை பூட்டிய கலப்பையால் உழுதலும், வரகும் கொள்ளும் விதைத்தலும் கூறப்பட்டது. அவன் இரவலரது கந்தைத் துணியை நீக்கி உயர்ந்த கலிங்கம் கொடுத்து அவர்க்கு உயர்ந்த உணவு கொடுப்பதனையும் விதந்தனர்.

ஔவையார் நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய புறம் ௧௪௦-ல் ஏற்பார் தகுதியறிந்து பரிசிலளிக்காது தன் தகுதியை நோக்கிப் பெரிய யானையைக் கொடுத்தான் என்றார். அகநானூறு ௩௦௩-ள் மூவேந்தராலும் பாரியின் நகரானது முற்றுகையிடப்பட்டகாலை கபிலர் கிளிகளால் செந்நெற் கதிர்களைக் கொணர்வித்துப் பாரி குடிகட்கு உணவளித்தார் என்று ஔவையார் கூறியுள்ளார். நாஞ்சிப்பொருநனை ஒரு சிறைப் பெரியனாரென்பவரும் பாடியுள்ளார். இவரது பாடல்கள் குறுந்தொகையிலும் நற்றிணையிலும் வந்துள்ளன. புறம் ௧௩௭-ல் நாஞ்சின் மலையின் செழிப்பை இனிது பாடினர். அவனைப் பாடிய மற்றொரு புலவர் கருவூர்க் கந்தப்பிள்ளையென்பார். இவர் பாடல்கள் குறுந்தொகையிலும் வந்துள்ளன. இவர் புறம் ௩௮௦-ல் நாஞ்சிற் பொருநனது வீரத்தையும் வண்மையையும் பாடியுள்ளார். மருதன் இளநாகனென்பவரும் நாஞ்சில் வள்ளுவனைப் பாடியுள்ளார். இவர் பாடிய புறம் ௧௩௯ பாணாற்றுப் படையாகும். ௧௩௮-ம் இவர் பாடியதே.

பிட்டங்கொற்றனென்பவன் சேரமான் பெருஞ் சேரலிரும்பொறையின் படைத்தலைவன். சேரமான் அதிகமானை வென்ற காலை அவனது குதிரை மலையைச் சேரமான் அவனுக்குக் கொடுத்தார். இவனது வண்மையைப் புறம் ௧௬௮-ற் கருவூர்க் கந்தப்பிள்ளை மகன் சாத்தனார் பாடியுள்ளார். வடமவண்ணக்கன் தாமோதரனாரென்பவரும இவனது வண்மையைப் புறம் ௧௭௨-ற் பாடியுள்ளார். வண்ணக்கன் என்ற சொல் நாணய சோதனைக்காரர் என்று பொருள்படும். இவர் வட நாட்டினர்போலும்! தாமோதரன் என்பது திருமாலின் பெயர். இதுவே யேதுவாக இவரைத் திருமால் வழிபாட்டினரென்பாருமுளர்.

அதிகமானை வென்ற பெருஞ்சேர லிரும்பொறையை மோசிகீரனார் என்னும் புலவர் நன்கு பாடினர். புறம் ௫௦-ற் சேரமானது அரசுமுரசு வைத்திருந்த கட்டிலில் அப்புலவர் அறியாது துயின்றதைக் கண்டு சேரமான் அவனுக்கு ஊறு

செய்யாது அவன் தூங்கி யெழுந்திருக்கும் வரை கவரி கொண்டு வீசினதாகவும், அதற்காக அவனைப் புகழ்ந்து பாடியதாகவும் அறிகின்றோம். மோசிகீரனார் பாடிய புறம் கஅ௬-ல்,

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்று மன்னர் சிறப்பை யுணர்த்தினர். மோசிகீரனார் கொண் கானன் கிழான் என்பானைப் புறம் க௫௪, க௫௫, க௫௬-ற் பாடி யுள்ளார். புறம் க௫௬-ற் கொண்கானம் என்னும் மலையானது வண்மையையும் வெற்றியையுமுடையதென்று பாடியுள்ளார்.

சேரமான் பெருஞ்சேர விரும்பொறையைப் பதிற்றுப்பத் திற் பாடியவர் அரிசில் கிழாரென்னும் புலவர். இவர் ௬ நூறாயி ரங் காணம் சேரமானிடம் பரிசாகப் பெற்றவர். இவர்க்குச் சேரமான் தனது அரசிருக்கையையும் அரண்மனையையுமே கொடுக்க விரும்பினனென்பது தெரியவருகின்றது. அரிசில் என் பது சோழ நாட்டிலுள்ள அரியலூ ரென்பாருமுளர். இவர் வையாவிக்கோ பெரும் பேகனைப் பாடினரென்று முன்னமே குறிக்கப்பட்டது. புறம் க௪௬-ற் பேகனைப் பிற பரிசில்கள் ஒன் றுந் தான் கேளாததாகவும், கண்ணகியை மீட்டும் ஏற்றுக் கொள்ள அவன் புறப்படுவதையே தான் வேண்டிக் கொள்வ தாகவும் கூறியுள்ளார். புறம் உ௩௦-ல் இப்புலவர் அதிகமான் இறந்ததற்காக வருந்திக் கூற்றத்தை நோக்கி 'உழவன் வித்தினை உண்டதுபோல, உனக்குப் பல்லுயிர் கொடுக்கும் ஒருவன் உயிரை உண்டமையால், உலகத்து வறியரைப் பார்க்கிலும் நீ வறுமையடைந்தாய்' என்றனர்.

பெருஞ்சேர விரும்பொறைக்குப் பின் குடக்கோச்சேர விரும்பொறை அல்லது இளஞ்சேர விரும்பொறை யென்பவன் பதிற்றுப்பத்தில் ௯-ம் பத்திற்குத் தலைவனாய் விளங்கினன். ௯-ம் பத்துப் பாடியவர் பெருங்குன்றூர் கிழாரென்பவர். இவர்பாடல் கள் அகநானூற்றிலுங் குறுந்தொகையிலும் நற்றிணையிலும் வந் துள்ளன. இவர் பதிற்றுப்பத்திற்காக ௩௨ ஆயிரங் காணப் பரி சில் பெற்றார். இவர் கரிகால் வளவனின் றந்தையாகிய உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் புறம் உ௬௬-ற் பாடின ரெனில் இவர் நெடுங்காலம் நிலவுலகத்தில் வாழ்ந்தனராதல் வேண்டும். அல்லது இவர் பெயருடைய மற்றொருபுலவர் இளஞ் சேட்சென்னியைப் பாடியிருக்கவேண்டும். இவர் புறம் க௪௭-ற் கண்ணகி காரணமாகப் பேகனைப் பாடினர். குடக்கோச்சேர

விரும்பொறை பரிசில் நீட்டித்ததற்காகப் புறம் ௨௧௰-லும், ௨௧௧-லும் அவனைச் சினந்து தாம் விரைவில் அவனை விட்டுப் போய்விடுவதாகப் பாடியுள்ளார். அப்பாடல்களுள் இவரைக் கவலையொடு எதிர்பார்த்திருக்கும் இவனது மனைவி மக்களது நிலைமையை மிகவும் உருக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

“வல்சி யின்மையின் வயின்வயின் மாறி
யில்லெலி மடிந்த தொல்சுவர் வரைப்பிற்
பாஅ லின்மையிற் பல்பாடு சுவைத்து
முலைக்கோண் மறந்த புதல்வனொடு
மனைத்தொலைந் திருந்தவென் வாணுதற் படர்ந்தே”*

என்றது காண்க.

முருகப்பெருமான் கடவுட்டன்மை

[இளவழகனார்]

(௩௧௨ - ம் பக்கத் தொடர்ச்சி)

இனி இவ்வாறு ஞாயிறு எழும்பொழுது அதன்கண் விளங்கிய இறைவனது ஒளி விளக்கத்தைக் காணும் முதன் மக்கள் அவ்வொளியினைச் செவ்வொளியாக வன்றோ காண்பர். ஏனென்றாற் காலையிலெழூஉம் ஞாயிறு சிவந்த ஒளி விளக்கிச் செஞ்ஞாயிறாய்க் காணப்படுமாதலாலும், ஒளிகளெல்லாங் கட்புலனுக்குப் புலனாகவேண்டுமாயின் ஏதாமொரு நிறத்தைப் பற்றி அதன் வாயிலாகவே புலனாதல்வேண்டுமாதலாலும் ஞாயிற்றின்பாற் காணும் இறைவனொளிவிளக்கத்தினைச் செக்கச் செவேலென்னுஞ் செவ்வொளியாகக் காண்பாராயினரென்பது. இச்செவ்வொளி விளக்க மன்றி வேறொன்றும் அஞ்ஞாயிற்றின்கண் மூனைத்து விளங்கும் இறைவனியல்பாகப் பழந்தமிழ் முதன் மக்களாற் காண்டற்கில்லாமையின், அச்செவ்வொளி விளக்கமே இறைவனது உண்மை யுருவென்றும், அதனாலாம் பயன்படு செயல்களே இறைவன அருட் செயல்களென்றும், அம்மக்களாற் றுணியப்படலாயின. கண்ணெதிரே காணப்படும் உலகியற் பொருள்களையெல்லாம் எத்துணைதான் துருவித்துருவி எத்துணைக்காலம் எத்துணை நுண்பேரறிவு பெற்று மக்கள்

* புறம், ௨௧௧.

ஆராய்வாராயினும், இறைவனுண்மையைப் பற்றிய மேலுண்மையையே முடிந்த பொருள்களாகத் தேர்வரல்லாது இக்கண்கொண்டு வேறு காண்ட லியாண்டு மியலாது. இஞ்ஞான்றுவரை வேறு கண்டு விளக்கினாரு மியாரு மிலர். கடவுளை நேரே காணும் அருந்தவமும் பேரருட் பேறும் பெற்று விளங்கிய ஆசிரியர் திருஞானசம்பந்தப் பெருமான் முதலான ஆரருட் பெரியார்களின் தெய்வக் காட்சியைப் பற்றி இங்கேதும் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களெல்லாரும் அருள் நிலைக் கண்ணராய் வைகி அருட்பார்வை யொன்றே யுடையாராதலின் அவர்கள் நீங்கலாக ஏனையுலகியன் மாந்தரிலே அறிவு நிலைக் கண்ணராய் வைகி அறிவுப் பார்வையுடைய ஆராய்ச்சி மக்களைப் பற்றியே இங்கெடுத்துப் பேசப்பட்டதென்க. இனி அத் திருஞானசம்பந்தப் பெருமான் முதலாயினாருங் கூடத் தாங்கண்ட தெய்வக் காட்சியினைச் செந்நிறமாகக் கண்டு மகிழ்ந்ததாகவே ஒரு வாய் பட்டாற்போல் உரை நிறுவி யருளினார்கள். ஆகவே இது காறுங் கூறியவாற்றாற் பண்டைத் தமிழ் முதன் மக்கள் தங்கண்ணெதிரே காணப்படும் எல்லா உலகியற் பொருள்களினுள்ளும் விராஅய் மறைந்து அவை தம்மை யியக்கும் அசைவுப் பொருளான முழுமுதற் றெய்வத்தை எத்தனையோ பாடுபட்டு மிக முயன்று ஞாயிறு எழும்பொழுது அதன்கண் விளங்கி ஒளிவிட்டிலகுஞ் செவ்வொளியிற் கண்டு மகிழ்ந்தனரென்பது பெறப்பட்டது. பெறப்படவே அஞ்ஞாயிற்றின் செவ்வொளியினையே இறைவனாகக் கண்டு வணங்கத் துவங்கினர்.

இவ்வாறு அக் காலை ஞாயிற்றுச் செவ்வொளிப் பிழம்பே உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையுந் தோற்றிப் பேரழகிலே கவினச் செய்திருத்தி உயிர்கட்குப் பயன்படுவித்துப் பின் மறைத்திடும் அருட்செயல் புரிதலை நாடோறுங் காணப்பெறுந் தமிழ் நன்மக்கள் பண்டைக் காலந்தொட்டு இன்றைக் காலம் வரை அச்செவ்வொளிப் பிழம்பினையே இறைவனாய் வைத்து வணங்குதலில் மாறாத ஒரு கோட்பாட்டினராய் உறைத்து நிற்கின்றார். இஞ்ஞான்றுங் கூடக் குறுஞ்செடிகள் நிறைந்து பனி தாங்கித் தளிர்த்துப் பச்சைப் பசேலென்று விளங்குங் காடு நடுவண் நின்று அங்ஙனமே தளிர் தோற்றி முத்துநீ ரெதிர்ந்து வெண்படாம் மூடிய செடிப் போர்வை போர்த்த மலையடுக்குகளின் குவட்டிடைத் தோன்றுஞ் செஞ்ஞாயிற்றின் செவ்வொளியினையும், எக்கர்க் குவியலும் புன்னையஞ் சோலைப் பொற்றுகட் பூக்களுந் தாழையின் மடலுங் கானற் கழிகளும் இயலமைந்து காணுங் கடற் கோட்டினின்று நீல நீர்ப் பாயல் விளிம்பின் கீழ்மலைக் கோட்டத்துச் செங்கேழூட்டிய அடுக்கு வெண் மேக

மெத்தைப் படாங் கலைத்து நீக்கிக் காலையிலெழூஉங் கதிர்ஞ் ஞாயிற்றின் முதிர் செவ் வொளியினையும் மகிழ்ந்து நோக்கி அவ் வொளியினால் மிளிரும் நாற்புறக் காட்சியினையும் அப்பொழுதே நோக்கி உற்று உணரும் எவர்க்கும் அச்செங்கே ழொளியின் இயற்கை விளக்கமே முழுமுதற் கடவுளின் அருள் விளக்கமாகு மென்பது புலனாகா நிற்கும். இவ்வுண்மை யியற்கை விளக்கத்தி னியல்பினையே,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி"*

என்று திருமுருகாற்றுப்படை முகப்பில் அதனாசிரியர் நக்கீரனார் உரைத்ததூஉ மென்க. இனி அச்சேண் விளங்கும் அவி ரொளிப் பரப்பியல்பினை முல்லைப்பாட்டாராய்ச்சி யுரையா சிரியர்,

'இதனை விரித்துக் காட்டு மிடத்துப் பேரழகாற் சிறந்த ஓர் அரசி தான் மேற் போர்த்திருந்த நீலப்பட்டு ஆடையினைச் சிறிது சிறிதாக நீக்கிப் பின் அதனைக் கீழே சுருட்டி எறிந்து விட்டுத் துயில் ஒழிந்து ஒளி விளங்கு நளி முகங் காட்டி எழுதல் போல இருட் கூட்டங் குவிந்து மழுங்கி அலைகடலிற் சென்று அடங்கும்படி இளைய ஞாயிறு உருக்கித் திரட்டிய பசும்பொற் கோளம் போலத் தளதள வெனக் கீழ்த்திசையில் தோன்றவும், அத்திசையின் பரப்பெல்லாம் பொன் உரைத்த கற்போற் பொலிந்து திகழவும், பசுமை, பொன்மை, நீலம், சிவப்பு, வெண்மை முதலான நிற வேறுபாடுள்ள உலோகங்கள் உருகி ஓடுகின்ற நிலம்போல வான் இடமெல்லாம் பல வண்ணமாய் விரிந்து விளங்கவும், கரியமேகங்களெல்லாம் செவ்வரக்கு வழித்த அகன்ற திரைச் சீலைகள் எனவும், வெளிய மேகங் களெல்லாம் பொற்பட்டுப் படாம் போலவும் ஆங்காங்குச் சொல்லுதற்கரிய பேரொளியோடு திகழவும் உலகமங்கை நகைத்தாற் போலப் புதுமை யுற்றுத் தோன்றும் விடியற்கால அழகு'†

என்று விளக்கிக் கூறும் உரைப் பகுதியினால், ஞாயிற்றின் செவ்வொளி விளக்கப் பரப்பு இறைவனது அருள் விளக்கப் பரப்பே யாகுமென்பது புலப்பட்டு விளங்குதல் காண்க.

* திருமுருகாற், க-௩. † முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பக், ௨.

இனிப் பொழுது புலர் போதில் விண்ணின்றெழூஉம் ஞாயிற்றின் செவ்வொளிப் பிழம்பினையே இவ்வாறெல்லாங் கடவுளென்று துணிந்த தமிழ்மக்கள் தாமும் அக்கடவுட்கொரு பெயரிட்டழைக்க விழைகுவாரன்றே! அங்ஙனம் விழைந்தார் தாங்கண்ட அச்செந்நிறப் பெயரையே தங்கடவுட்குப் பெயரா யமைத்தனர். எனவே "சிவப்பு" என்பது தமிழ் நன்மாந்தரின் கடவுட் பெயராகும். இச் சிவப் பொன்றைத் தவிர வேறொன் றையுங் கடவுட் குறியாக உலக வியற்கையில் எஞ்ஞான்று மெவருங் கண்டாரு மில்லையா மன்றே! நீலம் முதலான ஏனைய நிறங்களும் உளவாலோவெனின், அவை யாவுஞ் சிவப்பைப் போலப் பெருகித் தோன்றுவாய் அச்சிவப்பினுள் அடங்கி மறைந்தே ஆழ்ந்து நோக்குவார்க்கு மட்டும் அரிதின் தோன் றுவவா யிருப்பவாதலால், அச்சிவப் பொன்றினைக் கண்டார் நீலம் முதலிய ஏனையவற்றையுங் கண்டாரே யாவரென்று கொள்கவென்பது. இவ்வாறெல்லாம் தங்கண்ணெதிரே காணப் படும் உலக வியற்கைப் பொருள்களெல்லாவற்றையும் பண் டைத் தமிழ் நன் மாந்தர் வடித்து வடித்துச் சாறெடுத்தாற் போற் கடவுளென்று துணிந்தெடுத்துக் கொண்ட பொருள் 'சிவப்பே' யாகும்.

இனிச் சிவப்பென்பதும் ஓரறியாமைப் பொருளாதலின், அதனை யுடைய அறிவுப் பொருளான இறைவன் அதனை யுரு வாகக் கொண்டு அதனுள்ளிருக்கின்றன னென்பதும், இத் துணையும் மிக நுட்பமாய்க் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து தெளிந்த தமிழ் மக்கட்குத் தேற்றமேயாமாதலால், அவனை அவர் அச் சிவப்புருவின் வழியாகவே வைத்துச் 'சேயோ' னென்னும் பெயர்கொண்டழைத்து வழிபாடாற்றுவாராயினர். இதுவே தமிழ்மொழியிற் கடவுட்கென்று பண்டைத் தமிழ் முதன் மக் களா லிடப்பட்ட முதற் பெயராகும். 'சேயோ' னென்னும் இத்தூய தமிழ்க் கடவுட் பெயரே நாள் பல ஆண்டு பல செல் லச் செல்லச் 'சிவ'னென்று மக்களாற் கொள்ளப் படுவதாயிற்று. எனவே 'சிவனென்னுந் தூய் தமிழ்ச் சொல்லுக்குச் 'சேயோ' னென்பதே உண்மைப் பொருளாமென்பது பெறப்படும். இவ் வாறெல்லாம் ஞாயிற்றின் தோற்றங்கண்டு அதன் செந்நிறத் தன்மையுணர்ந்து அந்நிறப் பெயராற்றான் தமிழ் மக்கள் கட வுட்குப் பெயரிட்டழைத்தாரென்னும் உண்மை, "முருகவேளைச் செவ்வே ளென்றது 'ஞாயிறு கடற் கண்டா அங்கு' என் பதனு"* லென்று ஆசிரியர் அடியார்க்கு நல்லார் உண்மை

* சிலப், மங்கல, ௩௮.

கிளந்து கூறுஞ் சிலப்பதிகார வுரையிலே தெளித் தெடுத்தாற் போல விளக்கமாய்க் காணக் கிடக்கின்றது. மேலும், இச் 'சேயோ' னென்னுஞ் சொல்லே இற்றைக்கு ஐயாயிரத்து ஐஞ் ஞூறு ஆண்டுகட்கு முன்னேயிருந்த ஆசிரியர் தொல்காப்பியனு ராலும் "சேயோன் மேய மைவரை யுலகமும்"* என்று எடுத் தாளப்பட்டிருக்கின்றது. அவ்வாசிரியர் காலத்துக்கு எத் தனையோ ஆயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தமிழ் நாட்டில் அச் 'சேயோ' னென்னுங் கடவுட் பெயர் தோன்றி யிருத்தல் வேண்டுமென்பது முந்து தமிழிலக்கியம் பல முறையா யெடுத்து உலக வழக்கினோடு ஒத்திட்டுக் கண்டு அவ்வாற்றாற் றிருத்தி யமைக்கப்பட்ட தொல்காப்பிய விலக்கணச் செவ்வி ஒன்று கொண்டே நன்கு தெளியப்படும்.

இனி இச்'சேயோ' னென்னுங் கடவுட் பெயரினை ஞாயிற் றிற் கண்ட காலத்திற்குப் பின் அத்தமிழ்மக்கள் பின்னும் பின்னும் வாளாவிராரன்றே! ஆகவே அவர் அஞ்ஞாயிற்றுக்கு அடுத்தபடி திங்களைக் கண்டு அதன்கட் காணப்படுங் கடவுட் டன்மையினையும் உற்று நோக்குவா ராயினர். ஞாயிறுகண்ட காலத்தைவிடத் திங்களைக்காணும் இக்காலத்தில் அத்தமிழ் மக்கட்கு அறிவு முதிர்ந்து ஆழ்ந்து செல்வதாயிற்றாதலின், அவர் நிறம் நோக்கிக் கடவுட் டன்மையினை யறிவதை விடுத் துத் தொழில் நோக்கி யறிவான் றலைப்பட்டனர். இராக்காலத் திற் கானகத்தே தத்தங் குடில் வைகி யடங்கிய தமிழ்மக்கள் வானகத்தே நிமிர்ந்து நிலவினைக் காணும் பொழுது அவர் கட்குத் தோன்றற்பாலது எது? தங்கண்ணொளியினை மழுக்கி மறைத்த இருட்குழம்பினைச் சீத்து மாய்க்கும் பெருந்தொழி லன்றே தோன்றும்! இரவினிருட்டினை அறவே நீக்கித் தங் கண்ணறிவினை விளங்கச் செய்த ஞாயிற்றின் காலைச் செவ்வொளி கண்டு ஆராமகிழ்ச்சியிற் றிளைத்து அஞ்ஞாயிறு மறைந்த மாலைப் பொழுதில் 'இனியென் செய்வோ' மென்று காடு நடுவண் வாழ்ந்து ஏங்கியிருந்த பண்டைத் தமிழ் மக்கட்கு, உடனே இரவில் நிலவு தோன்றி ஆங்குப் பரம்பியிருந்த விருட்டினை மாய்த்து அவர்க்கவர் கண்ணறிவினைப் பைய விளக்கி நிற்கு மாயின், ஆ! அம்மக்கள் 'பகலெல்லாம் ஒளி கொடுத்த செவ் வொளிக்கடவுள் இவ்விரவு நேரத்துந் தோன்றி இவ்விருட்டினை மாய்த்து உதவி செய்கின்றதே' யென்று வியந்து அந்நிலவின் றொழிலையன்றே உடனே நினைவுக்குக் கொடுவந்து மகிழ்வர்.

---

* தொல், அகத்திணை, ரு.

ஆகவே அவ்விரவு நேரத்தில் நிலவின் மாட்டு அவர்காணும் கடவுட்டன்மை, பகலி லொளி கொடுத்தமை மட்டி லமையாமல் இரவிலும் அருள் சுரந்து இருட்டினை மாய்க்கும் அருட்டன்மை யேயாமாதலால், அம் மாய்த்தற் றொழிலினால் நிலவின் வாயி லாகத் தாங்கண்ட அக்கடவுட்கு 'மாயோன்' என்றும் அவர் பெயரிடுவாராயினர். 'சேத்தல்' கண்டு சேயோனென்று அவர் பெயரிட்ட வாறே, 'மாய்த்தல்' கண்டு மாயோனென்றும் அக் கடவுட்குப் பெயரிட்டமை இயற்கை யுண்மைக்கும் பொருத்த மானதே யாயிற்று. இவ்வாறு திங்களின் வாயிலாகப் பண்டைத் தமிழ்மக்கள் சேயோனென்னுங் கடவுட்கு மாயோனென்றும் பெயரிட்டமை, 'கொடிநிலை கந்தழி வள்ளி' யென்னுந் தொல் காப்பியப் புறத்திணையியனூற்பாவுக்குக் 'கொடி நிலை' வெஞ் சுடர் மண்டிலமென்றும், 'கந்தழி' மை தீர் சுடரென்றும், 'வள்ளி' தண்கதிர் மண்டிலமென்றும் உரைகூறிய விடத்து, அவைதாங் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமாதலான் அங்ஙனங் கண்ணிய வருந் தண் கதிர் மண்டிலமாகிய திங்கள் வாழ்த்துக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியரால் காட்டாக வெடுத் துக்காட்டப்பட்ட

> "பிறைகாணுங் காலைத்தன் பேருருவ மெல்லாங்
> குறைகாணு தியாங்கண்டு கொண்டு—மறைகாணு
> தேய்ந்து வளர்ந்து பிறந்திறந்து செல்லுமென்
> றுய்ந்தது நன்மாயை யாம்."*

என்னுஞ்செய்யுளிற் றொழில்கண்டுஇடப்பட்டுவரும்'மாயை' என் னும் பெயரினால் எட்டுணையும் ஐயுறவுக்கு இடனின்றித் தெளி யப்படுகின்றமை காண்க. இங்ஙனமே இவ்வுரையாசிரியர் கொடி நிலை யெனப்படும் வெஞ்சுடர் மண்டிலமாகிய ஞாயிற்றின் வாழ்த்துக்குக் காட்டாகக் காட்டிய 'மேகத்த' னென்னுஞ் செய்யுளில், அச்செய்யுளின் கருத்து முடிபாக 'நாணாத கண் எனக்கு நல்கு' என்று கண்ணொளி வேண்டிவருதலும் இங்கு உற்று நோக்கற்பாலது. ஞாயிற்றினை நோக்கி 'நாணாத கண் ணெனக்கு நல்கு' என்றதனால், அஞ்ஞாயிற்றின் மாட்டுத் தமிழ் மக்கட்கு உருவ நினைப்பே விரைந்தெழுந்த தென்பதும், அங் ஙனமே திங்களை நோக்கி 'ஆய்ந்தது நன்மாயையாம்' என்பத னால் அத்திங்கண் மாட்டுத் தமிழர்க்குத் தொழினினைப்பே எதிர்ந்தெழுந்த தென்பதுந் தெற்றெனப் புலப்படுகின்றமை யால், நம் பண்டைப்பெருமக்கள் ஞாயிற்றொளி கண்டுந் திங்கட்

---

* நச்சி. மேற்கோள், தொல், புறத், கூ.

டொழில் கண்டும் முறையே 'சேயோன்' 'மாயோன்' என்னும் பெயர்களைத் தாங்கண்ட முழுமுதலிறைவனுக்குச் சூட்டினரென்று இங்கு விரித்துரை கிளந்த பொருண் முடிபுகள் சற்றேனும் ஐயுறுதற் கிடனில்லாத உண்மைக் கருத்துரைகளாய் வலுப் பெற்று நிலைநிற்றலைக் கண்டுகொள்க வென்பது.

இனிச் 'சேய்' என்னுஞ் சொல்லே 'சிவ'மென்று பின்னைத் தமிழராற் கொள்ளப்பட்ட வாறே, 'மாய்' என்னுஞ் சொல்லும் 'மால்' என்று நாள் பல ஆண்டு பல சென்றபின் பின்னைத் தமிழராற் கொள்ளப்பட்டதென்க. ஆசிரியர் தொல்காப்பியனாரால் இம்'மாயோ'னென்னும் பெயரே 'மாயோன் மேய காடுறை யுலகமும்' என்றும், பிறவாறுமாகத் திருமாலுக்கு ஈரோரிடங்களில் தொல்காப்பியத்திற் கூறப்படுகின்றது. இங்ஙனஞ் 'சேயோன்' 'மாயோ' னென்னும் முன்னைத் தமிழரிட்ட கடவுட் பெயர்கள் முறையே 'சிவபிரான்' 'திருமால்' என்று பின்னைத் தமிழராற் கொள்ளப்பட்ட வரலாறும், அதன் பின் அவ்விரு வேறு பெயர்களும், இருவேறு கடவுளர்களையே குறித்துணர்த்துவனவாமென்று கடவுளை இருவராக்கி வேறுபடுத்தப்பட்ட வரலாறும், இங்ஙனங் கடவுளர் பலரென்று வேறு படுத்தப்பட்டமையால் முன்னைச்'சேயோன்' பின்னைச் சிவனுக்கு மகனாகவுந் திருமாலான "மாயோ' னுக்கு மருமகனாகவும் பிரித்துரைத்துப் பரிந்தழைக்கப்பட்ட வரலாறும், எனவே 'சேயோ'னுக்குத் துணைவனாகப் பிள்ளையார் தோன்றிய வரலாறும், 'மாயோன்' கண்ணனான வரலாறும் இன்னும் இன்ன பல இயற்கைக்கு வேறான வேறு வரலாறுகளும் மிகப் பெரிய. அவற்றையெல்லாம் வரலாற்று வழிநின்று அவை தாம் வேறுபட்டுவந்த உண்மைப்படியே எடுத்துரைக்கப் புகுந்தால் இது மிக விரியும். அது கிடக்க,

இனி ஞாயிறு எழூஉங்காலை அதன்கட்டோன்றும் இறைவனே, சேயோனென்னும் பெயரை யடுத்து 'முருக' னென்றும் அழைக்கப்பட்டான். முருகனென்பதுஞ் 'சேயோ' னென்பதும் ஒன்று. 'முருகு' என்னுஞ் சொல் 'சிவப்பு' என்னும் பொருளில் வருதலை அது பொன்னிறமான எலுமிச்சம்பழத்தை யுணர்த்துதற்கண் வைத்துணர்ந்துகொள்க. 'முருகு' எலுமிச்சைக்குப் பெயராதல் "சம்பீர முருகிரேடு சதாபல மெலுமிச்சைப்பேர்"* என்னுஞ் சூடாமணிநிகண்டினா லறியக் கிடக்கின்றது. பொன்னிறமான எலுமிச்சம்பழ வடிவும், காலையிலெழூஉஞ் செக்கர் ஞாயிற்றின் பொன்னுருண்டை வடிவும் ஒரே உரு

---

* சூடாமணி நிகண்டு, மரப்பெயர்த், ௬௭.

வினவா யிருத்தலை உற்றுணர்வார்க்கு 'முரு'கென்னும் பெயர் சிவப்பென்னும் பொருளுணர்த்திச் சேயோனைக் குறித்த வரலாறும் நன்கு விளங்கும். இங்ஙனமாக முருகென்னுஞ்சொல் சேயோனை யுணர்த்திப் பழைமையாயினபின் சேயோன் சிவனுக்கு மகனென்று கூறத் தொடங்கிய காலத்திலிருந்துதான் அம் முருகென்னுஞ் சொல்லுக்கு இளமை, அழகு, கடவுட்டன்மை, மணம் முதலான பொருள்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் நாள் பல ஆக ஆகத் தோன்றுவவாயின வென்க.

இவ்வளவும் இயம்பியவாற்றாற் பண்டைத் தமிழ் மக்களாற் 'சேயோ'னென்றும், 'மாயோ'னென்றும், பின்றைத் தமிழ் மக்களாற் சிவபிரானென்றுந் திருமாலென்றும் பெயரிட்டழைக்கப்பட்ட உலகுக்கொரு முதலான முழுப்பெருங் கடவுளே முருகப்பெருமா னாகின்றானென்பது வடித்திறுத்துப் பெறப்படும். சிவபிரானென்பவனே முருகனும், முருகனென்பவனே சிவபிரானுமென்னு மிவ்வுண்மையை,

"தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கண்மூன் றுடையதோர் கரும்பே
யனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமரசே கரனே
புனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகருமா றுகரே"*

என்று திருமாளிகைத்தேவர், தெளிவாக அருளிச்செய்தனர்.

இனிக் காலையிலெழூஉம் ஞாயிற்றின்கட் சென்று கண்டு பிடிக்கப்பட்ட முருகப்பெருமானைப் பற்றிப் பின் வந்த சான்றோர்கள் தத்தம் நூல்களிற் பலவாறுங் கூறியிருக்கின்றார்கள். எனினும் அவை யெல்லாவற்றினுள்ளும் ஈண்டைக்கு வேண்டுவ தொன்று குறிக்கற்பாலது. பொழுது புலர் காலையிற் கீழ்மலைக் கோட்டிலெழுந்து பொன் வண்ணமாய்த் தளதளவென்று செஞ்சுடர் வீசிச் சேண் விளங்குமாறு ஒளி விடும் அரும் பெருங் காட்சியினைக்கண்டு மகிழ்வார்க்கு ஆங்குச்சில உண்மைகள் புலப்படுகின்றன. ஞாயிற்றினொளி அப்போழ்து நாலாபக்கங்களும் மேலுங் கீழுமாக ஆறுபக்கங்களிலும் ஒளி காட்டுதலால், அஞ் ஞாயிற்றின்கட் கண்டு பிடிக்கப்பட்ட முருகனுக்கு ஆறுமுகங்களுண்மை கூறப்படுகின்றது. முகங்கள் ஆறானபின் கைகளும் பன்னிரண்டெனப்பட்டன. ஞாயிற்றினொளியினைக் கொண்டே அது மறைந்தபின் திங்களெழுந்து விளக்கந் தந்து இருட்டினை

* திருவிசைப்பா, 'ஒளிவளர்', எ.

மாய்க்கின்றதென்னும் உண்மையை யுணர்ந்த தமிழ்மக்கள் அத்திங்களை ஞாயிற்றினாற்றலாகவே (சத்தியாகவே) நினைத்தனராதலாலும், அவர் நினைத்தது போலவே ஆசிரியர் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியப் புறத்திணையியலுரையில் 'ஞாயிறு நெருப்பின் றன்மையும் ஆண்டன்மையுமுடைமையானும், திங்கள் நீரின்றன்மையும் பெண்டன்மையு முடைமையானு'* மென்று உரைகிளந்தாராதலாலும் அத்திங்கண் மாயை 'வள்ளி' யெனவும், ஞாயிற்றின்பால் அமைந்து கிடக்கும் இயற்கையொளி 'தெய்வானை' யெனவுங் கொள்ளப்பட்டன. ஞாயிற்றினொளியே தெய்வானையாதலால் அவள் மணஞ் செய்யப்பட்டனளென்றும், அஞ்ஞாயிற்றினொளியினை ஏற்று ஒளிருந் 'திங்க' ளொளி வள்ளியாதலால் அவள் களவொழுக்க வாயிலாகக் கானகத்தினின்று கூட்டிக்கொள்ளப்பட்டவ ளென்றும் புராணத்திற் காணப்படுகின்றது. இனி ஞாயிறெழுந்தவுடன் அதன் அவிரொளிபட்டுக் கடல்நீர் தனது நீலநிறத்தினைச் செவ்வையாய் விளக்கி விளங்கித் திகழுதலால், அக்கடல் நீர் பச்சை மயிலாகக் கருதப்பட்டது. நீரின் அலையசைவுகளால் அந்நீருட்டோன்றும் ஞாயிற்றொளி கண்கள் போல அசைந்தசைந்து அழகுபெறத் தோன்றுதலால் அவ்வியலழகு, மயிலின் நீலுடம்பினுந் தோகையினுமுள்ள கண்களே போலு மென்று நினைக்கப்படலாயிற்று. ஞாயிற்றின் செங்கதிரை வேலெனக்கொண்டனர். அது 'கதிர்வேல்' 'கதிரைவே' லென்றும் பெயர் பெறுவதாயிற்று. அச்செங்கதிர்களே முருகன் பன்னிருகையினுங் கொண்ட ஏனைப்படைகளுமாயின. ஆகவே கடற்கீழ்முகட்டிலெழூஉம் ஞாயிற்றின் காலைக் காட்சி, பச்சைப்பசும் நீன்மயின்மேல் வள்ளி தெய்வானைகள் இருமருங்கு மமரச் செவ்வொளி காட்டியெழூஉம் அருட்காட்சியாகும்.

இக்காட்சியினையே நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படையுரையிலே, 'கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும்போல மயிலிற்பசுமையுந் திருமேனிச்செம்மையுந் தோன்றலின்'† என்று உரைத்தார். இவ்வுண்மையினுணர்ந்தன்றோ அருணகிரிநாதருந் தமது திருவகுப்பிலே,

"உததியிடை கடவுமரகதவருண குலதுரக
உபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவி னிருளகல வொருசோதி வீசுவதும்"‡

என்று அருளிச்செய்ததூஉ மென்க.

---

* தொல், புறத், ௩௩. † திருமுருகாற், ௧-௩. ‡ சீர்பாத வகுப்பு.

கலித்தொகையிலொரு கதை

[கபசம் எழுதியது]

(சாஉ - ம் பக்கத் தொடர்ச்சி)

மணப்பருவ மெய்திய நங்கை, தான் பிறந்த விடத்திற் பெறுமின்பமே பெரிதென்று கருதி மகிழ்ந்திருப்பாளாயின், அவள் வாழ்க்கை நிறைவுடையதாகாது. பெற்றோரது அன்பும், உடன் பிறந்தாரது துணையும், உறவினரின் ஆதரவும் மிக விரும்பக்கூடியவையாயினும், இவற்றிலேயே மூழ்கிக்கிடந்து வாழ் நாளைக் கழிப்பது பொதுவாகப் பெண்மைக் கழகன்று. பிறந்த விடங்கடக்கும் நாளன்றோ, அவள் மகளாய்ப் பிறந்ததன் நோக்கங் கைகூடும் நாள்? பிறந்த விடங் கடத்தல் எளிதன்று. பாலூட்டி வளர்த்த அன்னையையும், பாராட்டி வளர்த்த தந்தையையும் விட்டுப்பிரிதல் எளிதாகாது. நிலம் பிளக்க வேரூன்றி, ஓங்கி வளர்ந்த பெருமரத்தின் கிளைகளிலொன்றைத்தறித்து, வேறிடத்தில் நட்டு வளர்ப்பதை யொக்கும், ஒரு மங்கையைப் பிறந்தவகத்திலிருந்து பிரித்துப்பிறிதிடஞ் சேர்ப்பது. ஆயினும், ஒரு மகள் மருமகளாகுந்துணையு மவள் பிறந்து வளர்ந்த நோக்கம் நிறைவேறுவதில்லை.

ஆங்கிலப் புலவர் தலைவராகிய ஷேக்ஸ்பியர் (Shakespeare) இயற்றிய லீயர் (King Lear) என்ற நாடகத்திற் குறிக்கப்படு மொரு உண்மை ஈண்டுக் கருதத்தக்கது. லீயர் என்ற கிழவரசன், முதுமையால் தளர்ந்து, தன் நாட்டைத் தனது மகளிர் மூவருக்கும் பகிர்ந்து கொடுக்க வெண்ணினன். இம்மகளிருள் மூத்தவ ரிருவருக்கு மணமாகியிருந்தது. இளையவளாகிய கார்டீலியா (Cordelia) வைக் கைப்பற்ற மன்னரிருவர் காத்திருந்தனர். கிழ வேந்தன் மகளிர் மூவரையுந் தன் முன்னழைத்து, “நீவிர் எத்துணையன்பு என்மீது செலுத்துகின்றீர் என்பதைத் தெளியப் பகர்மின். உங்களில் எவர் என்னை யாவரிலும் மேம்பட நேசிக்கின்றார் என்பதையறிய விழைகின்றேன்” என்று நவின்றான். இது கேட்ட மூத்த மகளிரிருவரும், தந்தையன்புக் கிணையாய்த் தாங்கள் மதிக்கக் கூடியதொன்று மிப்பேருலகிலில்லை யென்றும், தங்களன்பு உரையில் விரிப்பதற் கரிதென்றும் நயம்படப் பொய் புகன்றனர். இவ்வுரை கேட்டுப் பேருவகைகொண்ட வரசன், தனது இனிய இளையமகளைப் பார்த்து, “நமது செல்வச் சிறுமியே, உன் தமக்கையர் பெறப்போவதிலுஞ் சிறந்த பங்கைப் பெறுதற்கு, நீ யாது புகல்கின்றாய்?” என, அவள்,

"யான் கூறக்கூடியதொன்று மில்லை" என்று விடை யளித்தாள். சிறு மகளிடமிருந்து நயவுரை நனி எதிர்பார்த்த வேந்தன் மிகுதியும் வெறுப்புற்று, " கூறக்கூடியதொன்று மில்லையாயின், நீ பெறக்கூடியதொன்றுமில்லை யென்பதை யறிவைகொல்?" எனச் சினந்து கேட்டான். தன் தமக்கையர் சொன்ன படிற்றுரை கேட்டு நாணிய கார்டீலியா, "தந்தையே, என்னைப் பெற்றுவளர்த்த தங்களை எம்முறையில் யான் நேசிக்கக்கடமைப் பட்டேனோ அம்முறையில் நேசிக்கிறேன். இஃதுண்மை. என் தமக்கையருக்கு மணமாகியிருக்கிறது. எல்லோரினும் மேலாகத் தங்களை யவர்கள் நேசிப்பதுண்மையாயின், அவர்கள் எதற்காக மணஞ்செய்து கொண்டார்கள்?" என்று வினவ, மன்னன் வெகுண்டு, அவளுக்குத் தன் நாட்டிலொரு சிறு பகுதியுங் கொடாம லனுப்பிவிட்டான். கார்டீலியா மொழிந்த உண்மையைப் பொறுத மன்னன், பலவகையி லிடர்ப்பட்டு வருந்தித் தவித்து, இறப்பதற்குச் சற்றுமுன், அம்மாதுநல்லாளின் அரிய பண்பை நன் கறிந்தான்.

தாய் தந்தையரின் அன்பு சாலுமாயின், மணமென்பது ஒரு மகளுக்கு வேண்டுவதில்லை. காதலைப்பற்றிக் கடிந்து கூறுவது கல்விக்கழகென்று பிறழவுணர்ந்தவர் இதை ஆராய்வாராக. பிறந்த விடத்தினும் பெரிய விடமொன்றுமில்லையெனத் துணிந்தவள், தன்னை மறப்பதுமில்லை, தலைவனை யறிவதுமில்லை. இங்ஙனமே, பிறந்த விடத்தின் பற்றிற்சிக்கி, பெரிய விடம் போகும் வகையறியாது உயிர்கள் ஒடுங்கியிருக்கின்றன. பிறவித் தொடர்பை யறுக்கும் ஆற்றலுடைய காதலைப் புகட்டுமொரு உயர்மகன் தோன்றுமளவும், தாய் தந்தையரின் செல்வத்தையு மன்பையுங் காட்டிலு மினியதொன்றில்லை யென்று மயங்கியிருக்கும் மகளைப்போல், இறைவனருள் காணுமளவும் உலக வின்பத்தில் உயிர் ஆழ்ந்து கிடக்கும். உயிர்களெல்லாம் இறைவனிடமிருந்து தோன்றுவன ஆதலால், அவற்றிற்கு இளமையிலேயே அவனைப்பற்றிய உணர்ச்சி இயல்பாகவே யுண்டு. ஆனால் நாளாவட்டத்தில் பிற பற்றுக்கள் வளர்ந்து அதை யடக்கி யொடுக்குகின்றன. காதலாகிய பெரும்பற்று வந்து மங்கையின் அகத்தை நிரப்பிப் பிறந்த விடத்திலிருந்தவளை ஈர்த்துப் பிறிதிடஞ் சேர்க்குந் திறமறிந்து,

> "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளின் குறிப்புணர்க.

மணல் வீடு கட்டி விளையாடிச் சிறுமியர் குறும்பு பல செய்து சிரித்தவளும், காதிலுங் கழுத்திலுமிருந்த நகையிலுஞ் சிறந்த முத்து நகை வாயிலுடையவளாய்த் திகழ்ந்தவளும், முருகனை முனிந் தவன்மீது மண்ணை வீசி யெறியத்துணிந்தவளு மாகிய வள்ளி, பன்னீராண்டு நிறையப்பெற்று, முன்னினும்பன் மடங்கதிக வனப்பு மினிமையும் நிறைந்து, அடக்கமும் நாணமு முடையாளாய்ச் செய்வன திருந்தச்செய்து அகத்திலிருந்தாள். மாலைப்பொழுதில் வள்ளியின் கூந்தலை வாரி முடித்துப் பூச்சூடுங் கால், பல்லைக்கடித்துக் கொண்டு அன்னை கூறிய வன்மொழிகள் இனிப்பிறவா. திடு திடுவென நடந்ததற்காகவும், செம்பு, குடம் முதலியவற்றைத் தூக்கித் தடுமாறிக் கீழே போட்டதற்காகவும், அடுப்பிற் சோற்றைக் குழைத்ததற்காகவும், கறி கூட்டுவதில் உப்பைக் குறைத்ததற்காகவும், இன்னும் பலவற்றிற்காகவும் அன்னை வருந்திப் பகர்ந்த மொழிகள் நின்று போய் விட்டன. பெறுதற்கரிய செல்வத்தைப் பெற்றவர்போல், தாய் தந்தைய ரவளைப்போற்றி வளர்த்தனர். தன் அழகாலு மினிமையாலு மெல்லோர்க்கு முவகை யூட்டினுள். இங்ஙனம் வளர்ந்த வள்ளி, இளவயதில் தன் தோழனுயிருந்த முருகனை யறவே மறந்தாள். ஆனல் முருகனவளை மறந்து விடவில்லை.

உலகப் பொருள்களி னின்பத்தில் உயிர் செம்மாந்து கிடக் கும்போது, இறைவன் அதைத் தன்பா லிழுக்கமுயல்கின்றுன். வாழ்க்கையின் அடைவுகளாலதற்கு அறிவு புகட்டித் தன்னிட மதைத் திருப்பப்பார்க்கின்றுன். தன் அருளையுங் கோலத்தையு மதற்குக் காட்டிப் பழைய நினைவைப் புதுக்க முயற்சி செய்கின் றுன். பக்குவப்படாத வுயிர் இதை யறிவதில்லை. ‘உள்ளங்கவர் கள்வன்’ அவனென்பதை உணர்ச்சியில்லாத உயிர் எங்ஙனமறி யும்? இஃதெல்லாம் அகப்பொருளின் களவுப் பகுதியாகும்.

பிள்ளைப் பருவத்தில் நாம் இயற்கையழகி லீடுபட்டிருக்கு மாறு முதிர்பருவத்திலிருப்பதில்லை. கானும் பொழிலும் ஆலும் இளவயதில் நமக் கின்பமளித்தவாறு இப்பொழுதளிப்பதில்லை. நீரும் நிழலும் மணமும் நமதிளமனதை யூக்கியதை இப்பொழுது நினைத்துப் பார்த்தால், சிறுவர் நிலையிலிருந்து எவ்வளவு நாம் மாறியுளோமென்பது தெரிகின்றது. குழவி நிலையினின்றும் நாம் வேறுபட்டிருப்ப நன்மை பயக்குமோ தீமை பயக்குமோ வென்று இறைவனைத் தவிர வேறு யார் அறிவார்? பணப்பை யொன்றையும் பூக்கூடை யொன்றையுமொரு குழந்தையின் முன் வைத்தால், ஐயமின்றிக் குழந்தை பூக்கூடையையே நாடும். நாமோ பணப்பையையே நச்சுவோம். இதனுற் குழந்தையை

விட நாம் அறிவிற் சிறந்தவரென்று கூறல் ஒல்லுமோ? இயற்கை யழகிலீடுபடுவதா லொருவர் இறைவனின் மாட்சியை யறிய லாகும். இதனாற் குழந்தைகள் கடவுளை யணுகி நிற்கின்றா ரென்று கொள்வதுமுண்டு.

“நான் உன்னுடன் விளையாடித் திரிந்தபோது, நீ யார்? என்று உன்னை நான் கேட்கவில்லை. கூச்சமும் அச்சமுமின்றி நான் துள்ளித் திரிந்து நாட்கழித்தேன்.

அதிகாலையிலே எனது கூட்டாளிபோல் நீ வந்து, தூக்கத்தி லிருந்தென்னை எழுப்பி, காட்டிலுள்ள இடை வெளிகளுக்கு நேராக உன் பிறகே நான் ஓடும்படி செய்தாய்.

அந்நாளிலே, நீ எனக்குப் பாடிய பாட்டின் பொருளை நான் அறியவில்லை. ஆனால் அந்த இசையை நான் விடவில்லை; அவ் விசையின் சுவை, என்னுள்ளத்தைக் கூத்தாடச் செய்தது.

இப்பொழுது, விளையாடுங்காலம் முடிந்தபின், திடீரென்று என் கண்கள்முன் தோன்றும் இக்காட்சி யாது.?”

[இரவீந்திரநாத் டாகூர், கீதாஞ்சலி-97]

கூச்சமு மச்சமுமின்றி முருகனுடன் விளையாடித் திரிந்த வள்ளி, அவனை மறந்து, ஒருநாள் தன் அன்னையுடன் வீட்டி லிருந்தாள். யாரோ ஒருவன் வாயிலில் வந்து, “தாக மெடுக் கின்றது, தாங்க முடியவில்லை, தண்ணீர் சிறிது கொடுப்பீரோ?” என்று கேட்டது அவர்கள் காதிற்பட்டது. தாகத்திற்குத் தண் ணீர் கேட்பவனை, ‘போ’ என்று விலக்குவதெங்ஙனம்.? ஆதலின் அன்னை வள்ளியை நோக்கி, “யாரோ உண்ண நீர் கேட்கின் றார்கள்; செம்பில் நீர்கொண்டு போ” என்றாள். தாய் பணித்த வாறே, நிகழப்போவ தின்னதென்றறியாமல், வள்ளி செம்பு நீரைக் கையிலெடுத்துக்கொண்டு, வாயிலை நோக்கி நடந்தாள். வெளியே மறைந்து நின்றுகொண்டிருந்தவன், பிடியென நடந்து வந்த வள்ளியினழகைத் தன் கண்களாற் பருகி மகிழ்ந்தான். இதை யறியாதவளாய்க் கீழ்நோக்கிய பார்வையுடன் அடி எடுத்து வந்து, வாயிலை யடைந்து, செம்புநீரை நீட்டி நின்ற வள்ளியின் வளைகள் நிறைந்த முன்கையை, ஆத்திரக்காரனை அம்மகன் எட்டிப் பிடித்தான். ஒரு மகன் கை தன்னைத் தீண் டியதுணர்ந்த வள்ளி, துடித்துத் துள்ளி, “அம்மா, இவன் செய்ததைப் பார்த்தாயோ?” என்று கதறினாள். இவ்வழு குரல் செவியிற்பட்டவுடன் அன்னையும் அலறிப் பதறியோடி

வரலானாள். இதற்குள் தண்ணீர்கேட்ட மகன், தன்னுருவம் காட்டிப் புன்னகைசெய்து நிற்ப, தன் முன் நின்றவன் முருக னென்பதை வள்ளியறிந்து கூசி யுள்ளொடுங்கும் கண்ணினளா யினள். இத்தகைய நிகழ்ச்சிகளிற் பெண்ணறிவு கூரியதாகை யால், முருகனைத் தப்புவிக்க வள்ளி உடனே யொரு சூழ்ச்சி கருதினாள். பதைத்த நெஞ்சத்துடன் விரைந்து வந்த அன்னையை வள்ளி அமைதியுடன் பார்த்து, "அன்னாய், அச்சமொழிக; நடந்தது கேள்; நீர் உண்கையில் இவன் விக்கிக்கொண்டு வருந் தினான்; அதனால் யான் அஞ்சிக் கூவினேன்" என்று நடந்ததை மறைத்தாள். யாது நேர்ந்ததோவென்று துளக்குற்ற வன்னை, இதுகேட்டு அச்சந்தவிர்ந்து, விக்கினானென்று தன் மகள் கூறிய முருகனது முதுகைப் பலகால் அழித்தழித்துத் தடவினாள். இங்ஙனமன்னை முதுகைத் தடவும்போது, முருகன் வள்ளியைத் தன் கடைக்கண்ணாற் கொல்வான்போலே பார்த்து நகைக் கூட் டஞ்செய்தான். இவ்வரலாற்றை வள்ளி தன் தோழிக்கு நவின்ற தாகக் கூறும் கலிப்பாட்டுப் பின்வருமாறு :—

"சுடர்த்தொடீ கேளாய், தெருவில்நா மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா, இல்லிரே
உண்ணு நீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளென,யானும்
தன்னை யறியாது சென்றேன்; மற்றென்னை
வளைமுன் கைபற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தர, தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்றென்னைக்
கடைக்கணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தானக் கள்வன் மகன்"

பிள்ளைப் பருவத்தில் வள்ளி கட்டிய மணல்வீட்டை யழித்து மறைந்த முருகன், மறுபடியுந்தோன்றி, வள்ளி தன் தாயகம் விட்டுத் தன்னகம் வருமாறு காதலையூட்டுதல், சிற்றகத்தை யழித்துச் சீரகத்தைக் காட்டுமிறைவன் செயலுக்கொப்பாயிற்று.

“மலர்களைத் தொடுத்தாயிற்று, மணவாளனுக்குரிய மாலை கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. மணமானபின், தலைவி தன் வீட்டை விட்டுத் தனியே சென்று,இரவின் ஏகாந்தத்திலே நாயகனைச் சேர்வாள்.” (கீதாஞ்சலி, 91)

The flowers have been woven and the garland is ready for the bridegroom. After the wedding the bride shall leave her home and meet her lord alone in the solitude of night.

பண்டைத் தமிழ்ச்சான்றோரின் வானநூற்புலமை

[பண்டிதர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

(௪௱௭-ம் பக்கத் தொடர்ச்சி)

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்னும் சேரவேந்தன் துஞ்சியபொழுது கூடலூர்கிழார் என்னும் சான்றோர் இரங்கிப் பாடிய அழகிய பாட்டொன்று புறநானூற்றில் உள்ளது. அதில்,அவர் ‘வானத்தினின்றும ஒரு மீன் விழுந்தது; அதனைப் பார்த்து யாமும் பிறருமாகிய பல்வேறு வகைப்பட்ட இரவலர் எம்முடைய மலைநாட்டுக்கு வேந்தனாகியவன் நோயிலனாகப்பெறின் நன்றெனை இரங்கிய நெஞ்சத்துடனே மிக அஞ்சினேன்; அஞ்சினபடியே ஏழாநாள் வந்ததாகலின், இன்று வலியையுடைய யானை கையை நிலத்திலிட்டுத்துஞ்சவும், திண்ணிய வாராற் பிணிக்கப்பட்ட முரசம கண் கிழிந்துருளவும், உலகிற்குக் காவலாகிய வெண்கொற்றக்குடை கால் துணிந்து உலறவும்,காற்றுப்போலு மியல்புடைய குதிரைகள் கதியின்றிக் கிடக்கவும், பகைவரைப் பிணிக்கும் ஆற்றலையும் நச்சினோர்க்கு அளந்து கொடுத்தலறியாத வண்மையையும் உடைய நீலமலைபோலும் வேந்தன் தேவருலகத்தை யடைந்தான்’ என்று கூறியிருப்பது நெஞ்சினையுருக்குகின்றது. இப்பாட்டின் முற்பகுதி அவர், அம்மீனனது எப்பொழுது எவ்வழி எங்ஙனம விழுந்ததென்பதனைக் கூறியிருப்பது ஈண்டு நோக்கற்பாலது. அது.

“ஆடிய லழற்குட்டத்து
ஆரிரு ளரையிரவின்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனியுய ரழுவத்துத்

தலைநாண்மீன் நிலைதிரிய
நிலைநாண்மீன் அதனெதிரேர்தரத்
தொன்ஞண்மீன் றுறைபடியப்
பாசிச்செல்லாது ஊசிமுன்ஞது
அளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்ருல் விசும்பி ஞனே"

என்பது. 'மேடவிராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதற் காலின்கண் நிறைந்த இருளையுடைய பாதியிரவின்கண், முடப் பனைபோலும் வடிவையுடைய அனுடநாளின் அடியின் வெள்ளி முதலாகக் கயமாகிய குளவடிவுபோலும் வடிவையுடைய புனர் பூசத்துக் கடையின் வெள்ளிஎல்லையாக விளங்கப் பங்குனிமாதத் தினது முதற்பதினைந்தின்கண் உச்சமாகிய உத்தரம் அவ்வுச்சியி னின்றும் சாய, அதற்கு எட்டாமீனுகிய மூலம் அதற்கெதிரே எழாநிற்க, அந்த உத்தரத்திற்குமுன் செல்லப்பட்ட எட்டா மீனுகிய மிருகசீரிடம் துறையிடத்தே தாழ, கீழ்த்திசையினும் வடதிசையினும் போகாது கடலாற் சூழப்பட்ட பூமிக்கு விளக் காக மிக்க தீப்பரக்கக் காற்ருற் பிதிர்ந்து கிளர்ந்து வானத்தி னின்றும் ஒரு மீன் விழுந்தது' என்பது அதன் பொருள். பங் குனி பதினைந்தாம் நாள் கார்த்திகை முதற்காலுடன் கூடிய இருள் செறிந்த பாதியிரவில் ஒரு மீன் மிக்க ஒளியுடன் வட கீழ்த்திசையில் விழுந்ததென்பது இதன் கருத்தாகும். இருபத் தேழு நாண்மீன்களுடன் கூடிய வானவட்டத்தின் மேற்பகுதி யிலே பதின்மூன்றரை நாண்மீன்கள் நிலவுறுமாகலின் உத்தரம் உச்சியில் நிற்கும்பொழுது மேல்கோடியில் புனர்பூசத்துக் கடை வெள்ளி வரையிலும் கீழ்கோடியில் அனுடத்தின் அடி வெள்ளி வரையிலும் விளங்குமென்க. உத்தரம் உச்சியினின்றும் சாய மூலம் எழ என்றமையால் இரவு பதினெட்டரை நாழிகையளவில் மீன் விழுந்தமை பெறப்படும். இதன்கண் மேடத்தைக் குறிக்க ஆடு என்னுஞ் சொல்லும், கார்த்திகையைக் குறிக்க அழல் என் பதும், அதன் ஒரு காலைக் குறிக்கக் குட்டம் என்பதும், அனு டத்தைக் குறிக்க முடப்பனை என்பதும், புனர்பூசத்தைக் குறிக்கக் குளம் என்பதும் வழங்கியிருத்தலும், தலை நாண்மீன் முதலியன உத்தரம் முதலியவற்றைக் குறிப்பின் உணர்த்தலும், நாண்மீன்களில் இன்னது இன்னுழியிருக்குங்கால் இன்னது இன்னுழியிருக்குமென வரை செய்தலும் போல்வனவற்றி லிருந்து அற்றை நாளில் வான நூலானது கருதியவாறு தடை யின்றிச் செய்யுளிலமைக்கும் வண்ணம் அத்துணைப் பயிற்சி யுடைத்தாயிருந்ததென்பது போதரும். மீன் விழுந்தமை

கொண்டு அரசற்கு இன்னது நிகழுமென நன்கு துணியப் பட்டதைத் தெரிதலானே நிமித்த நூற்பயிற்சியும் மிக்கிருந்தமை புலனாகின்றது. இதிலுள்ள பாசி என்பதற்குக் கிழக்கு என்பதும், ஊசி என்பதற்கு வடக்கு எனபதும் பொருளாம்.

இனி, வையையாற்றைச் சிறப்பித்துக் கூறும் பதினோராம் பரிபாட்டின்கண் கார் காலத்து மழை பெய்தல் கூறும் வழி அப்போழ்து கோட்கள் நின்ற நிலைமையை ஆசிரியர் நல்லந்துவனார் விளக்கியுள்ளார். அது,

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை யெழில்வேழம் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி யுயர்நிற்ப அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்குப்பா லெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுன மடைய விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி யியைகென விவ் வாற்றாற்
புரைகெழு சையம் பொழிமழை தாழ
நெரிதரூஉம் வையைப் புனல்"

என்பது. இதன் முதல் மூன்று அடிகளில் இருபத்தேழு நக்கத் திரங்களாலாகிய பன்னிரண்டு இராசிகளும் இடபவீதி, மிதுன வீதி, மேடவீதி என மூவகை வீதியாக வகுக்கப்பட்டிருத்தல் கூறப்பட்டுளது. நாண்மீன்களும் மதியமும் ஒன்றற்கொன்று நெடுஞ்சேய்மையில உள்ளவாயினும வானின்கண் மதிக்கு நேர் பொருந்தும் நாண்மீனே அற்றை நாளாகக் குறிக்கப்படுதலின் 'மதியமொடு விசும்பு புணர்ப்ப' எனப்பட்டது. எரி என்பது கார்த்திகையையும், சடை என்பது திருவாதிரையையும், வேழம் என்பது பரணியையும் குறிக்க, அவை முறையே கார்த் திகையின் முக்காலையுடைய இடபத்தையும், ஆதிரையையுடைய மிதுனத்தையும், பரணியையுடைய மேடத்தையும் குறிப்பன வாயின. வீதி என்பது தெரு எனவும், இராசி என்பது இருக்கை எனவும் கூறப்பட்டன. இங்ஙனம் மூன்று தெருக்களாக வகுக் கப்படும் பன்னிரண்டு மனைகளில் இன்ன மனையுள் இன்னகோள்

இருக்கும் பொழுதில் மழை பொழிந்த தென்பது மேற் கூறப் படுகின்றது.

ஆவணித்திங்கள் அவிட்ட நாளில் வெள்ளி இடபத்தையும், செவ்வாய் மேடத்தையும், புதன் மிதுனத்தையும், ஆதித்தன் சிங்கத்தையும், வியாழம் மீனத்தையும், சனியும் மதியும் இராகுவும் மகரத்தையும், கேது கடகத்தையும் சேர, இராகு மதியினைத்தீண்ட, அகத்தியன் என்னு மீன் தன்னிடத்தைக்கடந்து மிதுனத்தைப் பொருந்த, முதுவேனிற்குப் பின்னதாகிய கார் காலத்திலே சையமலைக்கண் மழைபெய்ய அதனாற் பெருகிவரும் வையைப்புனல் என்பது அதன் திரண்டபொருளாம். கார்த்திகை உச்சியினிற்க விடிவது ஆவணித்திங்களின் தொடக்கத்தே யாகலின், ஆதித்தன் சிங்கத்தைச் சேர என்பது 'புலர் விடியல் அங்கியுயர் நிற்ப' என்பதனாற் குறிக்கப்பட்டது. சனியின் இருமனைக்கும் உப்பால் என்றது மீனம் என்றபடி. 'பாம்பு மதியமறைய வருநாள் என்றது, ஆவணி மாதத்து மதி நிறை நாளாகிய அவிட்டத்தை. எனவே, மதியும் இராகுவும் மகரத்து நிற்க என்பதும், கேது அதற்கு ஏழாமிடமாகிய கடகத்து நிற்க என்பதும் பெறப்பட்டன. ஒன்பான் கோட்களில் மதியமும் பாம்புகளும் ஒழிந்த ஆறு கோட்கள் தத்தம் மனைகளில் நிற்றல் கருதற்பாலது. ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளின் முன் ஆவணித்திங்கள் நிறையுவாவில் இங்ஙனம் கோட்கள் நின்றது எவ்வாண்டிலெனக் கணிக்கும் வழி இச்செய்யுள் தோன்றிய காலம் தெற்றெனப்புலப்படும். இதன்கண், வெள்ளி படிமகன் (செவ்வாய்), அந்தணன் (வியாழம்) எனக் கோட்களின் பெயர்களும், ஏறு (இடபம்), வருடை (மேடம்), வில் (தனுசு) என இராசிகளின் பெயர்களும் தமிழ்ச்சொற்களாய் நிற்றல் காண்க. புந்தி, யமன், மிதுனம், மகரம் முதலிய வடசொற்கள் இதன்கட் காணப்படுதல்

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

என ஆசிரியர் தொல்காப்பியனார் வடசொற்கள் தமிழில் வருமாறு கூறியதற்கேற்ப, வடமொழி வாணர் தமிழ் நாட்டிற் பரவிய காலத்தே தமிழ்ச் சான்றோர்கள் சிற்சில வடசொற்களை மேற்கொள்வாராயினமையான் என்க. இங்ஙனம் ஒரோவழிக் காணப்படும் வடசொற்கள் தமிழ்ச்சொல் இன்மையாற் போந்தனவல்ல என்பது இவற்றாற் குறிக்கப்படும் பொருள்

கள் பிறுண்டுத் தமிழ்ச்சொற்களால் வழங்கப்பெறுதல் கொண்டு அறியப்படும். பிற்காலத்துச் சோதிட நூல் இயற்றிய புலவர்களும்

"மறியுடன் ஏருது மான்பெண் வருகுளிர் மீன் கோல் ஏழும்
எறிகதிர் முதலா வுச்சம்"

என்றிங்ஙனம் கோட்களும் மனைகளும் முதலியவற்றை இனிய தமிழ்ச்சொற்களால் எளிதிற் கூறிப்போதரலுங் காண்க.

மக்கள் கடமை

[மறைமலை யடிகள்]

தமிழ்நாட்டுத் தாய்மார்களே! உங்களுடைய நன்மையையும் முன்னேற்றத்தையும் நாடி, உங்களுக்கு முதன்மையாக வேண்டும் சில சிறந்த பொருள்களை உங்களுக்கு விளக்கிச்சொல்ல விரும்புகின்றேம். நமது தமிழ் நாட்டைத்தவிர, மற்ற நாடுகளில் இருக்கும் பெண்மணிகள் கல்வியிலுங் கடவுள் வணக்கத்திலும் நாகரிக ஒழுக்கத்திலும் நாளுக்குநாள் பிறைபோல் வளர்ந்து மிகவும் இனிதாக உயிர்வாழ்கின்றுர்கள். நமது தமிழ் நாட்டு மாதர்களோ சிறந்த கல்வியுடையவர்களும் அல்லர், உண்மையான கடவுளை வணங்கத் தெரிந்தவர்களும் அல்லர், வேறு எவ்வகையான நாகரிகத்தில் உயர்ந்தவர்களும் அல்லர். உண்ண உணவும், உடுக்கத்துணியும், இருக்க இடமுங் கிடைத்தாற் போதும் என்றும் இவைகளுக்கு வறுமைப்படாமல் வாழ்வதே இன்ப வாழ்க்கை என்றும் நினைத்து, உணவு உடை இருப்பிடம் என்னும் இவைகளைத் தேடிக்கொள்வதிலும், தேடிய இவற்றை உண்டு உடுத்து உறைவிடமாக்கி உறங்கிக் கழிப்பதிலுந் தம் வாழ்நாளைக் கடத்தி வருகின்றுர்கள். உயர்ந்த அறிவாவது உயர்ந்த நோக்கமாவது நம் பெண்மக்களுக்குச் சிறிதும் இல்லை; அல்லது உயர்ந்த அறிவையும் உயர்ந்த நோக்கத்தையும் பெற வேண்டுமென்னும் எண்ணமாவது இவர்களுக்கு இருக்கின்றதோ வென்றுல், அது தானும் இல்லை. உண்டு உடுத்து உறங்கி வாழ்நாட் கழிப்பதைவிட மக்களால் அடையத்தக்க வேறு சிறந்த பொருள் இல்லையென்றே பெரும்பாலார் நினைக்கின்றுர்கள். அப்படி நினைத்தால் மக்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் வேற்றுமையாது? மக்களினுந் தாழ்ந்த ஆடு மாடு குதிரை முதல்

ஈ எறும்பு புழு ஈருன எல்லாச் சிற்றுயிர்களுங்கூடப் பசியெடுத்த போது தமக்கு எளிதிலே கிடைக்கும் புல் இலை தழை கிழங்கு கனி தேன் முதலான இரைகளைத் தேடித் தின்றும், மலையருவி ஆறு ஏரி குளங் கூவல் முதலியவற்றின் நீரைப் பருகியும் பசி தீர்ந்தபின் செடிகளின் நடுவிலோ மலைப் பிளவுகளின் இடையிலோ கிடந்து கவலையின்றி உறங்கிக் காலங்கழிக்கின்றன. மக்களுக்காவது உடுக்க ஆடை வேண்டும்; இச்சிற்றுயிர்களுக்கோ ஆடையும் வேண்டுவதில்லை. மழையில் நனையாமலும் பனியிற் குளிராமலும் வெயிலில் வெதும்பாமலும் அவ்வுயிர்களைப் பாது காக்கத் தடிப்பான தோலோடு அடர்த்தியான மயிரையுங் கம் பளிப் போர்வைப்போல் அவைகளுக்கு இறைவன் கொடுத் திருக்கிறன். வெப்பம் மிகுந்த நமது தமிழ் நாட்டில் உள்ள ஆடுமாடுகளுக்குக் குளிரின் துன்பம் மிகுதியாய் இல்லாமையால், அவைகளின் உடம்பின் மேல் அடர்ந்து நீண்டமயிர்கள் இல்லை. ஆனல், வடக்கே இமயமலையிலும், அம்மலைச்சாரலில் உள்ள இடங்களிலும் போய்ப் பார்த்தால், அங்குள்ள ஆடுமாடுகளுக்கு அடர்ந்து நீண்டமயிர்கள் இருத்தலைக் காணலாம். ஏனென்றல், அம்மலை நாடுகளில் தாங்கமுடியாத பனியுங் குளிரும் மிகுந் திருக்கின்றன; அவ்வளவு பனியிலுங் குளிரிலும் அவ்விலங்குகள் வெற்றுடம்பு உள்ளனவாயிருந்தால் அவை உடனே விரைத்து மாண்டு போகும்; ஆதலால், அவ்வாடு மாடுகள் அங்குள்ள பனியிலுங் குளிரிலும் மாண்டு போகாமல் அவற்றைப் பாது காப்பதற்காகவே எல்லா இரக்கமும் உள்ள கடவுள் அவை களின் உடம்பின் மேல் நீண்டு அடர்ந்த மயிரை வளரச் செய் திருக்கிறன். ஆகவே, உணவின் பொருட்டும் உடையின் பொருட்டும் இருப்பிடத்தின் பொருட்டும் மக்களாகிய நாம் ஓயாமல் அடையுங் கவலையுந் துன்பமும் நம்மிற்றழ்ந்த சிற் றுயிர்களுக்குச் சிறிதும் இல்லை; வேண்டும்போது இரைதேடித் தின்றும் உறக்கம் வந்தபோது உறங்கியும் ஆணும்பெண்ணு மாய்க் கூடியிருந்து தம் இனங்களைப் பெருக்கியும் அவைகள் கவலையின்றிக் காலங் கழிக்கின்றன. இப்படிப்பட்ட சிற்றுயிர் களின் வாழ்க்கையையும், உணவுக்கும் உடுப்புக்கும் இருப்பிடத் திற்கும் அல்லும் பகலுமாய்ப் பாடுபட்டு மனைவியாற் கணவ னும், கணவனல் மனைவியும், பெற்றோராற் பிள்ளைகளும், பிள்ளை களாற் பெற்றோரும், ஒரு குடும்பத்தாரால் அவர்களின் சுற்றத் தாரும், ஒரு சுற்றத்தாரால் அவர்களின் குடும்பத்தாரும், ஓர் ஊராரால் அவர்தம் அரசரும், ஓர் அரசரால் அவர் தம் ஊரா ரும், ஆக எல்லாருமாய்ப் பலவகைத் துன்பங்களுக்கு ஆளாகி நோயிலுங் கவலையிலும் இடையறுது உழன்று வருந்திவரும் மக்களாகிய நமது வாழ்க்கையையும் வைத்து ஒப்பிட்டுப் பார்த்

தால் நமது துன்ப வாழ்க்கையைவிடச் சிற்றுயிர்களின் இன்ப வாழ்க்கை எத்தனையோ மடங்கு சிறந்ததாய்க் காணப்படுகின்ற தன்றோ? தம்மைப் படைத்த உண்மையான கடவுளை நினையா மல் நம்போன்ற மக்களைத் தெய்வமாக வணங்கியும், தம்மையே தாம் பெரியராக நினைந்தும், வாழ்நாள் முதிரா முன்னரே கவலையாலும் நோயாலுங் கூற்றுவன் வாய்ப்பட்டு மடியும் நம் மக்கட்பிறவியைவிட இறைவன் பாதுகாப்பில் அடங்கிக் கவலை யின்றி உயிர்வாழும் விலங்கினங்களின் வாழ்க்கை சிறந்ததாயிருக் கின்றதன்றோ? அங்ஙனம் இருக்க, உண்ணல், உடுத்தல், உறங் கல், இன்புறுதல் என்னும் இவைகளினாலேயே மக்கள் வாழ்க்கை யானது சிறந்ததாயிருக்கின்றதென்று நினைப்போமாயின் அஃது எவ்வளவு பேதைமையாகக் காணப்படுகின்றது!

அப்படியானால் எல்லாப் பிறவிகளையும்விடமக்கட் பிறவியே சிறந்ததென்று அறிவுடையோர்களும் அவர் செய்து வைத்த நூல்களும் சொல்வது ஏன்? என்றால், எந்தவகையில் மக்கட் பிறவியானது மற்றைச் சிற்றுயிர்களின் பிறவியைவிட அங்ஙனஞ் சிறந்தது என்பதை நாம நன்கு ஆராய்ந்து பார்த்துத் தெளிதல் வேண்டும். மக்களாகிய நாம் பகுத்தறிவு உடையவர்களாய்இருக்க மற்றச்சிற்றுயிர்களோ அத்தகைய பகுத்துணர்வு உடையன வாய்க் காணப்படவில்லை. அதனாலேதான் நமது பிறவி மற்ற விலங்கின் பிறப்பைவிடச் சிறந்ததாகுமென்று அறிகின்றோம். விலங்குகளுக்கு இது நல்லது, இது தீயது என்று பகுத்துணர் தல் இயலாது. அவை வழக்கமாய்த் தின்னுந் தீனியையே உட் கொள்ளும்; பெரும்புதர்களிலும் மலைக்குகைகளிலும் மரநிழல் களிலுங் கிடந்தபடியே நாளைக்கழிக்கும்; இவற்றிற்குமேல்அவை கள் ஒன்றையும் அறியமாட்டா. மேன்மேல் இன்பத்தைப் பெருக்கும் வழிவகைகளும அவை தெரிந்து கொள்ளல் முடி யாது. பிற உயிர்களுக்கு நன்மையாவது இது, தீமையாவது இது என்றும் அவை அறிவதில்லை. இந்த உலகத்தில் நாம் ஏன் படைக்கப்பட்டிருக்கின்றோம்? இந்த உடம்பு ஏன் நிலையாய் இருப்பதில்லை? சிறிது காலத்தில் இந்த உடம்பின் உறவால் வந்த பெற்றோரும், மனைவிமக்களும, உடன் பிறந்தாரும், நேசரும், சுற்றத்தாரும் சூழ்ந்து கொண்டிருக்கவும், இந்த உயிர் திடீ ரென்று இவர்கள் எல்லாரையும் விட்டு எங்கே போகின்றது? அப்படி போகும் உயிரை இவர்கள் ஒருவருந் தடுக்கமாட்டாத வர்களாய் அலறி வீழ்ந்து அழுவது ஏன்? எவராலுந் தடுக்க முடி யாத இந்தப் பிறப்பு இறப்புகளை வகுத்தவன் யார்? இவற்றை வகுத்தவனது நோக்கம் யாது? பெருந்துன்பத்திற்கு இடமான இப்பிறப்பு இறப்புகளை நீக்கும் வழியாது? என்று இங்ஙன

மெல்லாம் ஆராய்ந்து பார்க்கக்கூடிய உணர்ச்சியும், அவ்வுணர்ச்சியால் அடையத்தக்க பெரும் பயனும் விலங்குகளுக்குச் சிறிதும் இல்லை. மக்களாகிய நாமோ இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, அவ்வாராய்ச்சியால் வரும் பயனை அடையத்தக்க உயர்ந்த நிலையில் இருக்கின்றோம். கிடைத்தற்கு அரிய அவ்வுயர்ந்த நிலையில் இருந்தும், அவ்வுண்மைகளை ஆராய்ந்து பாராமல், விலங்குகளைப்போல உண்பதிலும் உறங்குவதிலுங் காலங் கழித்து, வகை வகையான உடைகளை உடுப்பதும், பளபளப்பான நகைகளைப் பூண்பதும், மினு மினுப்பான வண்டிகளிற் செல்வதும், நாளுக்குநாள் வரும் புதுமைகளைக் காண்பதும், மேலுக்கு மேல் எழும் பாட்டுகளைக் கேட்பதும், ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்த மணப் பண்டங்களை மோப்பதும் கற்கக்கற்க இனிக்குங் கதைகளைக் கற்பதும் ஆகிய இவைகளே மக்கட் பிறவியினால் அடையத்தக்க பெரும் பயன்கள் என்று நம்மவர் நினைப்பார்களாயின், ஐயோ! அவர்கள் விலங்கினங்களினுங் கடைப்பட்டவர் ஆவார்கள் அல்லரோ?

ஆதலால், நமக்கு அருமையாய்க் கிடைத்த பகுத்துணர்ச்சியை, நாம் பல வகையான உயர்ந்த வழிகளிலும் வளரச்செய்து அதனால் அழியாப் பெரும்பயனை அடைதல் வேண்டும். இது வரையிலுமே, பகுத்துணர்ச்சியால் நாம் அடைந்த பயன்களும், அடைந்து வரும் பயன்களும் அளவிடப்படா. நாவுக்கு இனிமையான பண்டங்களை நாளுக்குநாள் புதிது புதிதாகச் செய்யக் கற்று வருகின்றோம்; கண்ணுக்கு அழகான உடுப்புகளையும் வகை வகையாகச் செய்வித்து அணிந்து வருகின்றோம்; பார்க்கப் பார்க்கக் கவர்ச்சியைத்தரும் ஓவியங்களை (சித்திரப்படங்களை) எழுதுவித்தும், பாவைகளைச் செய்வித்தும், அவற்றை நம்முடைய இல்லங்களில் வைத்துப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து வருகின்றோம்; மேன் மாடங்களுள்ள மாளிகை வீடுகளையும், அவற்றைச் சூழப் பசிய தோட்டங்களையும் அமைப்பித்து, அவ்வீடுகளிற் களிப்புடன் குடியிருந்தும், அத்தோட்டங்களில் மனக்கிளர்ச்சியோடு உலவியும் வருகின்றோம்; புல்லாங்குழல், யாழ், முழவு முதலான இசைக்கருவிகளின் இனிய ஒலிகளையும், அவற்றோடு சேர்ந்து பாடுவார் தம் இசைப்பாட்டுகளையுங் கேட்டுப் பெருங்களிப்பு அடைந்து வருகின்றோம்; நறுமணம் கமழ் பல வகை மலர்களைச் சூடியும் அம்மலர்களி லிருந்தும் சந்தனக் கட்டை அகிற் கட்டை முதலியவற்றிலிருந்தும் பெற்ற நெய்யையும், குழம்பையும் பூசியும் இன்புறுகின்றோம். மிக மெல்லிய பஞ்சுகளாலும் பறவையின் தூவிகளாலும் அமைக்கப்பட்ட மெத்தைகளை வழு வழுப்பாகச் செய்வித்த தந்தக் கட்டில்களில்

இடுவித்து, அவற்றின் மேற்படுத்து இனிது உறங்குகின்றோம். இன்னும், ஏவற்காரரால் வீசப்படும் வெட்டிவேர் விசிறிகளா லும், தாமே சுழலும் விசிறிப் பொறிகளாலும் வெயிற் கால வியர்வையினையும், புழுக்கத்தினையும், மாற்றிமகிழ்ச்சி அடை கின்றோம். திறமை மிக்க புலவர்களால் எழுதப்படும் புதிய புதிய கதைகளைப் பயின்று உள்ளங்களிக்கின்றோம். இங்ஙன மாக, நமக்குள்ள பகுத்துணர்ச்சியின் உதவியைக்கொண்டு நாளுக்கு நாள் அடைந்துவரும் இன்பங்களை முற்ற எடுத்து முடித்துரைக்கப் புகுந்தால் அவற்றிற்கு இவ்ஏடு இடங் கொள் ளாது.

மேலும், நமக்குள்ள பகுத்துணர்ச்சியின் மிகுதிக்குத் தக்க படி நாம் மிகுந்த இன்பத்தை அடைந்து வருவதுடன், பகுத் துணர்ச்சியில் நம்மினும் எத்தனையோ மடங்கு உயர்ந்த அறி வுடையோர்களாற் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டு வரும் பொறிகளின் (இயந்திரங்களின்) உதவியால் நாம் எல்லையில்லாத இடர்க்கடலினின்றும் விடுவித்து எடுக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் புது புது நலங்களை அடைந்து இனிதாக வாழ் நாளைக் கழித்து வருகின்றோம். நீராவி வண்டிகள் ஏற்படாத அறுபது எழுபது ஆண்டுகளுக்குமுன் நம்முன்னோர்கள் ஓர் ஊரிலிருந்து தொலைவிலுள்ள மற்றோர் ஊருக்குச் செல்ல நேர்ந்தால், அப் போது அவர்கள் எவ்வளவு துன்பப்பட்டார்கள்! அக்காலங் களிற் செவ்வையான பாட்டைகள் கிடையா. இருநத சில பாட்டைகளோ, கல்லும் கரடும மேடும் பள்ளமும் நிரம்பிக், கால் நடையாய்ச் செல்வார்க்கும், மாட்டு வண்டிகளிற் செல் வார்க்கும் மிகுந்த வருத்தத்தையுங், காலக்கழிவினையும், பணச் செலவினையும் உண்டாக்கின. அப்பாட்டைகள், காடுகளின் ஊடும், மலைகளின் மேலும், பாலங்கள் இல்லா ஆறுகளின் நடு வுங் கிடந்தமையால், அவற்றின் வழிச் செல்வோர்கள், புலி, கரடி, ஓநாய், பாம்பு முதலான கொடு விலங்குகளாலும், கள்வர் களாலும் அலைக்கப்பட்டுப் பொருளும் உயிரும் இழந்தும், பொருள் இழந்து அரிதாய் உயிர்தப்பியும் துன்புற்றார்கள்; வழி யிடையே உள்ள ஆறுகளில் வெள்ளங்கள் வந்து விட்டால், ஓடம் விடுவார் இல்லாதபோது, அக்கரையில் வந்து சேர்ந்தோர் அங் கேயும், இக்கரையிற் போய்ச்சேர்ந்தார் இங்கேயுமாக, வெள்ளம் வடியும் நாட்கள் வரையிற் கவலையோடு காத்திருந்தார்கள். கட லாற் சூழப்படாத நாடுகளில் இருப்பவர்களே இங்ஙனம் ஓர் ஊர்க்குச் செல்லஇத்தனைத் துன்பங்களை அடைந்தார்களென்றால், கடல்சூழ்ந்த இலங்கையில் உள்ளவர்களும், பெரு கடல்களுக்கும் அப்பால் உள்ள கடாரம் (பர்மா), சாவகம் (ஜாவா), சீனம், பாத

ளம் (அமெரிக்கா) முதலான நாடுகளில் இருந்த மாந்தர்கள் இப்பரத நாட்டுக்கு (இந்தியாவுக்கு) வரவும், இங்குள்ள மாந்தர் கள் அவ் அயல் நாடுகளுக்குச் செல்லவும் எவ்வளவு துன்பப் பட்டிருக்க வேண்டும்!

அக்கொடிய துன்பங்களுக்கு அஞ்சியே, முற்காலத்திருந்த முன்னோர்களிற் பெரும்பாலார் ஓர் ஊரிலிருந்து தொலைவிலுள்ள மற்றோர் ஊருக்குச் செல்வதில்லை. முழுவறுமையாற் பசித் துன்பந் தாங்க மாட்டாதவர்களே தாம் இருந்த ஊரை விட்டு வேறு வளஞ்சிறந்த ஊர்களைத்தேடிச் சென்றனர். மற்றை யோர் தாந்தாம் இருந்த இடங்களிலேயே தத்தமக்கு வேண்டிய உணவுப் பண்டங்களைப பயிர் செய்துகொண்டு பெரும்பாலும் வறுமையிலேயே காலங்கழித்தனர்.

அக்காலத்தில் ஓர் ஊரில் உண்டாக்கப்பட்ட பண்டங்கள், பிறிதொரு சிறிய ஊர்க்குச் செல்வதில்லை. காவிரிப்பூம்பட்டி னம், உறையூர், மதுரை, கரூர் முதலான பெரிய தலைநகர்கள் சிற்சிலவற்றிற்கே அயலூர்களில் ஆக்கின பண்டங்கள் விலைப் படுத்தவரும். நிரம்பப் பாடுபட்டு அப்பண்டங்களை அந்நகரங் களிற் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்க வேண்டியிருத்தலால், வணி கர்கள் அவர்களை மிகுந்த விலைக்கு விற்றனர். கடல் தாண்டியுள்ள நாடுகளில் ஆக்கின அரும் பண்டங்கள் கப்பல்களின் வழியாக வரவேண்டியிருந்தமையாலும், அக்காலத்துப் பாய்கட்டிக்கப்பல் கள் கடலிலுள்ள சுழல்களுக்கும் அங்கே வீசும் சூறைக்காற்று களுக்குந் தப்பிப் பிழைத்துச்சென்று அயல் நாடுகளிற் கிடைத்த அவ் அரும் பண்டங்களை ஏற்றிக் கொண்டு திரும்பி இங்கு வந்து சேரப் பல திங்களும், பல ஆண்டுகளும் கடந்து போனமையா லும் அவ் அரும் பண்டங்களை மிக உயர்ந்த விலைக்கு விற்பனை செய்தார்கள். அதனால், மிகச் சிறந்த செல்வர்களாய் உள்ள வர்களே அவ் உயர்ந்த பண்டங்களை வாங்கத் தக்கவராய் இருந் தார்கள். மற்றவர்களெல்லாரும் அவைகளை வாங்குதற்கு ஏலா மல் அவற்றைப் பார்த்துப் பார்த்து ஏமாந்தனர்.

இவைகளே யன்றி, அக்காலத்தில் இன்னும் ஒரு பேர் இடர் இருந்தது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் மிகவும் எட்டியிருந்த ஊர்களில் மழை பெய்யவேண்டுங் காலத்திற் செவ் வையாக மழை பெய்யாமல் மறுத்துவிட்டால், அவ்வூர்களின் விளை பொருள்கள் விளைவு குறைந்து பஞ்சத்தை உண்டாக்கின. விளைந்த ஊர்களுக்கு விரைவிற் கொண்டு போய்ச் சேர்ப்பிக்க எளிதான வழி அக்காலத்தில் இல்லை. அதனாற் பஞ்சம் நேரிட்ட

ஊர்களிலிருந்த குடிமக்கள் அங்கங்கு இருந்த இருந்தபடியே கணக்கின்றி மாய்ந்தனர். ஆனால், இக்காலத்திலோ முற்கூறிய துன்பங்களெல்லாம் ஒழிந்தன. எதனாலென்றால், பகுத்துணர்ச்சி யிற் சிறந்த ஜேம்ஸ் வாட் என்னும் ஒரு துரைமகன் நீராவியின் வல்லமையைக் கண்டு பிடிக்க, அவனுக்குப் பின்வந்த ஆங்கில அறிஞர் பலர் அந் நீராவியைக் கொண்டு வண்டிகளையுங் கப்பல் களையும், இடர் நேராமல் மிகு விரைவாக ஓட்டத்தக்க முறை களைத் தெரிந்து கொண்டதனாலேயாகும். ஆறு திங்கள் அல்லது ஓர் ஆண்டு மாட்டு வண்டியிற் சென்று சேரவேண்டும் ஊர்களை இப்போது நீராவி வண்டியில் ஏறி நாலைந்து நாட்களிற் போய்ச் சேர்கின்றோம். முன்னே ஐந்நூறு ரூபா, ஆயிர ரூபா செல வழித்துக் கொண்டு போய்ச் சேரவேண்டிய இடங்களை, இப் போது நாற்பது ஐம்பது ரூபாச் செலவோடு போய்ச் சேர்கின் றோம். முன்னே வழியின் இடக்காலும், கொடிய விலங்குகளா லும், தீயவர்களாலும் நேர்ந்த இடுக்கண்களெல்லாம் இப்போது இல்லையாயின. பெருங்கடல்களைத் தாண்டிச் செல்லவேண்டிய நாடுகளையெல்லாம் நீராவிக் கப்பல்களின் வழியாய்க் குறித்த காலத்திற் சுருங்கிய செலவில் இனிதாய்ப் போய்ச் சேர்கின் றோம். அந்நாடுகளிலுள்ள அரும் பண்டங்களையெல்லாம் நாமி ருக்கும் நாடுகளுக்கும், நம் நாட்டிலுள்ள விளை பொருள்களை அந்நாடுகளுக்குமாக ஏற்றுமதி இறக்குமதி செய்து, குறைந்த விலைக்கு அவைகளைக் கொண்டுங் கொடுத்தும் வருகின்றோம். பிற நாடுகளிற் புதியன புதியனவாக ஆக்கப்பட்டு வரும் நேர்த்தி யான அரும்பண்டங்களைச் செல்வர்களே யன்றி, ஏழைமக்களும் வாங்கத் தக்கபடி அவைகள் குறைந்த விலைக்கு விற்பனை செய் யப்படுகின்றன. அது மட்டுமோ ஒருநாட்டில் மழைபெய்யாது பஞ்சம் வந்தால், அயல் நாடுகளில் விளைந்த உணவுப் பண்டங் களை நீராவி வண்டிகளாலும், நீராவிக் கப்பல்களாலும் உடனுக் குடன் அங்கே கொண்டு வந்து சேர்ப்பித்து அங்குள்ள பஞ்சத் தைத் தீர்த்துப், பல்லாயிரம் மக்களை உயிர்பிழைக்கச் செய்கின் றார்கள். இவைபோல இன்னும் எண்ணில் அடங்காத எத் தனையோ நலங்களெல்லாம், பகுத்துணர்ச்சியிற் சிறந்த ஆங்கிலப் பேர் அறிவாளிகள் கண்டுபிடித்த நீராவிப் பொறிகளால் நாம் அடைந்து வருகின்றனம் அல்லமோ?

இவை மட்டுமோ! இலங்கையில் உள்ளவர்கள் இந்தியாவில் இருப்பவர்களோடும், இந்தியாவில் உள்ளவர்கள் இலங்கையி லிருப்பவர்களோடும், ஒரு வீட்டுக்குள் இருப்பவர்களைப் போற் பேசிக் கொள்வதற்கு வாய்த்திருக்கும் வியப்பான வசதியை எண்ணிப் பாருங்கள்! இஃது எதனால் வந்தது? மின்சாரத்தின்

இயக்கத்தையும், அதனைப் பயன்படுத்தும் முறைகளையும் ஆங்கில அறிஞர்கள் தமது பகுத்துணர்ச்சியின் நுட்பத்தாற் கண்டு பிடித்தமையால் அன்றோ? இலங்கையிலிருப்பவர்கள் இந்தியாவிலிருக்கும் தம் நண்பர்கட்குச் செய்திகள் தெரிவிக்க வேண்டுமானாலும், இந்தியாவிலிருப்பவர்கள் இலங்கையிலிருக்குந் தம் நண்பர்கட்குச் செய்திகள் தெரிவிக்க வேண்டுமானாலும் அவர்கள் அவற்றை ஒரு கடிதத் துண்டில் எழுதித் தந்திச் சாலைக்கு அனுப்பி, அதற்குரிய சிறு கூலிக்காசையுங் கொடுத்துவிட்டால் ஒரு மணி நேரத்தில் இந்தியாவிலிருப்பவர்க்கோ, இலங்கையிலிருப்பவர்க்கோ அந்தச் செய்திகள் உடனே தெரிவிக்கப்படுகின்றன. அடுத்த மணி நேரத்தில் அவற்றிற்கு மறுமொழியும் வருகின்றது. இந்தப்படியாகவே, இந்தியா, இலங்கைக்கு ஆறாயிரம் மைல் எட்டியுள்ள சீமை முதலான இடங்களுக்குஞ் சில மணி நேரத்தில் செய்திகள் தெரிவித்தலும், ஆங்காங்குள்ள செய்திகளைத் தெரிந்து கொள்ளுதலும், ஒவ்வொரு நொடிப்பொழுதும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆறாயிர மைல் எண்ணாயிர மைல் அகன்றுள்ள நாடுகளெல்லாம், இங்ஙனம் முற்காலத்தில் செய்திகள் அனுப்புதல் முடியுமா? சிறிதும் முடியாதே. இவ்வளவு வசதிகளும் எதனால் வந்தன? ஆங்கில அறிஞர்கள் இடைவிடாது தமது பகுத்துணர்ச்சியைப் பயன்படுத்தி **மின்சாரம்** முதலான கட்புலனாகா நுண் பொருள்களின் இருப்பையும், வலிவையும், இயக்கத்தையும், பயனையும் கண்டுபிடித்தமையால் அன்றோ?

இன்னும் ஒரு புதுமையைப் பாருங்கள்! ஒரு நூற்றாண்டுக்கு முன் இருந்த நம் முன்னோர்களிற், பட்ட மரமும் தளிர்க்கக், கேட்ட பறவைகளும் மயங்க இன்னிசை பாடுவதில் வல்லவர்கள் எத்தனையோ பெயர் இருந்தார்கள்! ஆனால், அவர்கள் இறந்ததும், அவர்களின் தேன்போன்ற குரலும் அவர்கள் மிழற்றிய இனிய பாட்டுகளும் அவர்களோடு கூடவே இறந்துபோய்விட்டன. அவற்றை நாம் மறுபடியும் செவி கொடுத்துக் கேட்பது இனி எக்காலத்தும் இயலாது! இங்ஙனமாக ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்டிருந்தோரின் நிலை அவ்வாறாய் முடிய, இந்த ஒரு நூற்றாண்டுக்குள் நாம் பிறப்பதற்கு முன்னிருந்த இசைவல்லோர்களின் நிலை அங்ஙனம் நாம் ஏமாறி வருந்தத் தக்கதாய் முடிந்து போகவில்லை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்து முக்கனியினுங் கற்கண்டினும் இனிக்கப் பாடிய பாவாணர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துப் போனாலும், அவர்களுடைய அருமைக் குரல் ஒலியும், அவர்கள் பாடிய இன்னிசைப் பாட்டுகளும் நம்மை விட்டு நீங்கிப் போகவில்லை. எப்படியெனில் அமெரிக்கா தேசத்-

தில் பகுத்தறிவிற் சிறந்து விளங்கும்எடிசன் என்னுந் துரைமக ஞர்ஆக்கிய ஒலியெழுதி(Gramophone)என்னும் பொறியானது, அப் பாவாணர்கள் பாடிய இன்னிசைப் பாட்டுகளையும் அவர் களுடைய இனிய குரலொலிகளையும் அப்படியே பாடிக்காட்ட, அவைகளைக் கேட்டு நாம் வியந்து மகிழ்கின்றனம் அல்லோமோ? அவ் இசைவாணர்கள் இறந்து போயினும், அவர்கள் பாடிய இசைகள் இறந்துபோகாமல், நாம் திரும்பத் திரும்பக் கேட்டு மகிழும்படி பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன அல்லவோ? இதுமட்டுமா! எந்தெந்தத் தேசத்தில் எந்தெந்த மொழியில் எவ்வெப் பாட்டுக்களை எப்படி எப்படிப் பாடினார்களோ, அவ் வப்படியே அப்பாட்டுக்களையெல்லாம் நாம் இருந்த இடத்தி லிருந்தே கேட்டு இன்புறும் பெரும்பேற்றை இவ் விசைக்கருவி யானது நமக்குத் தந்திருக்கின்றதன்றோ? இத்தனை இன்பமும் நாம் எளிதில் அடையலானது எதனால்? எடிசன் என்னும் துரை மகனார் தமது பகுத்துணர்ச்சியைச் செலுத்தி எவ்வளவோ அரும் பாடுபட்டு இவ் இசைக்கருவியைக் கண்டு பிடித்ததனா லன்றோ? அவர் தமது பகுத்துணர்வினைப் பயன்படுத்தாமல், மற்ற மக்களைப் போல் உண்பதிலும் உடுப்பதிலும் உறங்குவதி லும் தமது காலத்தைக் கழித்திருந்தனராயின், நாம் அருமந்த இசைக் கருவியைப் பெறுதலும், நம் முன்னோர்களின் தித்திக் குஞ் சுவைப் பாட்டுகள், அயல் நாட்டு இசைவாணரின் பல திற வரிப் பாட்டுகள் என்னும் இவைகளைக் கேட்டு மகிழ்தலும் இயலுமோ?

இன்னும் பாருங்கள்! நாம் படிக்கும் புத்தகங்களையும், அவ் வவ்வூர்களில் நடக்குஞ் செய்திகளை அறிவிக்கும் புதினத் தாள் களையும் அச்சுப் பொறிகள் சிறிது நேரத்தில் ஆயிரக் கணக்காக அச்சுப் பதித்து நமக்குக் குறைந்த விலைக்குத் தருகின்றன. அச்சுப் பொறிகள் இல்லா முன் நாளிலோ இவ்வளவு எளிதாக நாம் விரும்பிய அரிய பெரிய நூல்களைப் பெற்றுக் கற்றுத் தேர்ச்சி அடைதல் ஏலாது. பழைய நாட்டில் ஓர் ஊரிற் சிற் சிலரே கற்றவராய் இருப்பர். அவர்கள் தாம் கற்கும் நூல் களைப் பனை ஏடுகளிற் பாடுபட்டு எழுதிக் கருத்தாய் வைத்திருப் பர். அவர்கள் தம்மிடம் கல்வி கற்கவரும் மாணாக்கர் சிலர் மட்டும் தம்மிடத்துள்ள ஏட்டுச் சுவடிகளைப் பார்த்துச் சிறிது சிறிதாய் எழுதிக் கொள்ளும்படி அவர்க்குக் கொடுப்பார்களே யல்லாமல் எல்லாரும் பெற்றுப் பயிலும்படி அவ்வேட்டுச்சுவடி களை எல்லார்க்கும் எளிதிற் கொடார். அல்லது அப்படிக் கொடுத்தாலுங்கூட ஓர் ஏட்டுச் சுவடியில் எழுதப்பட்டிருக்கும் ஒரு நூலை ஒரே காலத்தில் பற்பலர் எப்படி எடுத்துக் கற்க முடியும்? மேலும் தமிழ்மொழியில் உள்ள சிறந்த நூல்கள் பல

வும் ஓர் ஊரில் உள்ள கற்றவர் சிலரிடத்தில் ஒருங்கே காணப்படுவதும் இல்லை. ஓர் அருமையான நூலைக் காணவேண்டுமானால் எத்தனையோ ஊர்களுக்குப் போய் அலைந்து திரிந்து தேடிப் பார்க்கவேண்டும்: இப்படித் தேடித் திரிவதற்கு எவ்வளவு நாட்கள் செல்லும்! எவ்வளவு பொருள் செலவாகும்! எவ்வளவு பாடும் உழைப்பும் வேண்டும்! இத்தனை இடாப்பாடுகள் இருந்தமையினாலேயே பழையகாலத்திற் கற்றவர் தொகை மிகுதியாயில்லை; கல்வி பரவவும் இல்லை, வளரவும் இல்லை. ஆனால் இக்காலத்திலோ வெள்ளைக்காரர் கண்டுபிடித்த அச்சுப்பொறிகளின் உதவியால் பல்வேறு நூல்களும், பல வேறு புதினத்தாள்களும், ஒவ்வொரு நொடியுங் கோடிகோடியாக அச்சிற் பதிக்கப்பட்டு உலகமெங்கும் பரவிக்கொண்டிருக்கின்றன. இதனால், எவ்வளவு ஏழையா யிருப்பவர்களும சிறிது பொருள் செலவு செய்து, தமக்கு வேண்டிய நூல்களை எளிதில் வாங்கிக் கற்றுக் கல்வியில் தேர்ச்சி பெறுகின்றார்கள். இதனால் கல்வியானது எங்கும் பரவுகின்றது; கற்றவர் தொகை மிகுதிப்படுகின்றது. நாகரிகம் எங்கும் பெருகி, எங்கும் அறிவு மணங் கமழ்ந்து இன்ப ஒளி வீசுகின்றது. இத்தனைப் பெரும்பேறுகளும் காக்ஸ்டன் (Caxton) என்னும் வெள்ளைக்கார அறிஞர் தமது பகுத்துணர்வினைப் பயன்படுத்தி அச்சுப் பொறியைக் கண்டு பிடித்தமையால் விளைந்தவைகள் அல்லவோ?

இன்னும் இங்ஙனமே வெள்ளைக்கார துரைமக்கள் அல்லும் பகலும் தமது அறிவைச் செலுத்தி, இதுகாறுங் கண்டு பிடித்திருக்கும் பொறிகளால் இதுகாறும் விளைந்த, விளைந்திருக்கின்ற நலங்கள் அளவுக்கு அடங்கா. அவர்கள் இவ்வளவிலே ஓய்ந்து விடாமல், இன்னும் தமது உணர்வினைப் பல துறைகளிற் செலுத்தி இன்னும் பல புதுமைகளை நாடோறும் கண்டறிந்து வருதலால், இன்னும் உலகத்தில் உள்ள மக்களுக்கு வரப் போகும் நலங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன! அவை எல்லாம் இப்போது யாரால் அளவிட்டுச் சொல்லமுடியும. ஆகவே பகுத்துணர்ச்சியைப் பெற்ற மக்களாகிய நாம் விலங்கினங்களைப்போல வீணே உண்டு உறங்கி இன்புற்றுக் காலங் கழித்தலிலேயே கருத்தைச் செலுத்திவிடாமல், அப்பகுத்துணர்ச்சியைப் பெற்ற நம்மிற் சிலர் அதனை மிக நன்றாய்ப் பயன்படுத்தி அதனாற் பல புதுமைகளையும், அவற்றாற் பல சிறந்த இன்பங்களையும் கண்டறிந்து, அவற்றால் தாமும் பயன் பெற்று மற்றையோரையும் பயன்பெறச் செய்து வருதல்போல, நாமும் அவ் வுணர்ச்சியினை மேலும் மேலும் பயன்படுத்தி இன்னும் மேலான இன்பங்களை அடையக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தீண்டாமை

[திரு. செங்கல்வராய பிள்ளையவர்கள் B.A., L.T.]

ஒருவர் செய்கை அவர்தம் மனச்சான்றுக்கு ஒத்திருக்க வேண்டும். அவ்வொற்றுமையோடு மற்றையோருடைய நோக்கமும் அதற்கிசைந்திருக்கப் பெறின் சாலச் சிறந்ததாகும். ஆனால் தாம் செய்பவை பிறர் கருத்திற்கு மாறுபட்டிருப்பின் என் செய்வது? பிறரை மகிழ்விக்க வேண்டித் தமது உள்ளக் கிடைக்கைக்கு வேறுபட்ட ஒன்றைச் செய்ய உயர்குடி மக்கள் ஒருப்படுவரோ? "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்பது போன்ற பழமொழிகளைச் சுட்டி, 'உன் மனச்சான்று பல புகலும், எனினும் ஊர், உலகம் என்ன சொல்லுமென்பதைச் சற்று நினைத்துப்பார்' என்பர் சிலர். ஆனால் அவர்களில் ஊர், உலகம் என்பதற்குப் பொருளறியாது பேசுவோர் பலர். நெற்பயிர் வயலிற் புற்களை யிருப்பினும் புற்களையை நெற்பயிரென்று எவரும் கொள்ளார். அதுபோல ஊர், உலகில் வாழும் யாவரையும் அறிவுடையரென்று கொள்ள இயலாது. ஆகவேகூடுமானவரையில் மற்றையமக்களின் கருத்தொருமிக்கச் செயனிகழ்தல் நன்று; ஆனால் தாம் நன்றென்று கண்ட கொள்கைக்குப் பிறர் கருத்து முரண்படுமாயின் தாம் கண்ட நெறியைக் கடைப்பிடித்து இடையே இன்னல்கள் பல நேரிடினும் சலியாது முயன்று வெற்றி பெறலே ஆண்மைக்கழகாம்.

உலக வாழ்க்கையில் இவ்வகையான இடையூறு விளைவிக்கக் கூடியவைகள் பற்பல உள. இவைகளில் 'தீண்டாமையை ஒழித்தல்' என்பது தலைசிறந்து விளங்கும் நற்செய்கைகளில் ஒன்றாகும். இத்தகைய முயற்சியில் துன்பம் நேர்ந்துழி என் செய்வது என்ற ஏக்கத்தால் இளைத்த இளைஞர்கள் பலராவர். முதிர்ந்து தளர்ந்தவர்கள் இக்கட்டு விளைவிக்குஞ் செய்கைகளிற் றலையிடார். எவ்வகைத் துன்பத்திற்கும் தளராது முனைந்து நின்று வேலையை நிறைவேற்ற வேண்டுமென்ற ஊக்கமும் முயற்சியும் இளமைக்குரிய தன்மைகளாகும். இதனாற்றான் ஒரு பெரியார் "Hardening of the heart brings irreverence to the dreams of youth" என்று மொழிந்தார். நம்நாட்டிடை எத்தனை வகை இனப்பிரிவுகள் நிலவுகின்றனவோ அத்தனை வகையான தீண்டாமைகளும் பரவியிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றையுங் குறித்து ஈண்டுப் பேசுமாறில்லை. பொதுவாக, ஒரு கூட்டத்தவரை மற்றையோர் தீண்டாதிருத்தல் என்ற இழிதன்மை

யைக் குறித்தே தமிழ்த் தொண்டர்க்குந் தொண்டனாஞ் சிறிய னேன் சிறிது எழுதத் துணிந்தது.

மக்களாய்ப் பிறந்தாரிற் சிலர் தமக்குச் சீரும் செல்வமும் ஓங்கியிருந்த காலத்து நாட்டிடைப் பலவகுப்புக்களை உண்டாக்கி மக்கள் வாழ்க்கையில் அவ்வகுப்புக்கள் எண்ணிக்கை மீறிப் பெருகும்படி செய்துவிட்டனர். அவர்கள் எத்தகைய எண்ணங் களால் ஏவப்பட்டு இவ்வாறு செய்தனரோ? இத்தீய ஒழுக்கத் தால் விளைந்த கேட்டிற்கு அளவில்லை. இதைத் தீதெனக் கருதிக் களைவதை விடுத்து இஃதோர் உயர்ந்த நோக்கங் கொண்டு பிறந்ததென்பதும் இதற்கு நல்லிலக்கணங்கள் பல கற்பிப்பதும் சிலர் தன்மை. மேலான கருத்தோடே இது பிறந்திருப்பினு மென்? உயர்குடிப்பிறந்தாரொருவன் அடாத செய்யின் அவனை ஒறுத்தல் தகுதியன்றோ? நம் நாட்டிற் பிறந்து வளர்ந்து நமக்கு அல்லும் பகலும் உழைத்துவரும் கோடிக்கணக்கான ஒரு பெரும் பிரிவினரைத் தீண்டாதார் என இழித்துத் தள்ளி வைத்திருக்கிறோம். இஃது எந்த நாகரிகமுள்ள நாட்டிற் போற் றப்படும்? இவ்வகை நாகரிகமற்ற கொள்கைகளைக் கண்டியாது அவைகளுக்குச் சார்பாகச் சில (போலிச்) சமய கோட்பாடு களையும் எடுத்துக் காட்டுபவர் நம்மிடையிலிருப்பதாலன்றோ பிற மதத்தினர் இந்துமதத்தில் ஒருவகை ஒழுங்கான கோட் பாடுகள் கிடையாவென்றும், தப்பான பல கொள்கைகளை நம்பு வதே இந்துக்களின் சமயம் என்றும் அறைகின்றனர். பேயும் தன் செயலுக்கு மறைமொழிச் சான்று காட்டும், (Devil may quote the Scripture) என்ற பழமொழிக்கேற்ப எத்தகைய இழி செயலுக்கும் ஆன்றோர் நூல்களிலிருந்து சான்று கண்டு பிடித்துவிடலாம். முற்காலத்திலோ இக்காலத்திலோ பிறர் ஒன் றைக் குறித்து யாது சொல்லுகின்றனர் என்பதிலேயே கருத் தைச் செலுத்துகின்றோம். ஆனால் நம் மனச்சான்று யாது புகல் கின்றதென்பதைக் கேட்டறிவதில்லை. இங்கு 'மனம்' என்பதற் கும் 'மனச்சான்று' என்பதற்குமுள்ள வேற்றுமையை உணர வேண்டும். மனம் மக்களை எவ்வழியினுஞ் செலுத்தும்; அவர் கள் நல்வழியினின்று தவறும்போதெல்லாம் மனச்சான்று குறுக்கிட்டுத் தவறுகளை எடுத்துக்காட்டும்.

பிறரைத் தீண்டாத குலத்திற் பிறந்த ஓர் அம்மையார் தீண்டாச் சிறுமியொன்றைத் துணைகொண்டு தன் நண்பரகஞ் செல்லுங்காலை நெறியிடை அச்சிறுமகள் இடறிவீழ்ந்து அவள் நெற்றியில் சிறிது குருதி கண்டும், தீண்டாநோன்பு பூண்டொழு குபவராகலான், அப்பிள்ளைக்கு ஒருவகைத் துணையுஞ் செய்ய அவர்கள் உளமெழவில்லை. நண்பரகம் புக்க பின்னர்த் தம்

பேரருளால் ஏவப்பட்டு நடந்த செய்தியை அங்குளாருக்கறிவிக்க அவ்வில்வாழ் பெருந்தகையார் அவ்விளமகளைத் தம் மடிமீதிருத்திச் செய்வன செய்தார். தீண்டாக் குறுநெறியைப் பெரிதெனக் கொண்டொழுகும் பெண்ணைப் பிறந்த அவர்கள் உளமிருந்தவாறென்னே! அவர்களுக்கும மனச்சான்றுயென்ப தொன்றுண்டு. அஃது அவர்கள் உரம்பெற்ற உளத்தை வெல்ல முடியவில்லைபோலும்! உரமுண்டாக்கியது கொடிய பழக்கமேயாம். இப்பழக்கத்தைச் சிறிது சிறிதாய்ப் போக்குதற்குத் தக்க வழி தேடவேண்டுவது அறிஞர் கடமையாகும்.

தூய்மை காத்தற்பொருட்டுத் தீண்டாமை மேற்கொண்டொழுகுகின்றோமென்பர் ஒரு சாரார். இது சிறந்த கொள்கைதான். ஆனால் இவர்களிற் பெரும்பாலோருடைய தூய்மையைப் பார்க்குங்கால் நொண்டிக்குதிரையின் பண்பு நம் நினைவுக்கு வருகின்றது. இவர்கள் நீராடுதல், துணி வெளுத்தல், ஏனங் கழுவுதல், உண்டி கொள்ளுதல், வீடுவாயில்களைத் துப்புரவு செய்தல் முதலியவைகளைச் சிறிது உற்று நோக்குவோமாயின் யாவும் வெறுஞ் சடங்காய்த் தோற்றுமேயன்றித் தூய்மை சிறிதுந் தோன்றாது. தூய்மையுடையார் மாட்டு அஃதில்லான் அணுகத் தானே அஞ்சி விலகுவன். தீண்டாமையென்பது நம் வாழ்க்கையில் ஓர் சிறந்த கொள்கையாயிருக்குமளவும் தூய்மையில்லாதவன் தன்னைத் திருத்திக்கொள்ள ஒருவகை முயற்சியுஞ் செய்யான்.

மற்றொரு சாரார் மாடு தின்னும் புலையரைத் தீண்டுதற்றகாது என்பர். ஆனால் ஆடு கோழியருந்துபவர்க்கும் மாடு தின்பார்க்கும் எவ்வகை வேறுபாடு இவர்களுக்குப் புலனாகின்றதோ அறியேன்! உயிரிரக்கத்தால் மறக்கறி தவிர்த்து மரக்கறியருந்துபவர் மிகச் சிலர். மற்ற உயிர்களிடத்தில் இரக்கங்காட்ட நேர்ந்துழி இவர்கள் எவ்வாறு ஒழுகுகின்றனர் என்று கண்டவர்கள் இதன் கருத்தறிவர். (மரஞ் செடி கொடிகளுக்கு உயிருண்டென்று கண்டபின்னரே புலாலுண்ணமுற்பட்டவர் மேற்காட்டியவர்களினும் பன்மடங்கு குறைந்தவராவர்.) இதைக் குறித்து விரித்துப் பேச இங்கு இடமில்லை. ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் தண்மதியைச் செஞ்சடையணிந்த அம்பலவாணன் பேரருளுக்கு உரியரன்றோ?

வேறு சிலர் ‘முற்பகல் வினையால் இப்பகல் இடையூறுற்றவர்க்கு நாம் இரக்கம் பார்த்தல் தகாது’ என்பர். இடறி விழுந்தானைத் தூக்கி விடுதல் விழுமிய செயலேயாகும்; மதியின்மை

யால் விழுந்தானென்று விலகி நிற்றல் மக்கட்டன்மைக்கு மாறுபட்டதாகும். ஒவ்வொரு நாளும் இறைவனைத் தொழுங்கால் 'பொல்லாத சேயெனினும் தாய் தள்ளல் நீதமோ புகலிடம் பிறிதுமுண்டோ?' 'இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனுனும் உனை இடைவிட்டு நின்ற துண்டோ, என்று நீ யன்று நானுன் னடிமையல்லவோ யாதேனு மறியா வெறுந் துரும்பனேனென் னினும் தொண்டரோடு கூட்டு கண்டாய்' என்று உருக உருகப் பாடியழுகின்றோமே, இதன் பொருளென்னை? 'பிறர் குற்றங்களையும் கடன்களையும் நாங்கள் பொறுத்தருளல் போல எங்கள் குறைகளையும் கடன்களையும் பொறுத்தாண்டருளும்' என்று உயிர் இறையைநோக்கித்தொழுகின்ற விவிலியமறைமொழியையும் இங்குக் கூர்ந்து நோக்குவோமாக.

ஏழை மக்கள்! அவர்களை நாம் காண்டலுந் தீது; நம் கோயில் மடங்களுள்ள தெருக்களிலும் அவர்கள் செல்லொணாது. நன்னெறி புகட்டும் கழக வாயிலிலும் அவர்கள் அடிவைத்தலாகாது. எங்ஙனம் பிழைப்பர் எளியர்! அந்தோ, அவர்கள் கரையேறும் வழியாது! அவர்கள் இந்நாட்டில் இம் மக்களிடைத் துன்புறுவதை விட வேறு நாடு சென்று பிற சமயம் புகுந்து புகழுடன் வாழ்தல் நன்றென்று ஓடுகின்றனர். இத்தீண்டா வகுப்பினர் ஒருநாளைக்கு இருளன், காட்டேரி, காத்தவராயனையும் மற்றொரு நாள் மாரி, காளியையும் பிறிதோரமயம் பிறவுமாகத் தொழுவர். இந்து மதத்தின் உண்மையான உயரிய கொள்கைகளை அவர்கள் அறிதற்கில்லை. இந்நிலையில் புறச்சமயிகள் தாங்கள் போற்றும் உயர்ந்த கொள்கைகளை அவர்களுக்கெடுத்துக்காட்டி நல்வழி புகுத்த முற்படுவாராயினர். 'யாவருக்குங் கடவுளொருவர், அவர் அருளுடையார், திருவுடையர்; எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர், யாவும் அறிவர், அவருக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு இஃது; நெருப்பிலிட்டுருக்கிச் செம்பொன்னை விளக்கமுறுவிப்பது போல் உயிர்களை உலகவாழ்க்கையில் ஈடுபடச்செய்து அவர்கள் மலத்தைக்களைந்து ஆண்டு கொள்ளுதல் ஆண்டவன் தன்மை' என்றிவ்வாறுகப் பல செம்பொருள்களைக் கற்பித்து மேம்படச் செய்த மேனாட்டார் அருளை நாம் வியந்து போற்றல் வேண்டும். பிறசமயிகளை நாம் புறங்கூறல் மிகத்தவறு. நான் பகைத்து வெளியே தள்ளிய என் உடன்பிறந்தானுக்கு அயல் வீட்டானொருவன் சோறுங்கூறையும் அளித்துக்காப்பானாயின், அக்காப்பாற்றினவன் எவ்வாறு குற்றத்திற்காளாவான்? என்னிடம் யாவுமிருந்தும் என்ன பயன்? "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது" என்ற திருவள்ளுவர்

மொழியை உள்ளுவோமாக. நாயன்மார்கள், ஆழ்வார்கள், திருவள்ளுவர், அருளொளி வள்ளலார், தாயுமானுர், இராம கிருட்டின பரமஹம்சர், மகாத்துமா காந்தி முதலியோர் திரு வுருவப்படம்வைத்தும்பூமாலைசூட்டிப் பாடியாடியுந்தொழுவார், நாட்டுப்பற்று மொழிப்பற்று சமயப்பற்று என்று பறை சாற் றுவர்; தம் மதம் எம்மதத்தினுஞ் சிறந்த தென்று புகழ்ந்து பேசுவர். ஆனுல் அப்பெரியார்கள் மொழிகளைச் சிறிதேனும் நினையார்கள், இவர்கள் உயர்வும் சிறப்பும் அன்பும் இவர்க ளுடைய வாழ்க்கையினின்று அளந்தறியப்படுமென்பதை அறி யார்கள் போலும்!

தீண்டாமையை யொழிக்கச் சைவ வைணவப் பெரியார் களிற் சிலர் செய்யும் முயற்சி மிகவும் போற்றற்குரியது. நம் சமயங்கள் இக்கொள்கைக்கு எப்பொழுதும் இடந்தந்தில தென் பதை என் போன்ருர் எடுத்துக்காட்டுதல் மிகையாகும். சீரிய இந்நல்லறமாற்றும பெரியார் சீருடனும் பேருடனும் புகழொளி பரப்பித் திகழ்வார்களாக.

புனிதவதியார்

[T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A]

பெரியபுராணத் தலைவியர்களுள் புனிதவதியார் மிகச் சிறந்தவர். அவர் காரைக்காலிலே வணிக குலத்திலே தன தத்தனுருக்குத் திருமகளாகப் பிறந்தார். மிக இளையராக இருக்கும்போதே இறைவனடிக்கு இடையருப் பேரன்பு கொண்டார். அவருக்கு வயது முதிர, சிவபெருமானிடத்துப் பேரன்பும் முதிர்ந்தது. வயது முதிர்ந்து மங்கைப் பருவத்தை அடைந்தனர். உறுப்பு நூலவர் நல்லன புகழ்ந்து கூறும் எல்லா இலக்கணங்களும் நிரம்பப் பெற்றுப் பேரெழில் மிக்கா ராயினுர். மங்கைப் பருவம் எய்தவே அவர் தந்தையார் அவரை மகட்பேசி வந்த முதியோரிடம் பரமதத்தனுருக்குப் புனிதவதியாரை மணம் செய்து கொடுக்க உடன்பட்டார். பின்பு புனிதவதியாருக்கும், பரமதத்தனுருக்கும் திருமணம் நடந்தது.

புனிதவதியாரும் இறைவன் மாட்டும், அவனடியாரிடத் தும், மற்றும் விருந்தினரிடத்தும் அன்பும் ஆதரவும் காட்டி

இல்லறத்தை மிகத் திறம்பட நடத்திவந்தார். மனையறம் நடத்தி வந்தாராயினும் புனிதவதியார் சிவனடியாரைக் கண்டவிடத்து அவரைச் சிவனெனவே கொண்டு அவரை வழிபட்டு நல்ல திருவமுதளித்துச் செம்பொன் நவமணியும் அவ்வடியார் கூறுமுன்னமே யளித்து உவப்பித்து வந்தார். பரமதத்தனாரும் தம் வாணிபத்தை வாய்மையினின்று சிறிதும் திறம்பாது வளம் பெற நடத்தி வந்தார். அப்படி வாணிபத்தை நடத்திவரும் போது ஒருநாள் அவரிடத்து வந்த சிலர் கையுறையாக இரண்டு மாங்கனிகளைக் கொண்டுவந்து அவருக்குக் கொடுத்தார்கள். அவற்றை வாங்கிப் பரமதத்தனார் தன்வீட்டிற் கொண்டுபோய்க் கொடுத்து விடும்படி ஏவினார். அவ்விரு மாங்கனிகளையும் பெற்றுச் சேமித்து வைத்தார்.

இதற்குள் அடியாரொருவர் பசிப் பிணியால் வருந்தி உணவில் மிகவும் வேட்கை கொண்டு புனிதவதியாரிடத்து வந்தார். “ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்” என்னும் பொய்யாமொழிக்கிணங்க,அப் பெரியார் பசித்திருப்பதைக் கண்டு பொறாதாராய்த் திருவமுது சமைக்கப்பட் டிருப்பினும் கறியமுது ஆக்கப்படாததைக் கண்டு அடியவரை விரைவில் திருவமுதூட்டுவான் வேண்டி அன்னம் படைத்துத் தம் கணவரால் அனுப்பப்பட்ட மாங்கனிகள் இரண்டில் ஒன்றையும் அவருக்குப் படைத்துத் திருவமுதூட்டினார்.

அடியார் அமுதுண்டு சென்ற பின்னை பரமதத்தனார் புனலாடி உணவு கொள்ளும் பொருட்டுத் தன் வீட்டிற்கு வந்தார். புனிதவதியார் தம் கணவனாருக்குத் திருவமுது படைத்து அம் மாங்கனிகளில் எஞ்சிய தொன்றையும் படைத்தார். அம்மாங்கனியின் சுவை மிக இனிமையாக இருப்பதைக் கண்டு தாம் கொடுத்தனுப்பிய மாங்கனிகளுள் மற்றொன்று அடியாருக்குப் படைக்கப்பட்டதை அறியாதாராய் மற்றொரு மாங்கனியையும் படைக்கும்படி தம் மனைவியாரை ஏவினார். உடனே புனிதவதியார் அம்மாங்கனியில் தம் கணவனாருக்குள்ள விழைவை அறிந்து செய்வதின்னதென்று அறியாதவராய் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து வீட்டினுட் சென்றார். ஆனால் மாங்கனிக்கு அவர் அங்கு என் செய்வார்? மாங்கனிமேல் ஆசைகொண்ட தம் கணவனாருக்கு அக்கனி இல்லையென்று சொல்லுதற்கு மனம் ஒருப்படாராய் இறைவன் திருவடிகளையே சரணாகக் கொண்டு தம்மை முற்றிலும் மறந்து “இறைவனே ! மாங்கனி ஒன்று தருதல் வேண்டும்” என்று விண்ணப்பித்தார். இறைவன் திருவருளால் அருமருந்தன்ன மாங்கனி யொன்று அவர் திருக்கரத்தில் வந்தெய்தியது. அதனை விரைந்து கொண்டு

சென்று தம் கணவனுருக்குப் படைத்தார். அதன் சுவையினை ஆர்ந்த பரமதத்தனுர் அக்கனி தாம் முன்னர்க் கொடுத்த கனி இல்லை என்றும் தேவருலகத்திலும் தேடக்கிடையா அருங்கனி என்றும் தெளிந்து தம் மனைவியாரை நோக்கி "இக்கனியை நீ எங்குப் பெற்முய்?" என வினவினுர். வினவலுற்ற தம் கணவனுருக்கு, மெய் பேசுதலும் வேண்டும். இறைவன் தம்பாற் காட்டிய பேரருட்டிறத்தின் தன்மையையும் விளம்பாதிருத்தல் வேண்டும். அவ்விரண்டுள் இன்னது செய்வதென்று அறியாதாராய்ச் சிறிது திகைத்துக் 'கணவனுர் சொல் திறம்பாமையே கற்பு' என்னும் முதுமொழியைப் பின்பற்றிப் புகுந்தவாறெல்லாம் எஞ்சாது மொழிந்தார். புகுந்ததனை மொழியக் கேட்ட பரமதத்தனுருக்குச் சிறிது ஐயம் நிகழ்ந்தது. உடனே தம் மனைவியாரை நோக்கி "நீ சொல்வது மெய்யேயாயின் மற்றும் ஓர் மாங்கனி நீ எனக்குத் தருதல் வேண்டும். தருவாயேல் நீ கூறியது உண்மையாம்" எனக் கூறினுர். இதனைக் கேட்ட புனிதவதியார் மீண்டும் இறைவன் திருவடிகளைத் தம் நெஞ்சில் வழுத்திச் "சிவபெருமானே! இன்னும் ஓர் மாங்கனி எனக்கு நீ தந்தருளல் வேண்டும். தாராயேல் என்மொழி பொய்படும். ஆதலின் தந்தருள்க" என இறைவன்பால் விண்ணப்பஞ் செய்தார். அவ் விண்ணப்பத்திற் கிரங்கிச் சிவபெருமான் மற்றொரு மாங்கனி அளித்தார். அதனைத் தம் கரத்தே பெற்ற புனிதவதியார் விரைந்து சென்று ஐயுற்ற தம் கணவனுர் கரமீதளித்தார். அதனை வாங்கிய பரமதத்தனுரும் மிக வியப்படைந்தார். தம் கையில் மாங்கனியை ஏந்திக்கொண் டிருக்கும்போதே அது மறைந்து போவதைக்கண்டு அச்சம் எய்தித் தம் மனைவியார் ஓர் மகள் அல்லர் என்றும், அவர் அணங்கே என்றும் துணிந்தார். அவ்வணங்கோடு உடனுறைதற்கஞ்சி அவரை நீத்துப் பிரிவதற்குச் சூழ்ந்தார்.

பரமதத்தனுர் தம் உற்ருரையும் ஏவலாளரையும் அழைத்து மரக்கலம் பல சமைக்கச் சொல்லி அம் மரக்கலங்களில் பண்டங்கள் பலவற்றை ஏற்றி, கடல் கடந்து, வேற்று நாட்டிற்குச் சென்று, அங்கு வாணிபம் செய்து, பெரும் பொருள் ஈட்டி, மீண்டும் மரக்கலம் ஏறிக் கன்னி நாட்டில் ஓர் பட்டினம் சேர்ந்தார். ஆங்குத் தம் குலத்திற் கேற்ற மங்கை ஒருத்தியை மணம் செய்துகொண்டார். அவளிடத்துப் பிறந்த தலைமகளுக்குத் தாம் அணங்கெனக் கருதிய முதன் மனைவியாரின் பெயரைச் சூட்டினுர். ஆகவே கன்னி நாட்டோர் பட்டினத்தில் மெய்ந்நெறியில் ஈட்டிய செல்வத்தின் பயனைப் பரமதத்தனுர் தம் இளைய மனைவியொடும், மக்களொடும் துய்த்து வந்தார்.

இக்காலத்திலெல்லாம் அன்புடனும், அறத்துடனும் புனிதவதியார் மனையறம் நடத்திவந்தார். காரைக்காலிலுள்ள அவரது சுற்றத்தார் பரமதத்தனார் மறுமணம் செய்துகொண்டு மிக்க திருவுடனும், களிப்புடனும் வாழ்ந்து வந்த செய்தியை அறிந்தார். புனிதவதியாரையும் அவர் கணவனாரிடம் தண்டமிழ் நாட்டிற்கு அழைத்துச் செல்லக் கருதி அவரைச் சிவிகை மீதேற்றிக் கன்னிநாட்டில் பரமதத்தனார் வாழும் பட்டினத்தில் கொண்டுய்த்தார்கள். புனிதவதியார் வரவைக் கேட்ட பரமதத்தனார் தம் இளைய மனைவியையும் மக்களையும் அழைத்துக் கொண்டு அவர்பாற் சென்று அவர் அடிமீது வீழ்ந்து, தாமும் வணங்கி, மக்களையும் மனைவியையும் வணங்கச்செய்து, அவரை நோக்கி, "அம்மையே உம்முடைய திருப் பெயரையே என தருமை மகளுக்குச் சூட்டியுள்ளேன்" எனச் சொல்லி, அங்கு நின்றார் பலரையும் விளித்து "இவர் பெண் அல்லர்; பேரணங்காவர். நீவிரும் இவர் திருவடி வணங்குமின்" எனப்புகன்றார். இதைக் கேட்ட சுற்றத்தாரும், பிறரும் பரமதத்தன் செய்கையை நோக்கி எள்ளி இவன் செய்கை இருந்தவாறென்னே என்று நகை செய்தார்கள். தம்மைத் தம் கணவனார் வணங்குவதைக் கண்ட புனிதவதியார் அவரது உள்ளக் கிடையை நன்குணர்ந்தவராய் "ஈங்கிவர் கொள்கை யீது; இவருக்காக இவ்வுடலைப் பேணிவந்தேன். இனி இவ்வுடல் நலத்தால் ஆம் பயன் ஒன்றும் இல்லை. ஆதலால் சிவனே! இவ்வுடலைப் போக்கி நின் திருவடி என்றும் கண்டுகளித்தற்குக் கருவியான பேயுடம்பை எனக்குத் தந்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தார். புனிதவதியாரும் பெண்ணுடம்பை விட்டு எற்புடம்பாம் பேயுடம்பை எய்தினார். இறைவன் ஆடும் கழலைக் கண்டு களிக்கும் சிவகணத்தில் தாம் ஒன்றானமையைக் குறித்து மகிழ்ந்து பாடினார். அற்புதத்திருவந்தாதியும் அருளினார்.

கண்டாருட் சிலர் அவர் தோற்றத்தைக் கண்டு அச்சமெய்தினார். சிலர் அவ்வுருவத்தைக் கண்டு எள்ளி நகையாடினர். இதனை அறிந்த புனிதவதியார் இப்பேயுடம்பால் இறைவனைக் காணுதல் எளிதில் இயலுமெனின் பிறரெல்லாம் எள்ளிலென், ஏத்திலென் என்று மனத்துட்கொண்டு இறைவன் திருவடியைக் காண ஆசைகொண்டார். வடதிசைத் தேசமெல்லாம் விரைவிற்சென்று செஞ்சடைவானவர் திருக்கோலங் கொண்டுள்ள திருக்கயிலையைக் கண்டுவணங்கும் கருத்துடையராய்க் கைலையை நோக்கிச் சென்றார். தேவதேவன் திருக் கயிலையை அணுகவும் அத்தூய இடங்களில் காலினால் நடத்தல் ஒண்ணாதெனக் கருதிக் காலினால் நடத்தலைத் தவிர்ந்து தலையினால் நடக்கத் தலைப்பட்டார். இங்ஙனம் தலையினால் நடந்து சென்று செம்மலையாம்

சிவபெருமான் வீற்றிருக்கும் வெள்ளிமலையின்மீது தலையினால் ஏறும்போது பேருவகை கொண்டார். இறைவன் உடலிடங் கொண்ட உமையம்மையார் திருக்கண்ணோக்கம் செய்தருளி னார். இமையவல்லியாரும் வியந்து, இறைவனை நோக்கி வணங்கி, "கண்டார் என்னையும் உருக்கும் அன்போடு வரும் இவ்வெற்பின் யாக்கை என்னே," என்று வினவினார். இறை வனும் "உமையே! இங்கு வருபவள் நம்மைப்பேணும் அம்மை காண்! போற்றற்குரிய இவ்வடிவம் அரிதில் எம்மை வேண்டிப் பெற்றனள்" என்று விடை பகர்ந்து, இதற்குள் நணுகிய புனித வதியாரை நோக்கி, "உலகமெல்லாம போற்றி உய்தற்குரிய செவ்விய மொழியாகிய அம்மையே!" என்னும் திருமொழி யால் அழைத்தார்.

மறைமொழிந்த தூவாயால் "அம்மையே!" என அழைக்கப் பெற்ற புனிதவதியாரும் இறைவனை நோக்கி "அப்பனே!" என் றரற்றி அவன் திருவடிமிசை வீழ்ந்து பணிந்தெழுந்தார். இறை வனும் அவரை நோக்கி "உமக்கு எம்பால் வேண்டுவதென்ன?" என்று வினவ, புனிதவதியாரும் இறைஞ்சி நின்று கூறுவார். "ஐயனே! நின்மாட்டு என்றும் அழிவில்லாததும், இன்பத்திற் கே காரணமானதும் ஆகிய தலையாய அன்பு வேண்டும்; யான் பிறவாதிருத்தல் வேண்டும்; ஒருகால் பிறப்பு உண்டெனில் மீண்டும் பிறந்தும், உன்னை என்றும் மறவாதிருத்தல் வேண் டும்; அறவாழி அந்தணனே! நீ உன் திருவடி எடுத்தாடும் போது அவ்வாடுங் கழற்கீழிருந்து நான் மகிழ்ந்துன்னைப் பாடு தலும் வேண்டும்" என்று விண்ணப்பித்தார். கரவறியாது பரவுவார்க்குக் களைகண்ணும் இருட்கடுவுண்ட கடவுள் அவர் உட்கிடையை நிரப்புமாறு திருவுளங்கொண்டு "தென்திசை யிலே மூதூராகிய திருவாலங்காட்டிலே நாம் திருநடம் செய் கின்றோம். ஆண்டு நீ என்னை யடைந்து கழிபே ருவகையுடன் எம்மைப் பாடுவாய்" எனப் பணித்தருளினர். அங்ஙனம் திரு வருள் நோக்கம்பெற்ற அம்மையாரும் வேதநாயகனாரிடம் விடைபெற்று வணங்கித் தலையினால் நடந்து சொல்லொணாப் பேரன்பினால் தூண்டப்பெற்றுத் திருவாலங்காட்டை அடைந் தார். ஆலங்காட்டில் ஆடும் கடவுள் திருக்கோலங்கண்டு மூத்த பதிகத்தாற் போற்றினார். அங்ஙனம அவர் திருநடனம் போற்றுகின்ற நாளிலே "எட்டி இலவம் ஈகை" என்ற. திருப் பதிகம் பாடினார். பேரருள் வள்ளலாராம் பிறைசூடிப் பிஞ்ஞக னார் திருக்கூத் துவந்து என்று மவன் திருவடிக் கீழ்ப் பாடு கின்ற பெரும்பேறுடன் விளங்குகின்றார் புனிதவதியார். சுருங் கக் கூறின் புனிதவதியார் மெய்ச்சரிதம் மேற்கூறியவாறும்.

(தொடரும்)

மண வாழ்க்கை*

[காழி. சிவ. கண்ணுசாமி B.A.]

மணமது பூண்டு மக்களைப் பயந்தோன் மலருறை மங்கை முன் மண்டியிட்டோனாவன்; என்னை? அறவழியானோ, மறவழியானோ அவனாற்ற முயலும் எவ்வொரு செயற்கும் அம் மனைவியும் மக்களும் காற்கட்டாவராகலின். மக்கட் குழுவிற்குப் பீடும் பெரும் பயனு மளிக்கவல்லதாயுள்ள பெரும்பாலனவான நன்முயற்சிகள் மணங்கதுவாமைந்தர் மாட்டேயோ அன்றி மகப்பேறெய்தா மக்கண் மாட்டேயோதான் காணப்படுகின்றன. மண்ணிடைத் தோன்றிய மக்கட்குழுவையே கண்ணினுமரிய கற்புடைப் பெண்டிராகவும், செல்வப் புதல்வர்களாகவுங் கருதி அவர்கள் தம் அன்பையும் உடைமையையும் அளிக்கவிழைந்தனர் போலும்!

எனினும், மகப் பேறடைந்த மாண்பினர் பின்வரப் போவது குறித்து முன்னரே அரண்கோல முயல்வதே சால்புடைத்தாகும் என்னை? பெறற்கரிய பேறாகிய தம் மக்களை எதிர் காலத்திற்கே ஒப்படைத்துச் செல்ல வேண்டுமென்பதையவர்கள் உணர்வாரன்றோ? இஃதுணர்ந்தும் மணமுடியப்பெறா ஒரு சிலர், "நாளை நாளை யென்பீராகில் நமன் வருநாளை யாரே யறிவர்? ஆகலின் இன்றைப் பாட்டை இன்றுடன் கழிக்க" என்று முடிவு கட்டித் தன்னலம் ஒன்றிலேயே முனைந்து நின்று வாழ்ந்து வருதலைக் காணலாம். இன்னும் ஒரு சிலர் மனைவியும் மக்களும் அரும்பாடுழந்து ஈட்டிய பொருட் குவியலுக்குச் செலவு வைத்துச் சிதைக்க வந்த விலைப்பட்டிகள் என்று கருதுகின்றனர். மற்றும் பெரும் பொருள் படைத்தும் மேலும் மேலும் பொருளீட்டலே தம் பிறவிக் கடன் எனக்கொண்ட ஒரு சிலரோ மகப்பேறு பெறாதிருப்பதே பெரும் பேறாகும் எனக் கூறித்திரிகின்றனர். தாம் படைத்த பொருட் குவியலுக்கு மக்களாலாகும் செலவேதும் எய்துவதில்லையென்ற களிப்பினாற்போலும் அவர்கள் அவ்வாறு கூறுவது? என்னே அவர்கள் அறிவிருந்தவாறு! "இன்னோன் பெரும் பொருள் படைத்தோன்" என ஒருவர் கூற அது கேட்ட மற்றொருவர்

*இது பேக்கனாரின் கட்டுரைகளினின்று மொழி பெயர்க்கப் பட்டதாகும்.

"படைத்துமென்? ஒன்று பத்தாய்க் குழந்தைகளைப் பெற்றிருக்கிறான் என்பதை மறந்தீர்போலும்" என அம்மக்களால் ஏதோ பொருட்குறைவேற்படுவது திண்ணம் எனக் கருதியார்போன்று இடை மறித்துக் கூறியதை அவர்கள் ஒருகால் செவி மடுத்தனரோ?

இது நிற்க, மணம் புணராத் தனி வாழ்க்கைக்குக் கட்டுப்பாடு வெறுத்த தன்னிச்சை யுணர்ச்சியே முக்கிய காரணமாயமையும். கச்சையுங் கழலுங் கடிதளையெனக்கருதும் நெஞ்சப்போக்குடன் தன்னையே மெச்சித்திரியும் தகைமையோர் மாட்டு இது பெரிதுங் காணக்கிடப்பதாகும். மணமுடியா வாழ்க்கையோர் நனிசிறந்த நட்பினராவர். தண்ணளி சிறந்த தலைவராவர்; நன்றி மறவா ஏவலாளராவர். அற்றேல், இறையன்பு பூண்ட நற்குடிகளாவர் எனக்கூற லொண்ணுமோ வெனின், ஒல்லாது. என்னை? ஈர்த்துப் பிணிக்கும் பற்றேது மற்றிருப்பதால் இம்மென்னு முன்னே தன்னாடு துறக்குஞ் செவ்வி வாய்ந்தோராயிருக்கின்றனராகலின். எண்ணிறந்த பல சிறைக்கைதிகள் மணமுடியாதவர்களாகவே காணப்படுவதும் ஈண்டுக கூர்த்து உணரற்பாற்று.

இனி, கடவுட்பணியாற்றுங் குருமார் மண மொழித்து வாழ்வதே மாண்புடைத்தாகும் என்னை? மடு நிறைவுறினன்றோ தோட்டத்திற்கு நீர் பாய்தல் கூடும்? தன்வயிறும் தன்னைச்சேர்ந்தோர் வயிறுகளும் நிறைந்த பின்னரன்றோ 'தானமுந் தருமமும் இயலும்? மணமுடிவினால் நீதியாளர் தம் வாழ்வில் உண்டாகும் வேறுபாடியாதுமில்லை. என்னை? நடுவிகந்து நன்பொருளீட்டத் துணிவரேல் அவர்களுக்கு அத்துறையில் அவர்தம் மனைவியரிலும் ஏவலாளரே உறுதுணையாய்ப் பதின்மடங்கு உதவி புரிவராகலின். ஆயின் போரெனிற் புகலும் புனைகழல் வீரர்க்கு ஊக்கமளிப்பான் புகுந்த தலைவன் எடுத்துப் பகர்வது அவர்தம் மனைவி மக்களின் நிலைமையையேயாகும்.

இனி, மனைவி மக்களே மக்கட் குழூஉவின் ஒழுக்கத்தைப் பண்படுத்துவா னமைக்கப்பட்ட இயற்கைத் திட்டம் என்று கூறுதல் மிகையாகாது. மணமிலா ஆடவர் தம் பொருட்பெருக்கத்தினாலும், மணவாழ்க்கைச் செலவின்மையாலும் பல்வகைத்தாய அறமுயற்சிகளில் ஈடுபடுவோராகக் காணப்படினும் பெரும்பாலும் அவர்கள் இரக்கமற்ற கண்டிப்பான நெஞ்சப்போக்குடையோராகவே காணப்படுகின்றனர். இஃது, அவர்கண் மாட்டு இயற்கையிலேயே அமைந்து கிடக்கும் உள்ளீரம்

(மணமுடியாததனால்) வெளிவர வழியற்று வற்றிப்போவதாற் போலும்! கருமமே கண்ணாயிருக்கும் கடி நெஞ்சுடையோரிற் பெரும்பான்மையோர் பழக்க வழக்கங்களை யொட்டியே வாழ வேண்டு மென்ற துணிவு கொண்டிருப்பதால், பிறர்மனை நயவாப் பெற்றியராயும், பண்டுபோ லென்றுங் குறையாக் காதல் பூண்ட கணவன்மார்களாயு மிருக்கக் காணலாம். அன்றேல் தான் வீழும் மென்றோட்டுயிலின் இனிது தாமரைக் கண்ணா னுலகு அன்றி என்று பிறவா நிலைமை எனக் கருதியான் போன்று ஒரு கிரேக்க வீரன் 1 நடந்து கொண்டதாக ஒரு கதை நிலவுமோ?

கற்புடை மகளிர் பெரிதுந் தலை வணங்காப் பெருமிதத் துடனும், தன்னிச்சை மிகுத்துமே இருப்பதுபோலக் காணப் படுவர்; கணவனையன்றி வேறோர் இற்புறத்தவனை நாடாத் தம் பொற்புறு பண்பின் உயர்வு கருதியே போலு மஃது! நந்தங் கணவன் நல்லறிவு படைத்தோனெனக் கருதி யிருப்பதே படி சொற் கடவாத பாவையின் பண்பும், அவள் தன்னரும் பெறற் கற்பிற் கணிகலமுமாகும். ஆயினும் அவ்வாறு அவள் கருதி யிருத்தலை வேண்டின், அவள் கணவன் அவள் கற்பின் மாட்சி யில் அளக்கலாகா அளவும் துளக்கலாகா நிலையியதுமான நம் பிக்கையுங் கொண்டவனாயிருத்தல் வேண்டும். இனி, மனைவி யர், காளைப் பருவத்தினர்க்கும் காமக்கிழத்தியர்; மூப்பு நெருங்குவோருக்கு யாப்புறு நட்பினர்; முதுமை யடைந் தோர்க்கு உற்ற பணியாளர். எனவே ஏற்ற பெற்றி மண முடிப் பல் என ஒருவன் இதுகொண்டு கூறலாமன்றோ? ஆயினும் "நீ மணமுடிப்பது எக்காலம்?" எனக் கேட்ட கேள்விக்கு "ஓ! இளமை சான்ற வயதினேன்! இப்பொழுது வேண்டாம்; முதுமை நெருங்கினேன், வேண்டவே வேண்டாம்" எனப் பதிற் கூறிய ஒருவர் 2 அறிவாளியாகவே கருதப்படுகின்றனர்.

பொருளின் பிண்டக் கருத்து.

மணம் பெருமுயற்சிகளைத் தடுக்கும் காற்கட்டாகும்; அன் றியும் அது செலவையும் தன்னிச்சையைக் குறைக்கும் கட்டுப் பாட்டையு மளிப்பதாகக் கருதப்படுகிறது.

மணங் கருதுவா மைந்தர் தேர்ந்த நட்பினராவர், சிறந்த தலைவராவர், நன்றிபூண்ட ஏவலாளராவர், அறச்செயலாற்றும் குருமாராவர். ஆனால் இறையன்பு பூண்ட நற்குடிகளாகார்.

மணம் மக்கட் குழூஉவின் ஒழுக்கத்தைப் பண்படுத்தும் இயற்கைத் திட்டமாகும்; அன்பு வெளிப்படும் நல்லாறுகும். மனைமாண்ட வாழ்க்கைத் துணைவி யொருவனது வாழ்வு முழுவதிலும் பன்னெறியிற் பயன்படுவோளாவாள்;

மேற்கோள்

1 பெண் கொண்டாயோ பேய் கொண்டாயோ ?

2 கலியாண மென்பது காற்கட்டு. வழக்காறு

3 மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னும் - விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு. நாலடியார்

4 அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையு—மின்னனைய
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண். நீதிவெண்பா

5 பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

6 மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு. குறள்

குறிப்பு:—1. கிரேக்க நாட்டு வீரனுகிய யூலிஸீஸ் என்பவன் டராய் நகரில் போர்நடத்தி ஊர்திரும்புங்கால் இருபதாண்டு இடைவழியிற் பல இடுக்கணுழந்தமை ஹோமர் என்னும் புலவர் எழுதிய "ஒடிஸ்ஸி" என்னும் நூலிற் காணப்படும். அவ்விருபதாண்டுகளிற் பெரும் பகுதியை யூலிஸீஸ் காலிப்ஸோ என்னும் ஒரு தெய்வ அணங்கோடு கழித்ததாகவும் அவள் இறவா வரமும் மூவா இளமையும் அளிப்பதாக எவ்வளவோ கூறியும் அதைப் பொருட்படுத்தாது கிழ வயதினளாகிய பெனிலோப்பி என்ற தன் மனைவியையே எக்காலமும் நினைத்திருந்து உயிரையும் பொருட்படுத்தாமல் கடல் வழி தப்பி மனைவி மாட்டு வந்து சேர்ந்ததாக அந்நூலிற் கூறப்பட்டிருப்பதே இங்குக் குறிக்கப்பட்டதாகும்,

2. கிரீஸ் நாட்டு எழு முனிவர்களில் ஒருவராகிய தேல்ஸ் என்பவர் மணக்கவேண்டுமென்று தன்னை வற்புறுத்தியபோது தன் தாய்க்கு அவர் இவ்வாறே பதிலளித்ததாகக் கூறப்படுகின்றது.

ஒருவழித் தணத்தல்

ஒருவழித் தணத்தல்

[இளவழகனார்]

பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே.

(சிலப்பதிகாரம், எ: கச)

'சோலையிலுள்ள நல்ல மலரும், அம்மலர்களினுடைய புது மணம் விரிந்த மணலிடமும், ஆங்குக் கண்ட என் அருமைத் தலைவியின் தீங்கில்லாத இன்சொல்லும், இடமகன்று பருத்த இளம்பதமான அழகிய கொங்கைகளும், முழுமதிக்கு நிகரான திருமுகமும், வளைந்து நெளிகின்ற வில் போன்ற இரண்டு புருவங்களும், எழுதுதற்கு அருமையான மின்னலை யொத்த இடையுமே என்னை மயங்க வைத்து இவ்வாறு இடர் செய்தவையாகு' மென்க.

'புதுமணம்' என்று மேலே வருதலின், 'நறுமல' ரென்பதற்கு நல்லமலரென்று பொருளுரைக்கப்பட்டது. நறுமை, நன்மை; 'நல்ல' வென்பது இங்கு நிறமமைந்த அழகின்மே னின்றது. புது மணம் -அன்று பூத்த பூவின் நறுமணம். மணல், மணலுள்ள இடத்திற்கு ஆகுபெயர். திருமொழி - அழகிய மொழி; மொழிக்கு அழகாவது இனிமையாதலின், அஃது 'இன்சொல்' என்னும் பொருளுணர்த்திற்று. முரிதல் - வளை தல்; நெளிதலுமாம. எனவே இவ்விரண்டினையுமே சேர்த்து 'வளைந்து நெளித' லென்று பொருளுரைத்துக் கொள்க. தலைவன் தலைவியர் கூடும்போது தலைவிக்கு இவ்வாறு புருவ வில் வளைந்து நெளித லுண்மையை,

"முழுதும் மெய்ந்நலம் மூழ்கலின் நீர்சுமந்து
எழுது கண்இரங் கப்புரு வக்கோடி
தொழுவ போன்முரி ய"*

று

என்று சீவக சிந்தாமணியுங் கூறும். புரு-கடைக்குறை. 'எழுதாிதனை பதை 'எழுத அரும்' என்று பிரிக்க. இவ்வாறே பிரித்துத் ' அருமையான' வென்று உரைகூறலு மொன்று. எழுதல் - தோன்போக்

மின்னல் மாதரிடைக்குத் தொழிலுவமை; அஃதாவது றை அத் தோன்றி உடனே மறைதலுமாம்; இங்ஙனமே அம் மா இடையும் துவண்டொசிதலும், தெரிந்துந் தெரியாதிருத்த காண்க. ஏகாரங்கள்-எண்.

எனவே 'மலரே மணலே மொழியே முலையே இடையே எனை இடர்செய்தவையே' என்று தல

* சிந், முத்தியி, எஉ

செய்தவற்றை நீடு நினைந்து ஒருவழித் தணந்து ஓரிடத்திருக்கின்றானென்று இதனைக் கொள்கவென்பது. மலரே மணலேயென்று இங்ஙனமிவண் எடுத்துக்கொள்ளப்பட்ட கருத்துக்களும் அவற்று இசைகளுமே

"வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவள் திரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
இளையவ ளிணைமுலையே யெனையிடர் செய்தவையே"*

என்று முரித்து முரித்துப் பாடப்படு மியல்பினவாமாதலின், அவ்வாறு முரித்துப் பாடப்பட்டு வரும் இவ்வகை வரிப்பாட்டுகள் முரிவரி யெனப் படும். இதுவே,

"எடுத்த இயலும் இசையும் தம்மின்
முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே"†

என்று முன்னையாசிரியன்மாரால் கூறப்படுவதாயிற் றென்க.

இனி, களவு நல்லொழுக்கத்திலேயே கருத்தீர்க்கப்பட்டுப் பகலும் இரவுமாகத் தலைமகன் குறியிடம் போந்து தலைமகளோடு பலகாலுங் கூட்டம் நிகழ்த்தி வந்தமையால் அவன்றன் மறை வொழுக்கம் வெளிப்பட்டு அலராக, அஃதறிந்த தலைமகன் தோழியின் விருப்பத்துக் கிணங்கச் சில காலம் அவ்வலரடங்குமாறு புணர்ச்சி நீங்கி ஒருவழி நிற்பானென்றும், அங்ஙனம் நீங்கி நிற்றல் 'ஒருவழித் தணத்தலா' மென்றும் அகப்பொருணூல்கள் கூறாநிற்கும். அலரறிந்த தலைமகன் இவ்வாறு ஒருவழித் தணந்து நில்லானாயின் அவன் தன் தலைவியை ஆங்கு நின்றும் பெயர்த்துத் தோழியின் உதவியைக் கொண்டு யார்க்குந் தெரியாமல் நள்ளிராப் போது பார்த்துத் தன் மனையிடத்துக்கு உடன் கூட்டிக்கொண்டு செல்வான். இங்ஙனமவன் செல்லுமாறு 'உடன் போக்கு' எனப்படும். இவ்வுடன் போக்கும் அவனுக்கு நிகழாதாயின், தோழியினால் அவன் வரைவு முடுக்கப்பட்டுத் திருமணஞ் செய்துகொள்வான். இதுவே 'வரைந்து கோட' லென்பது. எனவே இராக்குறி நிகழ்ந்த பின்னர் 'ஒருவழித் தணத்தல்' 'உடன் போக்கு' 'வரைந்து கோடல்' என்னும் இம்மூன்றனுள்ளும் ஏதானுமொன்று தலைவற்கு நிகழுமென்று கொள்ளப்படும். ஆசிரியர் பேராசிரியரும் இவ்வுண்மையைத் திருக்கோவையாருரையிலே 'ஒருவழித் ...ந்தல், உடன்கொண்டுபோதல், தோழியான் வரைவு முடுக்கப் ...ங்கலம் விடுத்து வரைந்து கோடல் இம்மூன்றினுளொன்று ‡ யென்று உரைத்தனர்.

குறி நிகழ்ச்சிக்குப் பின் ஊரிலே அலர் வெளிப்பட்ட ...லவன் தோழியின்வாய்க் கேட்ட உடனேயே அவன் தன் திருமணஞ் செய்துகொள்ளல் முறை. அது செய்யானாகு ஒருவழித் தணத்தலாவது உடன் போக்காவது நிகழு ...ண்டனுள்ளும் உடன் போக்கென்பது தலைமகன் தன் ...மணஞ் செய்துகொள்ளாமலேயே அவளை ஊரவர்

...ரி, ௧௬; † அ. ப. உ. மேற்கோள்.
...ழித் தணத்தல்.

அலர்மொழிக்கு அஞ்சிய தோழியினால் வற்புறுத்தப்பட்டுத் தன்னூர்க்கு உடனழைத்துச் செல்வதாகும். எனவே தலைவனுக்கு இவ் வுடன்போக் கென்பதே ஒருவகையான திருமண நிகழ்ச்சியாயிற்று. திருமணமென்பது தலைவனுந் தலைவியுந் தமக்குண் மறைவாய்க் காதலித்து வந்த உண்மையை வெளிப்படையான ஒருவகை நிகழ்ச்சி நன் முறையினால்எல்லார்க்குந் தெரியச்செய்தலாகும். அங்ஙனமே இவ் வுடன்போக் கென்பதும் இன்னானை இன்னாள் காதலித்தனள் என்பதை வெளிப்படுத்துகின்றமையின், இதுவும் ஒருவகைத் திருமணமேயாகும்.இங்ஙனம்இவ் வுடன் போக் கென்பதே ஒரு திருமண நிகழ்ச்சியாய் முடிந்தமையாற்றான் அகப் பொருளாசிரியன்மார் இதனைக் கற்பியலுட்படுத்து அங்கங்கும் உரைப் பாராயினரென்க. ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தும் அஃதாதல் 'கரணத்தி னமைந்து முடிந்த காலை' * யென்றவரியற்றிய கற்பியனூற் பாவினாலும் வெளிப்படும். இவரோ டொப்பவே ஆசிரியர் நக்கீரனாரும் இவ் வுடன் போக்கு நிகழ்ச்சியைப்பற்றிக் கூறவந்த விடத்து,

'இனித் தலைமகளை வரைந்தெய்தினானல்லன்; அறத்தொடு நின்ற வாறே பிரிந்தான்; ஆகலான் அன்னாள் கற்பினாளோ களவினாளோ யென்ற மாணுக்கற்கு இவள் கற்பினாளே யெனப்படும்.'† என்று தெளியக்கூறித் தடைவிடைகளான் நன்கு விளக்கினார். 'கற்பிய' லென்பது தலைவன் தலைவியர் திருமணஞ் செய்துகொண்ட பின்னர் அவர்தாம் நெஞ்சொத்து ஒழுகும் ஒழுக்கமாதலின், அவ்வகையதான கற்பிய லொழுக்கத்தை அத் தலைவன் தலைவியர்க்கு உடன்போக்கு நிகழ்ந்த அத்துணையானே ஆசிரியன்மார் கொள்வாராயின், அவ்வுடன்போக் கென்பதுந் திருமண மென்பதும் ஒன்றேயாமென்பது செவ்விதின் தெளியப்படுகின்றதன்றே? எனவே உடன் போகிய தலைவன் தலைவியர்க்கு அவ் வுடன்போக்கினும் வேறாகத் திருமண மென்ப தொன்று நிகழற்பாலதான கட்டாயம் முதன்மையில்லை யென்பதும் உடன் தெளியப்படும். இதனை, 'வரைவாக உடன்போக்காக ஒன்று வேண்டிய தலைமகளுந் தோழியும் அவ்வலரை யவன்றனக் கறிவுறுத்தலுமாம்.' என்று ஆசிரியர் பரிமேலழகர் கூறுகின்ற உரையிலும் நுண்ணுணர்ந்து பின்னுந் தெளியப்படும்.‡ மறைந்த நிலையில் நிகழ்த்திவந்த களவொழுக்கம் அலராகப் பிறர்க்கு வெளிப்பட்டுவிட்ட அந்த நிலையே கற்பியற் பகுதிக்குத் தொடக்கமாம் என்பது பட "வெளிப்படைதானே கற்பு"$ என்று ஆசிரியர் தொல்காப்பியனார் நிறுத்து நிறுவிய நூற்பாக் கூற்றும் இதனை நன்கு வற்புறுத்தாநிற்கும்.

இனி அலர் வெளிப்பட்டமையைத் தோழி கூறி இவ் வுடன்போக்குக்குந் தன்னை வலித்தபோது தலைமகன், உடன்போக்கு முறை அத்துணை முறைமையன்றென்று மறுக்கின்றமை,

"உடன்சேறல் செய்கையொ டன்னவை பிறவு
மடம்பட வந்த தோழிக் கண்ணும்"*

என்னுந் தொல்காப்பியர் நூற்பாவானும்,

---

* தொல், கற்பு, ௧. † இறைய, உ௩.

$,, கள, ௨௰. ‡ திருக்குறள், ௧௧௩௰-ம் அதி. விளக்கம்

'உடன்கொண்டு சென்மினெனத் தோழி கூறியது கேட்ட தலைவன் இவளை உடன்கொண்டு போதல் எல்லாவாற்றானும் முறைமையன்றென்று தோழிக்குக் கூறுவன'*

என்னும் நச்சினார்க்கினியர் உரையானும் நன்கு தெளியப்படுகின்றமையால், தலைவனுக்கு அவ்வுடன்போக்கு நிகழ்ச்சியில் எண்ணமும் விருப்பமுமில்லை யென்பது வெளிப்படும். மேலும், தலைவியை உடன் கூட்டிச் செல்லல் வேண்டுமென்ற தோழியை 'மடம்பட வந்த தோழி' என்னுஞ் சொற்றொடரால், 'அறியா' ளென்று தொல்காப்பியனார்।மேல் நூற்பாவிற் குறித்துரைக்கின்றமையாலும், இதனை ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'உடன்கொண்டு போதன் முறைமையன் றென்று அறியாமற் கூறலின், மடம்பட வென்றார்' என்று எடுத்துக் கூறுகின்றமையாலும் இவ் வுடன் போக்கு நிகழ்ச்சி அத்துணைத் தகவுடைய தன்றென்பதும் பெறப்படுகின்றது. அற்றன்று, ஈங்கு உடன் போக்கு முறைமையன்றென்று உரை கூறிய ஆசிரியர் நச்சினார்க்கினியரே அகத்திணையியலில்,

'அறநெறி இதுவெனத் தெளிந்த என் மகளென்று தாய் கூறவே உடன்போக்குத் தருமமென்று மகிழ்ந்துகூறி அங்ஙனங் கூட்டிய நல்வினையைத் தன் நெஞ்சிற்கு விளக்கிப் புலம்பியவாறு காண்க'† என்றும்,

'தந்தை தன்னையர் இஃதறனென்னாது தீங்குசெய்கின்றாரோ என்று அஞ்சும் அச்சமுமென'† என்றும் ஒரு நூற்பாவுரையிற் கூறுகின்றமையாலும், இங்ஙன மிவர் கூறுமாறே,

"மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலு
முயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி இனிய வாகுக தில்ல
வறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய கானே"‡

என்று ஐங்குறுநூறும் உரைக்கின்றமையாலும் உடன்போக் கென்பது அறநெறியே யாகுமெனின், அறியாது கூறினாய்; ஈங்குக் கூறிய நச்சினார்க்கினிய ருரையும்,ஐங்குறுநூற்றுச் செய்யுளும் உடன்போகிய தலைவியின் தாயினது கூற்றாக வருதலானும், அவளும் தன் புதல்வியின் செய்கையையே கூறுகின்றமையாலும், புதல்வியாவாரெல்லாரும் தனக்குரிய மணாளனை இயற்கைக் களவுவழியில் நின்று யார்க்குந் தெரியாது சென்று கூடுதற்குக் கடமைப்பட்டிருக்கின்றன ராதலானும், களவொழுக்கத்தினாலே தனக்கு மணாளனென்று துணிந்து கொண்டபிறகு அவன் இன்பத்திலேயே கருத்துவைத்து அவனைப் பிரியாதுறைதலும், அவன் அலர் மிகுந்து பிரிய நேர்ந்துழி அவனையே பின்பற்றிச் சேறலுந் தலைவியெனப்படுவோட்கு உரியதொன் றாதலானும் மேற்போந்த நூற்சான்றுகளால் அறநெறியெனப் பெறப்பட்டது களவொழுக்கமாகுமே யன்றி உடன்போக் காகாதென்று உணர்ந்து கொள்க. ஆகவே இவ்வாறெல்லாம் உடன் போக்கு நிகழ்ச்சி தலைமக

---

* தொல், கற்பு, ௯ † தொல், அகத்திணை, ௩௧
‡ ஐங்குறு, மகட்போக்கியவழித் தாயிரங்கு பத்து, ௧.

னுக்கு அறநெறியாகாதென்று பேராசிரியன்மாரால் ஒதுக்கப்படுகின்ற மையாலும், அதனை அத் தலைமகனுந் தானே யறிந்து அது செய்வ லென்று வலித்த தோழியையும் மறுத்து அருவருக்கின்றானாதலாலும், தோழியை மறுப்பதோ டமையாமல், அத்தோழியைப்போலவே அவள் உரைகேட்டுத் தன்னைக் குறையிரந்து வேண்டிய தன் தலைவியையும்,

> ''எல்வளை யெம்மொடு நீவரின் யாழநின்
> மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
> அல்லிசே ராயிதழ் அரக்குத்தோய்ந் தவைபோலக்
> கல்லுறின் அவ்வடி கறுக்குந வல்லவோ''*

என்று 'பாலை நிலத்தின் பருக்கைக் கற்கள் நின் சிறு மலரடியைச் சிவக் கச்செய்யு' மென நீரில்லாத ஆற்றிடைக் கொடுமை கூறி உடன்போக்கு மறுக்கின்றானாதலாலும் அவ் வுடன்போக்கென்பது தலைமகனுக்குப் பெரும்பாலும் நிகழமாட்டாதென் றறிதல்வேண்டும். ஆகவேதான் அலர்வெளிப்பட்டுத் தோழி அறத்தொடுபட்டதன் பின்னர்த் தலைவ னுக்கு நிகழு நிலைகளைக் கூறவந்த

> ''பட்ட பின்றை வரையாக் கிழவன்
> நெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிதலும்
> பொருள்வயிற் பிரியா தொருவழித் தணததலும்
> புரைவ தென்ப கற்பா லான''†

என்னும் இறையனாரகப்பொருள் நூற்பா, 'ஒருவழித் தணத்தல்' 'உடன் போக்கு' 'வரைந்துகோடல்' என்று இராக்குறி நிகழ்ச்சிக்குப் பின் னர்த் தலைவனுக்கு நிகழு நிலையவாயிருக்கும் மூன்றனுள்ளும் 'உடன் போக்'கென்பதை ஒரு முதன்மையா வெடுத்துக் கூறாமல், ஒருவழித் தணத்தலும், வரைந்துகோடற் கேதுவாகிய பொருள்வயிற் பிரிதலு மான ஏனை யிரண்டனையும்மட்டும் எடுத்துக் கூறுவதாயிற்றென்க. இங் ஙனமே அதன் உரையாசிரியரும் 'வெளிப்பட்ட பின்றையும் உரிய ளௌவி'‡ என்னும் அதன் வேறொரு நூற்பா உரையில், 'உம்மை யால் உடன்போக்கும் உரித்தாமாறு' என்று அவ் வுடன் போக்கினை யொரு முதன்மைப் பொருளாக எடாது உம்மையினாற் றழுவினமையுங் காண்க. அங்ஙனமானால் அகப்பொரு ணூல்களெல்லாம் ஒருவழித் தணத்தலைப்பற்றி மிகச் சிறுபான்மையாகவும், இவ் வுடன்போக்கினைப் பற்றி மட்டும் மிகப் பெரும்பான்மையாகவும் உரைதருதல் என்னையோ வெனின், நன்கு வினாயினாய், ஒருவழித் தணத்தலைப்பற்றிய துறைகளும், துறைச்செய்திகளும் மிகக் குறைந்தனவாக, உடன்போக்கைப் பற்றிய துறைகளுந் துறைச் செய்திகளும் மிகப் பெருகியவாதால், அம்முறையே பற்றி அகப்பொருணூல்களில் ஒருவழித்தணத்தல் மிகச் சிறுபான்மை யாகவும் உடன்போக்கு மிகப் பெருபான்மையாகவுங் காணப்படுதல் கொண்டு, இவ்வாறு நூல்களிற் காணப்படுஞ் சிறுபான்மை பெருபான்

---

* கலி, ௧௫   † இறைய, ௨௯   ‡ இறைய, ௨௫

மைகட் சேறப, எடுத்துக்கொண்ட பொருள்களின் நன்மை தீமை களையும் முதன்மை கடைமைகளையுந் தேர்ந்து துணிதல் பொருந்துமோ வென்பது. எனவே இதுகாறுங் கூறியவாற்றால், இராக்குறி நிகழ்ச்சிக் குப்பின் அலரெழுந்தமை யறிந்த தலைமகன் ஆண்டும் வரைதல் தெளி யானாயின், அவற்கு 'ஒருவழித்தணத்தல்' நிகழ்வதே பெரும்பான்மையும் அறநெறியுமாமன்றி, உடன்போக்கு நிகழ்தல் அங்ஙனம் பெரும்பான்மை யும் அறநெறியு மாகாதென்பது தெற்றெனப் பெறப்படும்.

இனி இவ்வாறு முடிக்கப்பட்ட முடிபுக்குச் சான்றாய் நின்று வலிவு தருவதான வேறொன்றேதுவும் இறையனாரகப்பொரு ளுரையிற் கூறப்படு கின்றது. அது,

'இங்ஙனமே இவள் (தலைவன் உடன்பட்டது போலவே உடன் போக்கு) உடன்படும். உடன்பட்டது உணர்ந்து வைத்துத் (தோழி) தாயுழைச் செல்லும். தாயும் மகளது வேறுபாடு கண்டு உற்றதறியாது நற்றிறம் படர்ந்து செல்கின்ற காலமன்றே! ஆதலாற் கண்டவாறே, அன்னாய்! என் மகட்கு இவ்வேறுபாடு எற்றினானாயிற்று? எனக்குச் சொல்லா யென்னும்...(அதற்குத் தோழி) அறத்தொடு நிற்கும். நிற்கச், செவிலித்தாய் இன்புற்ற மனத்தளாய் என் மகள் பெரிது அறிவு உடை யளே காணென்று அவ்வாறு நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும். நற்றாயும் இன்புற்ற மனத்தளாய்த் தந்தைக்குந் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்கும். நிற்க, அவரும் அவளது அறிவும் ஆசாரமுங் கேட்டு இன்புற்ற மனத்தராய்ச் சொன்மறுத்துத் தலையிறைஞ்சி நிற்பர். இங்ஙனஞ்சென்று மாட்சிமைப்பட்டுக் காட்டுமேயெனின், பெரிதும் மாட்சிமைப்பட்டுக் காட்டிற்று. காட்ட இவள் நீர்இல் ஆற்றிடைப்போய் வருந்துங் துறை யென்னை யென்று தலைமகனைச் செல்வழுங்குவித்தும். இது கேட்ட தலைமகன் செலவழுங்கும். அழுங்க, நாளை நீ வரைந்து புகுத நினக்கு வரைவு மாட்சிமைப்படுமென்று தலைமகனைத் தவிர்த்துப் பெயர்ந்து தலை மகளுழை வந்து நிழலும் நீரும் உடையவாய்க் கானந் தண்ணியவாறற் சேறுமென்று உடன்போக்கு அழுங்குவித்த விடத்துத் தலைமகனும் அந் நாள் வரைவொடு விரைந்து புகுவானும். இது வெளிப்பட்ட பின்றைக் களவியும் உரியவாயினவாறு'* என்பது. அலரறிந்த தலைமகட்கு வேறு பாடென்பது எவ்வாற்றானும் விளைந்தே தீருதலானும், அதனை அவள் எவ்வளவுதான் உள்ளடக்கி வைத்திருந்தாளாயினும் அஃது எஞ்ஞான் றும் அவளைச் சூழ்ந்துகொண்டே யிருக்குஞ் செவிலித்தாய் முதலி யோர்க்கு என்றொரு நாளாவது எப்படியேனும் புலப்பட்டே யொழித லானும், அஃதவளுக்குப் புலப்பட்டொழியவே அப்புலப்பாடு காணுஞ் செவிலித்தாய் முதலியோர் கட்டாயம் அவள் பருவத்திற்கு ஐயுறாதிரா ராதலானும், ஐயுற்றவர் கட்டாயம் அவள் காதற்றோழியை வினவாது மிராராதலானும், வினவுவார்க்கு அத்தோழியாவாளும் உண்மையே பேசும்அறநெறி வழாதவளாதலின், அவள் தன் தலைவிக்கு நிகழ்ந்த வேறு பாட்டுண்மையை எவ்வகையிலேனும் எடுத்துரைப்பதே செய்வளாத லானும், எனவே இவ்வுண்மையை வாயில் வழியே புணர்ந்த தலைவியின்

---

* இறைய. ௨௩

பெற்றோரும் அவளை அவள் காதற்றலைவனுக்கு எவ்வாற்றானுந் திருமண வினையைச் செய்விக்கவே முயல்வராதலானும் தலைமகன் உடன் போக்கு நிகழ்ச்சியை மேற்கொள்ளுதற்குச் சிறிதுமே இடமில்லையென் பது எட்டுணையும் ஐயுறவின்றித் துணியப்படுகின்றது. தலைவியின் பெற் றோர் முதலியோரும், தலைவனும், தலைவிதோழியரும் நுண்ணுணர்வு சாலாரா யிருந்தவிடத்துத்தான் எங்கோ மிகச் சிறுபான்மையேயாய் உடன்போக்கு நிகழுமென்க. எனவே, அலருணர்ந்த தலைமகற்கு உடன் போக்கு இந்நிலையேயாய் மேற்கொள்ளப்படாது கழிந்தொழிய இனியவ ளைற் கட்டாயமாய் மேற்கொள்ளற்பாலதாயுள்ளது 'ஒருவழித் தணத் த'லாமன்றோ?

இனி இவ் 'வொருவழித் தணத்தல்' அவனுக்கு அறநெறியேயாய் நின்று நன்மை பயக்குமாறும் ஆராயற்பாலது. ஊரிலே அலர் மிகுந்த தென்ற அளவானே அவ் வலரடங்குமாறு தலைவன் ஒருவழித் தணந்து நிற்கின்றா னென்பதொன்றே அஃது அறநெறியாகு மென்பதனை நன்கு விளங்கவைக்கும். மேலும், 'நிழலருமை வெயிலில் தெரியு'மென் னும் பழமொழியினை யொப்ப, உழுவலன்பு பாராட்டி உலவா வின்பந் தருந் தன் தலைவியாவாளின் காதற்கூட்டமென்மை, அதனை எளிதிற் பெறமாட்டாது தனித்திருந்து வருந்துந் தலைமகனொருவனுக்கே செவ்வையாய்ப் புலப்பட்டு விளங்கும். இன்னும் அலரெழுந்த தென்று கேட்டுத் தன் தலைவியைக் குறியிடம் பெற்றுக் கூடல் பெறாத தலைவனோ வெனின், இனித் திருமணஞ் செய்துகொள்ளு நிலையினனாய் இருக்கின் றான். எனவே அவன் தனது திருமண நிகழ்ச்சியினாற் பெறப்போவ தோரின்பத்தைச் சிறப்பப்பெறல் வேண்டுகின்றானாதலின், அவனதனைப் பெறுதற்கு முன் அத்தலைவியைக் கூடல் பெறானாய்ப் பிரிந்து வருந்து நிலையினனாயும் இருக்கின்றான். தலைவன் இவ்வாறு பிரிந்து வருந்த வருந்த அவன்றன் உள்ளம் துன்ப வண்ணமாய் மாறிவிடுதலின், அதன் பின் அவன் அத்துன்பத்துக்கு மாறான இன்பமென்பதில் ஒரு சிறிதே தோன்றப் பெறுவனாயினும் அதனை மிகப்பேரின்பமாய் நுகர்ந்து பார்க் குஞ் சுவைத்த நிலை அவனுக்கு உண்டாகின்றது. இதனையே நாயனார் காதன் மக்களின் காதலுணர்ச்சியைப் பயிரெனக் கொண்டு, அவ்வுணர்ச் சியை அதற்குரியாரொடு கூடி நுகர்தற்குப் பேரிடையூறுகளாயிருக்கும் ஊரவர் அலர் மொழியையுந் தமர்களின் கொடு மொழியையும் முறையே அவ்வுணர்ச்சிப் பயிரை வளர்க்கும் எருவாகவும் நீராகவும் எடுத்துக் காட்டி

"ஊரவர் கௌவை யெருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்"*

என்று உரைத்தார். காதலுணர்ச்சியை நுகர்தற்கு இடையூறாயிருக்கும் அலர் பிரிவு முதலியவைகளால்தாம், அவ்வுணர்ச்சி மேன்மேலும் பெருக்கெடுக்கின்றதென்னும் உண்மையை வேறோ வலியுறுத்துவதாயிலாக வும் வள்ளுவனார்,

* திருக்குறள், அலரறிவுறுத்தல், எ.

> "செய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
> காம நுதுப்பே மெனல்"*

என்று விளக்கினார். பொருளுந் திறமும் வாய்ந்த இவ்விரண்டு வளவிய குறட்பாக்களினாலும் பிரிவு முதலியவைகள் எவ்வளவுக் கெவ்வளவு மிகுதியாய் உண்டாகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு தலைவன் தலைவியர்க்கு அன்பும் வேட்கையும் முன்னிலையினும் பெருகி யுண்டாமென் பது நன்கு விளங்கா நிற்கின்றது. ஆதலால், திருமண இன்பம் சிறந்து தோன்றல் வேண்டுமானால், அத்திருமணத்துக்கு முன்னர்த் தலைவனுந் தலைவியும் அலர் ஏதுவாக ஒருவழித் தணந்து நிற்றலும் முறையேயாகின் றது. இனி அவர்கட்கு அவ்வாறு இடையீடு நேர்தல் இயல்பு மாகுமென் பது கருத்திருத்தற்பாலது.

இனிக் களவுகாலத்துத் தலைமகன் இவ்வாறு ஒருவழித் தணந்து நிற்கின்றமையால் அவனாற் புணர்ச்சிக்கு இடையீடு விளைவதாக, இறை யனாரகப்பொருள்

> 'களவினுள் தவிர்ச்சி கிழவோற்கு இல்லை'†

யென்று கூறியதன் கருத்துத்தான் யாதோவெனின், தலைவன் ஒருவழித் தணந்து நிற்கின்றமைக்கு, ஊரவர் அலர்மொழிக்கஞ்சிக் குறியிடத் துக்கு வரமாட்டாத தலைவியே ஏதுவாவதன்றித் தலைவன் ஏதுவாவ தில்லை. தோழியுந் தலைவியுங் குறியிடத்துக்கு வரக்கூடுமானால், தலைவன் யாதொரு தடையும் அஞ்சாமையும் இல்லானாய்க் கட்டாயங் களவு நிகழ்த்திக்கொண்டேயிருப்பான். திருமணம் முடியுமளவும் உள்ள களவு காலத்தில் அவன் எஞ்ஞான்றும் பிரிதலே செய்யான். இதனையே ஆசிரி யர் தொல்காப்பியனாரும்,

> "வெளிப்படை தானே கற்பினோ டொப்பினும்
> ஞாங் ற் கிளந்த மூன்று பொருளாக
> வரையாது பிரிதல் கிழவோற் கில்லை‡"

என்று திட்டமாய் எடுத்துக் கூறினர். ஆகவே தலைவன் களவு காலத் தில் ஒருவழிந்தணந்து நின்றமை தலைவியினாலேயாமல்லது தலைவனா லன்று. எனவே, 'களவினுள் தவிர்ச்சி கிழவோற்கு இல்லை' யென்னும் இஎ னாரகப்பொருள் நூற்பாவின் கருத்து, 'களவொழுக்கம் நிகழும் வ ் இடையீடென்பது தலைமகன் ஏதுவாக நிகழ்தலில்லை; ஆனால் ஏதுவாக நிகழ்தலுண்டு' என்பதேயாமென் றறிதல்வேண்டும்.

இக்கூற்றுகளால், அலரெழுந்த காலத்தில் வரைந்து கோட வற்கு நிகழு நிலையவாயுள்ள 'ஒருவழித்தணத்தல்' 'உடன் னும் இரண்டனுள்ளும் 'ஒருவழித்தணத்த' லென்பதே அற ன்றோர்தம் புலனெறி வழக்கிற்கும், முறைக்கும், இயல் ரதவகையில் அவற்கு நிகழ்தற் சிறப்புடையதென்பது ங்கிற்று.

லரறி, ௮ † இறைய, ௩௩ ‡ தொல், களவு, ௩௰

இனி, ஒருவழித்தணந்து தன் அரண்மனைக்கண் தனியிருந்துறை யுந் தலைவன், இப்பிரிவென்பது அவற்குப் பெருங்கொடியதாதலின் மிகவும் வருந்து நிலையினனாய்த், தன் தலைவியையும் அவளை எதோரிடையூன்றிக் கூடுதற்காக வழியினையும் நினைந்த வண்ணமாய் இருப்பான். தலைவி யின் கூட்டச் சிறப்பினை நினைந்து பார்க்குங்கால் அவனுக்கு ஆராத பேரன்பு கொப்புளித்தெழும். இனி அவளை அலர்முதலான இடையூறு களின்றிக் கூடு நெறியினை நினைந்து பார்க்குங்கால் ஆராய்ச்சியுண்டாக, அதன் வழி அறிவும் விரிவடையும். இவ்வாறே தலைவிக்குங் கொள்க. தலைவனுக்குத் தலைவியும், தலைவிக்குத் தலைவனும் நீங்கலாக அவர்கட்கு உலகத்திலுள்ள வேறு எந்தப் பொருளையே யெடுத்துக்கொண்டாலும் இத்துணைப்பேரன்பும் பேரறிவும் விளைந்திடுமென்று கருதுதற்கில்லை. ஆகவேதான் இக் காதற் களவொழுக்கமும், அதன்முகத்தால் எய்தப் பெறுங் கற்பு வாழ்க்கையும் இறைவனடியினை அணைதற்குரிய அறிவு அன்பு இன்பங்களைப் பயக்கும் இணையற்ற கருவிகளாய் மக்கட்கு அமைந்திருக்கின்றனவென்பது. தலைவன் தலைவியர்க்கு முதல் நிகழ்ச்சி யாய் நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சியிலிருந்து இவ் வொருவழித் தணத்தல்காறும் பகற்குறி இராக்குறி முதலியவற்றால் நேர்ந்த பிரிவு களைவிட இவ் வொருவழித் தணத்தலாலுண்டான பிரிவே அன்பையும் அறிவையுந் தக்காங்கு நிரம்ப விளைத்தற்குரிய அருமைக் கருவியாயுள்ள தென்பது கருத்திருத்தற்பாலது. வரைந்து கோடலை எல்லையாக உடைய களவொழுக்கம் முழுமையிலுமே இவ் வொருவழித்தணத்தலென்பது தான் தக்க பயன்தரவல்ல உண்மைப்பிரிவிலக்கணத்தை யுடையதாகும். ஏனென்றால் திருமணத்துக்கு முன்னால் நிகழுவதாயுள்ள 'வரைபொருட் பிரிதலெனும்' மற்றொருபிரிவு 'திருமணம்செய்துகொள்ளப்போகின்றோம்' என்னுந் திருமண நோக்கத்துடன் தலைவன் தலைவியர்க்கு நிகழ்தலின், அஃதவர்கட்கு ஒருவகையான அமைதியையே தந்தொழிவதாமன்றி, இவ் வொருவழித் தணத்தலைப்போல முன்னாற் றுன்பமும் பின்னாலதன் பய னான இன்பமுந் தருதற்குரிய பேரன்பும் பேராராய்ச்சியும் பேரறிவும் முறைமுறையே விளைக்கும் அத்துணை உண்மையான பிரிவிலக்கணத்தை யுடையதன்றாதலினென்க.

இங்ஙனமெல்லாந் தலைவன் தன் தலைவியைநீங்கித் தனியேயிருந்து, இரங் கத்தக்கவாறு வருந்து நிலைமை அவனுக்கோர் எய்ப்பில் வைப்பாயிற்று. இவ்வாறே தலைவியும் அந்நேரத்திற் றனியிருந்து வருந்திப் பின் வருவ தொரு பேரின்பத்தை நுகர்தற்குத் தக்கவாறு தனது உணர்ச்சியை ஒழுங்குசெய்துகொள்வாளாகின்றனள். தலைவன் ஒருவழித்தணந்திருந்த போது தலைவி வருந்து நிலைகளை யெல்லாந் திருச்சிற்றம்பலக்கோவை யாசிரியர்மிகவும்விளக்கமாக அருளிச்செய்கின்றனர். 'அகன்றணைவுகூறல்' 'கடலொடு வரவு கேட்டல்' 'கடலொடு புலத்தல்' 'அன்னமோடாய்த' து. 'தேர்வழி நோக்கிக் கடலொடு கூறல்' 'கூடலிழைத்தல்' 'சுடரொ இரு புலம்பல்' 'பொழுதுகண்டு மயங்கல்' 'பறவையொடு வருந்தல்' ர்பாரா யத்தோடு பரிவுற்றுரைத்தல்' 'அன்னமோடழிதல்' 'வரவுணர் ம். ஆனால் தல்' 'வருத்த மிகுதி கூறல்' என்று பதின்மூன்று துறை மிகுதியாய் கோவையாரில் ஒரு வழித்தணத்தலுக்குக் கூறப்படுகின்றன

ஊரவர் அலர் கண்ட உடனே இராக்குறிப்போது த?

'நீங்கள் சில காலந் தலைவியை அகன்று பின்னர் அணை

கூறலாயுள்ள ‘அகன்றணைவு கூற’லும், தலைவன் ஒருவழித் தணந்து வந்த பிறகு அவன் வரவினை யுணர்ந்து தலைவியின் நிலையினை அவனுக்கு நிலவுக்குரைப்பாள் போல உரைத்தலான ‘வரவுணர்ந்துரைத்த’லும், பின்னர்த் தணந்து வந்த தலைவனை நேராயெதிர்ப்பட்டுத் தலைவியின் ‘வருத்த மிகுதிகூற’லுந் தோழியின் கூற்றுக்களாகும். எனவே இம்மூன்று துறைகளும் நீங்கலாகக் ‘கடலொடு வரவு கேட்டல்’ முதலான ஏனைப் பத்துத்துறைகளும் ஒருவழித் தணத்தலின்கண் தலைவி யெய்திய உள்ள நிலையினை நன்கு புலப்படுத்துவனவேயாகும். அவற்றுள் ஒன்றுமட்டும் இங்குக் குறிக்கப்படுஞ் சிறப்புடையது. அது ‘கூட லிழைத்த’ லென்பது. அதாவது தலைவன் பிரிவினுக்கு ஆற்றாது வருந்துந் தலைவி அவன் வருகின்ற நாளை அறிய நினைந்து அதற்கொரு குறிபார்ப்பாள். அதனைப் பிறரிடம் பார்ப்பாளாயின் தனது களவொழுக்கத்தைத்தானே புலப்படுத்தினளாம். அன்றித் தன் தோழியின் மாட்டுப் பார்ப்பாளாயின், அவள் தன் தலைவியின் ஆற்றாமையைத் தணித்தற்காக உண்மையல்லாத வொன்றையுங் கூறிவிடுவள். ஆதலால் தலைவி தானே அக்குறியினைப் பார்க்க எண்ணித் தன் தோழியோடு விளையாடுமிடஞ் சென்று ஆங்கோர் பாங்கர், மணலாயுள்ள இடத்தை மேடுபள்ள மில்லாமல் நேராய்ப் பரப்பி அம்மணற் பரப்பின் மேலே தான் இருந்து கொண்டு தன்னைச்சுற்றி யொரு கோடு கிழித்து முதலில் ஒரு பெரிய வட்டம் அமைப்பள். அதன் பிறகு தலைவி தன் கண்களைக் கட்டுவித்துக்கொண்டு தனக்கெதிரிலுள்ள அப்பெரிய வட்டக்கோட்டில் ஓரிடத்தைக் குறியிடமாக வைத்து அங்கிருந்து துவங்கி அவ்வட்டக்கோட்டின் மேலேயே அக்கோடு முழுமையுஞ் சிறு சிறு வட்டங்களாக ஒன்றை யொன்று தொடுமாறும், முதலில் துவங்கிய குறியிடத்தில் வந்து முடியுமாறும் கோடு கிழித்துக்கொண்டே வருவாள். துவங்கிய இடத்தில் அச்சிறு வட்டத்தொடர் வந்து கூடாமற் பிறழ்ந்து விட்டால், எப்படியானும் அது தலைக்கூடுமாறு மீண்டுந் திருத்தித் திருத்திச் செய்வாள். இங்ஙனமாக முதலுங் கடையுங் கூடுமாறு செய்தலைத்தான் ‘கூடலிழைத்த’ லென்ப. இக்கூடல் இழைத்த பின்பு, தலைவி தன் கண்களைத் திறந்து பார்த்துஅப் பெருவட்டக்கோட்டின் மேலுள்ள சிறிய சுழிகளை எண்ணிப் பார்ப்பாள். அச் சுழிகள் இரட்டைப்படையாய் வந்தால் தலைவன் அன்று வருவானென்பதும், ஒற்றைப்படையாக வந்தால் அன்று வரானென்பதுங் கருத்து. அதற்காக, முதலில் எண்ணிப்பார்க்கும்போது சுழிகள் ஒற்றைப்படையாக வந்து விட்டால், தலைவி தான் எண்ணியதுதான் ஒரு கால் தவறுயிற்றோ வென்று மீண்டும் மீண்டும் எண்ணுவாள். இரண்டு மூன்று முறை எண்ணிப்பார்த்தும் அவ்வொற்றைப்படை யெண்ணே வருமானல்அவள் நெஞ்சம் நைந்து வருந்துவாள். இதனையே,

“ஆழி திருத்திச் சுழிக்கணக் கோதி நையாமலைய
வாழி திருத்தித் தரக்கிற்றி யோவுள்ளம் வள்ளலையே”*

கோவையாசிரியரும்,

‘—லை யிழைத்துச் சுழிக்கணக்கைச் சொல்லி யான் வருந்தா
று அதன் உரையாசிரியர் பேராசிரியரும் தெளியக் கூறினர்.
பிரிந்த தலைவியர்க்கு இவ்வழக்க முண்மையை,

---

* க அசு.

"வீங்கிழை நெகிழ விம்ம வீங்கே
யெறிகட் பேதுற லாய்கோ டிட்டு
வாய பற்றுநின் படரடெ ணீங்க
வருவே மென்ற பருவ முதுக்காண்"*

என்று குறுந்தொகைச் செய்யுளும் எடுத்துக் கூறுதல் காண்க.

வெற்றிக்கு வழி

[M. P. S. வேலாயுதப் பிள்ளையவர்கள்]

துன்பம், கவலை, ஆகியவைகளை எவ்வாறு ஒழித்து வெற்றி பெறுவது என்பதே வாழ்க்கையின் தன்மை நோக்கமாகும். அது மக்கட் கூட்டத்தின் ஒரு பிரிவை மட்டும் பாதிப்பதில்லை. மக்கட்கூட்டம் அனைத்தும் இவ்வாறுதான் புலம்பிக்கொண்டிருக்கிறது. அரியணையில் வீற்றிருக்கும் அரசனும் தெருவிலலையும் பிச்சைக்காரனும், குடிசைகளில் உறங்கும் ஏழை மக்களும், முற்றுந்துறந்த முனிவர்களும் பாவஞ்செய்து உழல்பவர்களும், கல்விச்செல்வம் குறைவறப்பெற்றவர்களும், அறிவீனர்களும் இக்கேள்வியையே பன்முறை கேட்டு வருகிறார்கள்.

புன் சிரிப்பும் கண்ணீரும், இன்பமும் துன்பமும், இன்பவாழ்வும் வருத்தமும், புகழ்ச்சியும் இகழ்ச்சியும் மாறி மாறி நம்மை அங்கு மிங்கும் ஆட்டியசைத்துக்கொண்டிருக்கவேதான், நாம் வாழ்நாளைத் தொடங்குகிறோம். எக்காலமும் இன்பமாயிருக்க எல்லாரும் கொடுத்துவைக்கவில்லை.

நாம் உண்மையான நோக்கத்துடன் ஒரு வேலையைச்செய்ய இறங்குகிறோம். பலதடவைகளில் நம் நோக்கங்கள் தவறாக நினைக்கப்படுகின்றன. நாம் குற்றமில்லாதவர்களாயிருப்பினும் பெரும்பாலுந் துன்புறுத்தப்படுகிறோம். நாம் முழுமனத்துடனும் நமது கடமைகளைச் செய்கிறோம். ஆனால் நமக்குக் கைம்மாறாகத் துன்பமுங் கவலையுந்தாம் கிடைக்கின்றன.

நாம் அப்போது என் செய்வது? நாம் கிடைப்பதைப் பெற்றுக்கொண்டு அமைதியடைந்து, துன்பப்பட்டுக்கொண்டே போவதா? அல்லது நமது கடமைகளும், செயல்களும் துன்பத்திலாழ்த்திவிடுகின்றனவேயென்று, அவற்றை யாற்றுவதினின்றும் ஒழிந்து துறவியாய் வாழ்வதா?

முதலில், நமது அறியாமையாற்றான் நாம் பெரிதும் துன்பமடைகிறோமென்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் எதனை எதிர்பார்க்கலாம், எதனை எதிர் பார்க்கலாகாது என்பதைத்தெரிந்து கொள்ளாவிட்டால் பிறர் என்ன செய்ய முடியும்? எப்போதும் புன்சிரிப்பையும், மகிழ்ச்சியையும், வெற்றியையும் எதிர்பார்த்தல் கூடாது. உலகம் மாறுபட்டவைகளாலேயே ஆக்கப்பட்டது. வாழ்க்கையின் இருபுறங்களையும் நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கவேண்டும். எதிர்பாராமல் நமக்குத் துன்பம் வருமாகில் நாம் மிகுதியாய் வருந்தநேரிடும். ஆனால் நாம் எதற்கும் தயாராயிருந்தால், துன்பகாலத்தில் நாம் மிகுதியாய் வருந்தாமல் இலகுவில் கடந்து விடுவோம்.

---

* குறுந், ௩௰௮.

இன்னும், நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும், ஒன்றுக் கொன்று பிரிக்கமுடியாமல் ஒன்றுபட்டிருப்பதை நாம் உணர மறந்து விடுகிறோம். நாம் ஒன்றை நுகர விரும்பினால், பிறி தொன்றையும் நுகரத் தயாராயிருக்க வேண்டும். அல்லது ஒன்றை யொழித்துவிட விரும்பினால், இரண்டையும் மறுத்துவிடத் தயாராயிருக்க வேண்டும். ஆகவே இரண்டையும் நுகரத் தயாராயிருக்க வேண்டும், அல்லது இரண் டையும் விட்டுவிட ஒத்துக்கொள்ள வேண்டும். இவ்விரண்டையும் ஏற்த் துக்கொள்வது முடியாவிடில், இவற்றை விட்டுவிடுவதும் முடியாது. உலகத்திலேயே இருந்து கொண்டு, உலகத்தோடு தொடர்புவைத்துக் கொண்டிருப்பவைகளை எப்படி விலக்கி வைக்க முடியும்?

இந்நிலைமையிலிருந்து வெளியேற வேண்டுமானால், ஒரே வழிதா னுண்டு. உலகத்தோடு ஒத்துவாழவும் வேண்டும், உலகத்துடன் பற்றுவைக்காமலும் வாழவேண்டும். எல்லா நிலைமைகளையும் வரவேற்கத் தயாராயிருப்போம், அவை நமது உயிரைப் பாதிக்க முடியா. ஆகவே எந்தத்தொண்டினையும் ஆற்ற ஊக்க மிழந்திருக்க வேண்டாம். எத் துணைத்துன்பமுங் கவலையும் நம்மை வாட்டி வதக்கிய போதினும், நாம் ஆற்றவேண்டிய வேலையைமட்டுங் குறைவறச் செய்து வருவோமாயின், அதுவே வெற்றிக்கு வழியாகும்.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம்

தமிழ்த் தேர்வு

முதல் வகுப்பு

தொடரெண்	பதிவெண்	பெயர் வகை
1	51	மு. அருளையரசு, c/o அ. துரைசாமி முதலியார், சில்லரைக் கடை, வேகம், ராணிப்பேட்டை, வடஆற்காடுஜில்லா. முதற்பரிசு :—ரூ 50 பெறத்தக்க தங் கப் பதக்கமும், தேர்ச்சியிதழும்.

இரண்டாம் வகுப்பு

தொடரெண்	பதிவெண்	பெயர் வகை
2	38	ப. மு. வேங்கடாசலம், ஜமக்காளத் தெரு, திருப்பத்தூர், வட ஆற்காடு ஜில்லா.

மூன்றாம் வகுப்பு

தொடரெண்	பதிவெண்	பெயர் வகை
3	53	சே.மா. கோதண்டராம முதலி,உபாத் தியாயர், போர்டு பாடசாலை, காமக் கூர், களம்பூர் P. O. ஆரணி.
4	37	கு. ஆறுமுக முதலி, ஐயம்பேட்டை, திருப்பத்தூர், வட ஆற்காடு ஜில்லா.
5	36	வாசுதேவ முதலி, ஜமக்காளத் தெரு, திருப்பத்தூர், வட ஆற்காடு ஜில்லா.

6	52	செ. யோகசுந்தரம், பூங்குளம், ஆலங்காயம் P.O. வாணியம்பாடி மார்க்கம், வட ஆற்காடு ஜில்லா.
7	35	K. நாகராஜ ராவ், சஞ்சீவராயர் சந்து, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.
8	54	A. நடேசப் பிள்ளை, தலைமையுபாத்தியாயர், போர்டு ஸ்கூல், மேல் நகர், கண்ணமங்கலம், வடஆற்காடு ஜில்லா.
9	62	V. கோவிந்தராஜு நாயக்கர், காட்டுக்காநல்லூர், கண்ணமங்கலம் P. O, வட ஆற்காடு ஜில்லா.
10	50	த. மாசிலாமணி, உபாத்தியாயர், கபோத பாடசாலை, தரிசனமலை, பாளையங்கோட்டை.
11	58	M. வரதராஜ நாயக்கர், குண்ணத்தூர், ஆரணி.
12	46	சி. மு. ஜெயராம் செட்டி, ஒண்டி வீதி, கொசப்பாளையம், ஆரணி.

இளந்தமிழ்ப் புலவர்

மூன்றும் வகுப்பு

1	45	ஆ. மதனபாண்டியன், சிவஞானபுரம், பாவூர்ச்சத்திரம் போஸ்டு, தென்காசித் தாலுக்கா, திருநெல்வேலி ஜில்லா.
2	40	யோ. தங்கசாமி பாண்டியன், குறும்பலாப்பேரி, பாவூர்ச்சத்திரம் போஸ்டு, தென்காசித் தாலுக்கா, திருநெல்வேலி ஜில்லா.

தேர்வுகளில் இரண்டாம் வகுப்பு மூன்றும் வகுப்புகளில் தேர்ச்சியுற்றிருப்பவர்கட்குத் தேர்ச்சியிதழ்மட்டும் வழங்கப்பெறும். விண்ணப்பித்தவர்களில் வந்தெழுதாதவர் ஒன்பதின்மர். மொத்தத்தில் 58⅓% தேர்ச்சியாயுள்ளது.

தெ. த. சங்கம், திருநெல்வேலி. } பு. சி. புன்னைவனநாதன், அமைச்சர்.

நவராத்திரி விரதம்.

சரசுவதிபூசை புரட்டாசிமீ 8உ ஞாயிற்றுக் கிழமையே சைவமக்கள் அநுட்டிக்கவேண்டும்.

ஐப்பசிமாதத்தில் அநுட்டிப்பது தேசத்துக்கு நாசம் உண்டாக்கும்.

சைவமதத்திற்கு விரோதமான சுமார்த்தப் பிராமணர்களுக்கே ஐப்பசி மாதமாகும்.

நவராத்திரி விரதம் பார்வதி தேவியாரைக் குறித்துப் புரட்டாசி மாதத்தில் அநுட்டிக்கப் பெறுவது. இதற்குப் பிரமாணங்கள் பின்வருவன:—

(1) யாமளதந்திரம்

"ததஸ்ச கன்னி யாமாசேது பூர்வபக்ஷே விசேஷத
பிரதமாயாம் சமாரப்ய நவம்யந்தம் பிரபூஜையேது"

(இதன் பொருள்:—கன்னியா மாதத்தில் பூர்வ பக்ஷத்தில் சிறப்பாகப் பிரதமையில்ஆரம்பித்து நவமி முடியப் பூசைசெய்ய வேண்டியது.)

(2) காமிகாகமம்

"உமாமகேசவர விரதம் கன்னியா சதுர்த்தசி
சிதப்பிரதம மாராப்ய நவப்யந்தம் உமாவிரதம்"

(இதன் பொருள் கன்னியா சதுர்த்தசியில் உமாமகேச்வர விரதம் செய்யத்தக்கது. அம்மாதத்தில் சுக்கில பிரதமையில் ஆரம்பித்து நவமி முடிய உமா விரதம் செய்யத்தக்கது.

(3) தேவி பிரதிஷ்டாவிதி என்ற நூலில் மகா நவமி பூசா விதியில்

"மாஸி பாத்திரபதே பக்ஷே சுக்லே பிரதி பதாதிகம்
நவம் யந்தம் விசேஷேண பூஜயித்வா மஹேஸ்வரீம்"

(இதன் பொருள் புரட்டாசி மாதத்தில் சுக்கில பிரதமை முதல் நவமி முடிய உமாதேவியாரைப் பூசிக்க வேண்டியது)

மேலே கண்ட பிரமாணங்களை ஆராய்வோமானால் நவராத்திரியென்பது கன்னியா மாதம் என்றும், பாத்திரபத மாதம் என்றும் பெயர் பெறும். புரட்டாசி மாதத்தில்அநுட்டிக்கத்தக்கது என்றும்,நவமியே மிகவும் முக்கியமானது என்றும் இப் பூசையைச் சிறப்பாகப் பிரதமை முதல் ஆரம்பிக்கவேண்டு மென்றும் தெரியவருகிறது. பிரதமை முதல் ஆரம்பித்துச் செய்ய இயலாதவர்கள் நவமி யன்று கட்டாயம் பூசை செய்யவேண்டியது இன்றியமையாதது. அன்றையத்தினம் மகா நவமி

யென்றும், சரசுவதிபூசை யென்றும், ஆயுத பூசையென்றும் சொல்லப் பெறும். ஆதலினாலே புரட்டாசி மாதத்தில் வரும் சுக்கிலபக்க நவமியே மகாநவமி யென்பதாகும். இது இந்த விபவ வருஷத்தில் புரட்டாசிமீ 8உ ஞாயிற்றுக்கிழமை யன்று வருகிறது. இவ்விரதம் ஆவணிமீ 31உ சனிக்கிழமை யன்று ஆரம்பிக்கப்பெறும்.

இவ்விரதத்தைப்பற்றிப் பூர்வகாரணாகமம் 127-வது படலத்தில்,

"அதாதஸ் சம்பிரவக்ஷயாமி நவராத்திரி விதிக்கிரமம்
ஆஸ்வயுக் சுக்லாமிபிரதிபந் நயம்யந்தகே"

என்று கூறப்பெற்றிருக்கிறது. இதில் ஆஸ்வையுக் என்பது சாந்திர மானப் பெயராக இருந்தாலும் அச்சாந்திரமாதம் பெரும்பாலும் வரும் சௌரமான மாதமாகிய புரட்டாசி மாதத்தையே உணர்த்தும். நிகமக் ஞான சிவாசாரிய சுவாமிகளும் சைவகாலவிவேக மென்ற ஆகமோக்த காலநிர்ணய நூலில்

"ஆகமங்களில் சாந்திரமானமாகச் சொல்லப்படும்
மாதங்களெல்லாம் சௌரமானமாகவே கொள்ளவேண்டும்"

என்று விதி இயற்றியிருக்கின்றார்கள். மேலும் இதே காமிகாகமத்தி லிருந்து நாம் மேலே எடுத்துக் காட்டியிருக்கும் வாக்கியத்திலே கன்னியா மாதத்தில் உமாவிரதமென்பது தெளிவாகக் காணப்படுகின்றது. கன்னி என்பது சௌரமானமாகிய புரட்டாசி மாதமென்பது யாவரும் நன்கறிந்ததே. சௌரமானமென்பது இது, சாந்திரமானமென்பது இது என்பதை விளக்க வந்த இடத்து உத்தரகாரணாகமம் 33-வது படலத்தில்

"சௌரமானே விரதம்குர்யாத் சாந்திரமானே நகாரயேத்
... ...
மேஷாதி ராசிமகநம்சௌரமா நம்பிரஸஸ்யதே"

என்று கூறுகிறது. (இதன்பொருள் சௌரமானத்தில் விரதம் செய்யத் தக்கது; சாந்திரமானத்தில் விரதம் செய்யக்கூடாது. சௌரமான மென்பது மேஷாதி ராசிகளில் சூரியன் சஞ்சரிப்பதால் ஏற்படும் மாதங்கள் எனப்பெறும் என்பது.) இதேகாமிகாகமம் நவராத்திரியைப்பற்றிச் சொல்லுமிடத்து

"சௌரமானே நகர்த்தவ்யம் நவராத்திரிம் விசேஷித:
சாந்திரமானே நகர்த்தவ்யம் கிருதஞ்சேது ராஷ்டிரநாசனம்"

என்று கூறுகின்றது. (இதன் பொருள் நவராத்திரி சௌரமானத்திற் சிறப்பாய்ச் செய்யத்தக்கது; சாந்திரமானத்திலே செய்யக்கூடாது. செய்வதால் தேசத்துக்கு நாசம் உண்டாகும் என்பது.)

மேலே காட்டிய பிரமாணங்களினாலே நவராத்திரி விரதம் எவ்வாற்றானும் புரட்டாசி மாதத்தில்தான் அநுட்டிக்கப்பெறுவது என்பது நிலை நாட்டப் பெற்றது. இதன்படி இம் மகாநவமி சரசுவதிபூசை விரதம் நிகழும் விபவ வருஷத்தில் புரட்டாசிமீ 8உ ஞாயிற்றுக்கிழமை வருகிறது. இவ்வாறே சைவப் பஞ்சாங்கத்து ஆசிரியர் திருவாளர் இ. மு.



சோழமன்னன் சாமரைவீசச் சே[illegible]கிழார் பெருமான்
யானைமீதில் உலாப் போ[illegible]தது.